219

# எங்கள் தமிழ் வாசகம்

## ஆறும் புத்தகம்

M. A. துரை அரங்கசாமி,
M.A., M.O.L.

R. சீனிவாசன், M.A.

விந்திய வெளியீடுகள்

அணா
15

TB
031,6
N51
139669.

# எங்கள் தமிழ் வாசகம்

## ஆறாம் புத்தகம்

முதல் பாரத்திற்குரியது

M. A. துரை அரங்கசாமி, M.A., M.O.L.
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்

R. சீனிவாசன், M.A.
துணைத் தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி

... OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1951
MADRAS

விந்திய வெளியீடுகள்
வேப்பேரி :: சென்னை

[விலை அணா 15

காபிரைட்]

முதற் பதிப்பு—1951

சென்னை-600 008
139669

Kabeer Printing Works, Madras-5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 951
MADRAS

## முன்னுரை

சென்னை அரசியலாருடைய புதிய பாட திட்டத்தை ஒட்டி, எங்கள் தமிழ் வாசகம் என்னும் பெயருடன் முதல் மூன்று பாரங்களுக்கும் எழுதப்பெற்ற பாடநூல்கள், வள்ளல் அழகப்ப செட்டியார் அவர்களுடைய ஆதரவில், இளமாணவர்களுடைய உடைமையாக வெளிவருகின்றன.

அரசியலார் பாடதிட்டத்தின் நன் னோக்கத்திற்கு இணங்க, உரைநடைப் பகுதிகளும் செய்யுட் பகுதிகளும், பல்வேறு வகைப்பட்ட சுவைகளுடன் இதில் அமைந்திருப்பது இளமாணவர்களுக்கு இனிய விருந்தாகும். அவற்றைச் சார்ந்து இலங்கும் பயிற்சிகள், உரைநடையாகவும் செய்யுள் நடையாகவும் படித்தவற்றைப் போற்றுதற்கும், தங்கள் சொந்த நடையை வளர்த்துப் பயன் பெறுதற்கும் அவர்களுக்கு ஏற்ற கருவிகள் ஆகும். ஒவ்வொரு பாடத்திற்கும் வரையப்பட்டுள்ள படங்கள், பாடத்தின் முழுப்பொருளையும் திரட்டித் தருவன. எனவே, எங்கள் தமிழ் வாசக நூல்களை, மாணவர்கள் யாவரும், "எங்கள் தமிழ் வாசகம்" என்று உவகையுடன் ஏற்பார்கள் என்பது உறுதி. அதற்குப் பெற்றோரும், ஆசிரியர்களும், கல்வித் துறைத் தலைவர்களும் அவர்களுக்கு உதவி புரிந்தருளுமாறு வேண்டுகின்றோம்.

மொ. அ. துரை அரங்கசாமி,
ரா. ஸ்ரீநிவாசன்.

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளையான்குடி மாறர் | ... 1 |
| 2. | குழந்தை அறிவு குறைவா ? | ... 6 |
| 3. | நம் உணவு | ... 10 |
| 4. | ஜான் கூடன் பெர்க் | ... 17 |
| 5. | பதுமினி இராணிப்பேட்டை | ... 23 |
| 6. | கிராமத் தொழில்கள் | ... 29 |
| 7. | செஞ்சிக் கோட்டை | ... 37 |
| 8. | மழை வருவிக்கும் வகை | ... 45 |
| 9. | சொன்னபடி செய்த முனியன் | ... 49 |
| 10. | வானக் குமிழி | ... 55 |
| 11. | தசரதன் சாபம் (ஒரு நாடகம்) | ... 62 |
| 12. | சென்னைக் கடற்கரை | ... 69 |
| 13. | இளங்கோவடிகள் | ... 77 |
| 14. | சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி | ... 85 |
| 15. | கோதையார் | ... 91 |
| 16. | கேள்விக்கு இனியன் | ... 98 |


## செய்யுட் பகுதி


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | ... 103 |
| 2. | நீதியுரைகள் | |
| | (1) நல்வழி | ... 106 |
| | (2) வாக்குண்டாம் | ... 107 |

பக்கம்

(3) நன்னெறி ... 108
(4) திருக்குறள் ... 109
3. சதகங்கள் ... 112
4. கதை
(1) நண்டு கொக்கைக் கொன்ற கதை... 115
(2) நரி நான்கு உபாயம் செய்த கதை... 119
5. நாட்டுப் பாடல் ... 121
6. இயற்கைக் காட்சிகள் ... 124
7. தனிப் பாடல்கள் ... 126

# எங்கள் தமிழ் வாசகம்

## 1. இளையான்குடி மாறர்

1. இளையான்குடிப் பதியில் மாறனார் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் வேளாளர் மரபைச் சார்ந்தவர். அந்த மரபிற்குரிய வேளாண்மைத் தொழிலை அவர் சிறப்புடன் செய்து வந்தார். அதனால், அவருக்கு ஏராளமான வருவாய் கிடைத்தது. இறைவன் திருவருளாலேயே தமக்கு வருவாய் மிகுதியும் கிடைத்ததாக எண்ணி, அவர் சிறிதளவும் செருக்கு அடையாமல் வாழ்க்கை நடத்திவந்தார். அதனோடு, " ஆண்டவன் கொடுக்கும் செல்வம் அவனுடைய அடியார்களுக்கே உரியதாகும் " என்று கருதி, அடியவர் எவர் வரினும், எப்போது வரினும், அவருக்கு விருப்பத்தோடு உணவு அளிப்பதைத் தமக்குரிய பெருந்தொண்டாக அவர் கடைப்பிடித்து ஒழுகலானார்.

2. மாறனார், தாம் கொண்ட கொள்கைக்கு ஏற்ப, நாள்தோறும், அடியார் பலருக்குச் சுவை மிக்க நல்லுணவு அளித்துவந்தார். அவருடைய செல்வம் நாளுக்குநாள் பெருகியே வந்தது. இறைவனிடத்திலும் அவருக்கு அன்பு மிகுந்துவந்தது. இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன.

3. தொடர்ந்தாற்போல் சில ஆண்டுகளில் மழையில்லாது போயிற்று. அதனால், மாறனார்க்கு வருவாய் சுருங்கிற்று ; வறுமை ஓங்கிற்று. ஆனால்,

அப்போதும், அவர் தம்மிடமிருந்த பொருள்களை விற்றும் கடன் வாங்கியும் அடியவர்க்கு உணவளிக்கும் தொண்டினை விடாது செய்தே வந்தார்.

4. மழைக்காலம் வந்தது. ஒருநாள் இரவில், உணவும் இல்லாமல், அவர் நெடுநேரம் தம் வீட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பசி மிகுதியால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. பசி, அவருடைய வயிற்றை அரித்தது. நெடுநேரம் கழிந்த பிறகு, பசியால் ஏற்பட்ட உடல் தளர்ச்சி மிகுதியால் கண்கள் சோர்வு அடையவே, அவர், கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே படுக்கச் சென்றார். மழை பெய்துகொண்டே இருந்தது.

5. அப்போது யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. மாறனார் விரைந்துவந்து கதவைத் திறந்தார்; ஓர் அடியவர் மழையில் நனைந்து பசியால் துவண்டு நிற்பதைக் கண்டார்; உள்ளம் பதை பதைத்தார்; அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று, அவர் உடம்பைத் துடைத்து ஈரம் போக்கி, ஓர் இருக்கையில் உட்கார வைத்தார்.

6. அடியவர்க்கு உடனே உணவு தரவேண்டும் என்பது மாறனார் விருப்பம். எனவே, அவர் தம் மனைவியாரை நெருங்கி, “நமக்கு உணவில்லை என்றாலும் அடியவர்க்கு உணவு அளிக்க வேண்டுவது நம்முடைய விரதம் அன்றோ! விரதம் பழுது ஆகாமல் இருக்க ஏதாவது வழி தேடவேண்டும்” என்று உருக்கமாகக் கூறினார். பாவம்! மனைவியார் என் செய்வார்? “வீட்டிலோ ஒரு பொருளும் இல்லை. அயலாரை இப்போது எழுப்பவும் முடியாது; எழுப்பினாலும் ஒருவரும் கடன் கொடுக்க முன் வாரார்; வேறு வழி ஒன்றும் தோன்றவில்லையே!” என்று

கூறி மனைவியார் கலங்கினர்; ஆனால் உடனே முக மலர்ச்சி கொண்டு, "இன்று வயலில் விதைத்த நெல் முளைகளை வாரிக்கொண்டு வந்தால் ஒருவாறு உணவாக்கி அடியவரை உண்பிக்கலாம்" என்றார்.

7. அச் சொல்லைக் கேட்டவுடன், இளையான் குடிமாறனார் பெருமகிழ்ச்சி கொண்டு, கூடை ஒன்று எடுத்துக்கொண்டு வயல் நோக்கிப் புறப்பட்டார். மழை 'சோ' வெனப் பெய்துகொண்டிருந்தது. ஒரே இருள் மூடிக்கொண்டிருந்தது. கால்களினாலேயே தடவித்தடவி வழிபற்றிச் சென்று, அவர் வயலை அடைந்தார். நெல் முளைகள் எல்லாம் நீரில் மிதந்து கிடந்தன. அவற்றைக் கைகளால் கோலி வாரிக் கூடையை நிரப்பிக்கொண்டு, விரைந்து அவர் வீடு திரும்பினார்.

8. கணவர் வரவை வாயிலில் நின்றபடியே பேராவலோடு நோக்கிக்கொண்டிருந்த கற்பரசியார், அவர் கொண்டுவந்த கூடையை வாங்கிக்கொண்டு போய், நெல் முளைகளை நீரில் கழுவித் தூய்மை யாக்கினார்; பிறகு, அடுப் பேற்ற அடுக்களைக்குச் சென்றார்; அடுப் பெரிக்க விறகு ஒன்றும் இல்லாதது கண்டு திகைத்தார். அது கண்ட மாறநாயனார், ஒரு பக்கத்தில் சிதைந்து தொங்கிக்கொண்டிருந்த கூரை வரிச்சுக்களை அறுத்துத் தள்ளினார். அம்மையார், நெல் முளைகளை வறுத்துக் குற்றி அரிசியாக்கிச் சோறு சமைத்தார். சோற்றுக்குக் கறி வேண்டுமே! வீட்டின் பின்புறத்தில், அவரை புடலை முதலியன, குழியில் முளைத்திருந்தன. அவற்றை நாயனார் பறித்துக்கொண்டு வந்து கொடுக்க, நாயகியார் தம் கைத் திறமையால் அவற்றைக் கொண்டு பல வகையான கறிகள் ஆக்கினார்.

9. வந்த அடியவர், பசியின் களைப்பால், அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். வறுமையிலும் தாம் மேற்கொண்ட தொண்டினை மறவாத இளையான் குடி மாற நாயனுர் அவரிடம் சென்று, அவரைத் தட்டி



எழுப்பி, "பெரியீர், உணவு அருந்த எழுந்து வாருங்கள்!" என்று அன்போடு அழைத்தார். உடனே, நாயனுரும் நங்கையாரும் திகைக்கும்படி ஓர் ஒளி எழுந்தது. வந்த அடியவர் மறைந்தார். அவர்கள் இருவரும் பெருந் திகைப்புக் கொண்டனர்.

10. திகைத்தால் தேற்றும் இறைவன், அவர்களைப் பின்னும் மிகுதியாகச் சோதிக்க விரும்பவில்லை. உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான், விடைமீது எழுந்தருளி, "அன்ப, அறுசுவை உண்டியை அன்பர்களுக்கு நாள்தோறும் அளித்து வந்தாய். வறுமையை நாமே உனக்கு

மிகுதியாகக் கொடுத்தோம். அப்போதும் நீ உன் தொண்டிலிருந்து நழுவாது நின்றாய். இனி நீ உன் மனைவியோடு இன்ப உலகை அடைந்து என்றும் வருந்தாது இருப்பாயாக!'' என்று அருள் செய்தார்.

"அடியாருக்கு ஆற்றும் தொண்டே ஆண்டவனுக்குச் செய்யும் பூசையாகும்!'' என்பது இளையான்குடிமாற நாயனார் வரலாற்றால் நாம் உணரலாம்.

### அருஞ்சொற்பொருள்

மரபு - குலம். செருக்கு - கர்வம். ஆண்டவன் - இறைவன். வருவாய் - சம்பாதனை. சுருங்கிற்று - குறைந்தது. தளர்ச்சி - சோர்வு. ஓசை - சத்தம். துவண்டு - வாடி. பதைபதைத்தார் - மிகவும் வருந்தினார். இருக்கை - உட்காரும் பீடம். கோலி - சேர்த்து. தூய்மை - பரிசுத்தம். அடுக்களை - சமையல் அறை. கறி - பதார்த்தம். திறமை - வல்லமை. விடை - எருது; ரிஷபம்.

I. விடை தருக :–

(1) இளையான் குடிமாறர் வழக்கமாகச் செய்து வந்த பெருந் தொண்டு யாது?

(2) மாறருடைய மனைவியார் தம் கணவருக்குக் கூறிய யோசனை யாது?

(3) மாறர் வரலாற்றால் நீவிர் அறியும் உண்மை யாது?

II. எதிர் மொழி தருக :–

செருக்கு, சுருங்கிற்று, தூய்மை, திகைப்பு, இன்ப உலகு.

III. வாக்கியங்களில் அமைக்க :–

பெருந் தொண்டு, அரித்தது, பதைபதைத்தார், அடுக்களை, கைத்திறமை, பெருந்திகைப்பு.

IV. சந்தர்ப்பம் காட்டி விளக்குக :—

(1) "ஆண்டவன் கொடுக்கும் செல்வம் அவனுடைய அடியார்களுக்கே உரியதாகும்.''

(2) "பெரியீர், உணவு அருந்த எழுந்து வாருங்கள்.''

V. மாறனாருக்கு ஏற்றவர் அவர் மனைவியார் என்பதை விளக்குக.

## 2. குழந்தை அறிவு குறைவா?

'வேர்க்கடலே, வேர்க்கடலே' என்ற குரல் தெருவில் கேட்டது. வீட்டிற்குள் விளையாடிக்கொண் டிருந்த இராதாவின் காதில் அவ் வொலி விழுந்தது. உடனே, விளையாடுவதை நிறுத்திவிட்டு, 'அம்மா, வேர்க்கடலே வாங்கித் தா!' என்று, இராதா அம்மா வின் மடியைப் பிடித்திழுத்தாள். அம்மா தெருவிற்கு வந்து, 'வேர்க்கடலே! இங்கே வா' எனக் கூப்பிட் டாள். கரியன் வீட்டு வாயிலில் வந்து நின்றான்.

"என்ன அப்பா கரியா! நீயா? வா(யேன்) உள்ளே! இந்தப் பக்கமாக வந்து எத்தனையோ நாள் ஆயிற்றே! ஏன் இந்தப் பக்கமாக வருகிறதே இல்லே?" என்று அன்போடு கேட்டாள் அரசி.

"எமன் வாயிலிருந்து எப்படியோ தப்பித்து விட்டேன். என்னமோ 'டய்பாய்ட்' ஜுரமாம்! அந்தச் சனியன் என்னிடம்தானா ஆசை வைக்க வேண்டும்? நாற்பது நாள் அன்னம் தண்ணீர் இல் லாமல், படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். என் பெண்சாதி தாலிதான் என்னேப் பிழைக்க வைத்தது! இல்லாவிட்டால், 'இந்தக் குழந்தையைப் போலவே எனக்கும் ஒரு குழந்தை இருக்கிறது; அதன்கதி அதோகதிதான்'. நல்ல காலம்! எமன் என்மேல் தயவு வைத்து உயிரோடு விட்டுவிட்டுப் போனான்" என்று தன் கதையைச் சுருக்கமாகவே சொன்னான் கரியன்.

"கரியா, உனக்கு ஆண்டவன் ஒன்றும் குறைவு வைக்கமாட்டான். நீ என்ன, மற்றவர்கள் போல ஊரைக் கொள்ளே அடிக்கிறாயா! என்னமோ பாவம்! நெற்றி வேர்வை சிந்திக் கஷ்டப்பட்டு உழைத்து, வயிற்றை வளர்க்கிறாய்! உன் குணத்திற்கும், உன் நடத்தைக்கும் ஒன்றும் தீங்கு வாராது;

வந்தாலும் உடனே ஓடிப் போகும். ஆண்ட வனை மாத்திரம் மறக்காதே ; நான் சொல்வதை நன்ருய் மனத்திலே வைத்துக்கொள். அது போகட்டும் ! உன் குழந்தை என் இராதாவைப் போலவே இருக்குமென்ருயே ! அவளை ஒரு நாளைக்கு இங்கே அழைத்து வருகிருயா ? உன் பெண்டாட்டியைக்கூட அழைத்து வா(யேன்) ஒரு நாளைக்கு ! '' என்ருள் அரசி.

'' ஆகட்டும் அம்மா ! ஒரு நாளைக்கு அழைத்து வருகிறேன். நாழி யாகிறது ! போய் வரட்டுமா ?'' என்று புறப்பட்டான் கரியன்.

'' சரிசரி ! இத்தனை நாழி பேசிவிட்டுச் சும்மா அனுப்பவா உன்னைக் கூப்பிட்டேன் ! இந்தா ! இந்த இரண்டணுவிற்கு வேர்க்கடலை போடு '' என்ருள் அரசி. கால்படி பயறு அளந்து போட்டான் கரியன்.

இவ்வளவையும் இராதா பார்த்துக்கொண்டு பேசாமல் இருந்தாள். வீட்டிற்குள் வேர்க்கடலையில் இருந்த ஆவேசம் அவளுக்கு வெளியில் இல்லை ; சம்பாஷணையைக் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள் இராதா. குழந்தைப் பேச்சு வரவே இராதாவிற்கு வாய்கூடத் திறக்க முடியவில்லை போலும் ! அவள் பேசாமல் நிற்பதைக் கரியன் பார்த்தான்.

'' என்ன சின்னம்மா ! சும்மா நிற்கிறீர்களே ! உங்களுக்கு வேர்க்கடலை வேண்டாமா ? இந்தாருங்கள் அம்மா ! எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள் '' என்ருன் கரியன்.

இராதாவிற்கு வயது நான்குதான். ஆனல் அவள் நன்ருய்ப் பேசுவாள் ; எவரையும் கண்டு அஞ்சமாட்டாள்.

கரியன் சொன்னது இராதவிற்குப் புரியாமல் இல்லை. ஆனல் இராதா பேசாமலே நின்ருள்.

"என்னம்மா, சின்ன ராணி! கோபமா என் மேலே? அதெல்லாம் மறந்துவிடுங்கள்! உங்களுக்கு எம் மாத்திரம் வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள்" என்று வேர்க்கடலைக் கூடையை இராதாவின் அருகே இழுத்து வைத்தான் கரியன். அப்போதும் இராதா பேசாமலே சிலைபோல நின்றாள்.

"சரி! நீங்களே எடுத்துக்கொள்ள முடியாதா? இந்தாருங்கள்! நானே எடுத்துத் தருகிறேன்"



என்று சொல்லிக் கைந் நிறைய வேர்க்கடலையை அள்ளிக் கரியன் நீட்டினான்.

உடனே இராதா தன் சொக்காயின் கீழ்ப்புறத்தைத் தன் கைகளில் மடித்துப் பிடித்து நீட்டி வேர்க்கடலையை வாங்கிக் கொண்டாள்.

கரியன், "வேர்க்கடலை, வேர்க்கடலை" என்று கூவிக்கொண்டே போய்விட்டான்.

"ஏண்டி, இராதா! நீ நன்ருகப் பேசுவாயே! அவன் கேட்டால் ஒன்றுமே பேசாமல் கட்டைபோல நின்ருயே! ஏன்? 'வேர்க்கடலையை எடுத்துக்கொள்' என்று உடுக்கை அடித்து வேண்டுவது போல அவன் வேண்டிஞல், சும்மா முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்ருயே! அவனுக்கு எவ்வளவு வெறுப்பாய் இருந்திருக்கும்? ஏன் அப்படிப் பிடிவாதம் பண்ணிஞய்?" என்ருள் அரசி.

"இல்லை யம்மா! என் கை சின்ன கை யாச்சே! நாஞக அள்ளிக்கொண்டால் இவ்வளவு வருமா? அதற்காகத்தான் சும்மா இருந்தேன்; நான் கெட்டிக் காரியல்லவா!" என்று ஒரு குதி குதித்தாள் இராதா. குழந்தையை வாரியெடுத்து முத்தமிட்டாள் அரசி.

அருஞ்சொற்பொருள்

வாயில் - வாசற்படி; புகும்வழி. ஜுரம் - காய்ச்சல். அன்னம் - சோறு; உணவு. பெண்சாதி - மனைவி. அதோகதி - கீழான நிலைமை. தயவு - இரக்கம். நெற்றி வேர்வை சிந்தி - மிகவும் உடல் வருந்தி. உழைத்து - வேலைசெய்து. ஆண்டவனை - கடவுளை. ஆவேசம் - பரபரப்பு. சம்பாஷணை - உரையாடல்; ஒருவரோடு ஒருவர் பேசுதல். அஞ்சமாட்டாள் - பயப்படமாட்டாள். புரியாமல் - விளங்காமல். எம்மாத்திரம் - எவ்வளவு. உடுக்கை அடித்து வேண்டுவது - கெஞ்சிக் கேட்பது.

I. விடை தருக :-

(1) கரியன் தன் கதையைச் சுருக்கமாக எப்படிச் சொன்ஞன்?

(2) அரசி கரியனுக்குக் கூறியன யாவை?

(3) வேர்க்கடலையை எடுத்துக் கொள்ளாததற்கு இராதா கூறிய காரணம் யாது?

II. வாக்கியங்களில் அமைக்க :-

அன்னம் தண்ணீர், படுத்த படுக்கையாய், நெற்றிவேர்வை சிந்தி, உடுக்கை அடித்து வேண்டுவது போல.

III. எதிர்மொழி கூறுக :-

தீங்கு, அஞ்சமாட்டாள், வெறுப்பு.

IV. பிரித்தெழுதுக :-

பிடித்திழுத்தாள், நாழியாகிறது, வாரியெடுத்து.

# 3. நம் உணவு

1. நீராவி வண்டி போல்வது நம்முடைய உடல். நீராவி வண்டிக்கு நிலக்கரி எப்படி இன்றியமையாததோ, அப்படியே நம்முடைய உடலுக்கு உணவு இன்றியமையாதது. நீராவி வண்டி ஓடும் போது, அதனுடைய பல உறுப்புக்கள் தேய்வு அடையும். அவ்வாறு தேய்வு அடைவதை நிலக்கரியால் முன்புபோல்புதுப்பித்துவிட முடியாது. ஆனால், உடலுறுப்புக்களுள் சில தேய்வு அடையுமானால், தக்க உணவுகொண்டே அவற்றைப் புதுப்பித்து விடலாம். எனவே, நீராவி வண்டிக்கு இன்றியமையாததான நிலக்கரியைவிடப் பன்மடங்கு இன்றியமையாதது உடலுக்கு உணவு.

2. "பசித்துப் புசி" என்பது பழமொழி. முன் உண்ட உணவு முழுதும் சீரணம் ஆன பின்பே, நன்றாகப் பசி எடுக்கும். அப்போதுதான் நாம் உணவை உட்கொள்ள வேண்டும். மணிக் கணக்கு வைத்துக்கொண்டு, பசி எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் உணவு உட்கொள்வது நாகரிகம் எனக் கருதப்படுகிறது. இவ்வாறு உண்பதால், உடலுக்கு அளவில்லாத நோய்கள் உண்டாகுமே யன்றிப் பயனொன்றும் ஏற்படாது. சிலர், நாவுணர்ச் சிக்காகக் கண்டபோ தெல்லாம், கிடைத்ததை எல் லாம் வாங்கி உண்கின்றனர். அத் தகையோர்க்கு மருந்தாலும் தீராத நோய்களே உண்டாகும். 'முன் உண்ட உணவு நன்றாகச் சீரணம் ஆய் விட்டதை அறிந்து உடலுக்குத் தேவையான சத்துக்கள் உள்ள உணவை உணர்ந்து உட்

கொள்வார்க்கு, மருந்தே தேவையில்லை' என்று திருவள்ளுவர் கூறியிருப்பதை நாம் பொன்னே போல் போற்றவேண்டும்.

3. பசி எடுப்பது, பெரும்பான்மையாக எல்லோர்க்கும் எளிதில் தெரியும். இதில் கூடச் சிலர் ஏமாற்றம் அடைவது உண்டு. உணவு, பல வகையான நீரிப்பொருள்களோடு கலந்து வயிற்றுக்குள் மசியும்போது, ஒரு வகைத் தினவு தோன்றும். அப்போது பசி எடுப்பது போல இருக்கும்: இது பொய்ப் பசி எனப்படும். கண் மயக்கம், அறிவு தெளிவாக இராமை முதலியன பொய்ப் பசியின் அறிகுறிகளாம். மெய்ப் பசி தோன்றும்போது, இந்த மாற்றங்கள் தோன்றமாட்டா. பொய்ப்பசி தோன்றும்போது சிறிது பொறுத்துக்கொண்டால், பசி அடங்கிவிடும். இவ்வாறு வேறுபாடு அறிந்து, மெய்ப்பசி உண்டான பின்பே, தேவையான உணவுப் பொருள்களை நாம் உட்கொள்ள முற்படவேண்டும்.

4. தேவையான உணவுப் பொருள்கள் எவை என்று அறிவதுதான் இனி வேண்டற்பாலது. சாதாரணமாக, நாம் உண்ணும் உணவில் பலவகையான சத்துக்கள் அடங்கியிருக்கின்றன. அவ் வகைச் சத்துக்களுள் ஒவ்வொன்றிலும் தேவையான அளவு உள்ள உணவுப் பொருள்களை நாம் உண்ணுதல் வேண்டும். குறிப்பிட்ட அளவைத் தெரிந்துகொள்ள மாட்டாது போனாலும், அச் சத்துக்களெல்லாம் கலந்த கலப்புணவை உட்கொண்டு வந்தால் போதும். சத்துக்களை-மாவுச் சத்து அல்லது சர்க்கரைச் சத்து, கொழுப்புச்சத்து, ஊன்செய் சத்து, தாது உப்புக்கள், வைடமின் என வகுக்கலாம். இவற்றுள், ஒரே சத்துள்ள உணவை மட்டும் உட்கொண்டால், உடல்

நலமும் வளர்ச்சியும் ஒருபோதும் பெறுதல் முடியாது. இவை எல்லாம் கலந்த கலப்புணவாலேயே அவற்றைப் பெறுதல் முடியும்.

5. நாள்தோறும், நம்முடைய உடலுறுப்புக் களைக் கொண்டு ஏதாவதொரு தொழில் ஆற்றினுல் தான், பிழைப்பிற்கு வருவாய் தேடிக்கொள்ளமுடியும். உழைப்பிற்குத் தேவையான சத்தே மாவுச் சத்து அல்லது சர்க்கரைச் சத்து எனப்படும். உண்மையில், மாவுச் சத்து வேறு ; சர்க்கரைச் சத்து வேறு. இவ் விரண்டையும் ஒன்று சேர்த்து, 'கார்போஹைடி ரேட்டு' என வழங்குவர். மாவுச் சத்துடைய பொருள்கள்—அரிசி, கோதுமை, கம்பு, சோளம், கேழ் வரகு முதலியன. இவை தண்ணீரில் எளிதில் கரைய மாட்டா. சர்க்கரைச் சத்துடைய பொருள்கள்—பால், தேன், பனஞ்சாறு, கருப்பஞ்சாறு, பழவகைகள், பீட்ரூட்டு என்னும் கிழங்கு முதலியன. இவை எளிதில் தண்ணீரில் கரையும் பொருள்கள். இவற்றை உண்பதால், தொழில் செய்வதற்குத் தேவையான ஆற்றலும், வெப்பமும் கிடைக்கும். இந்தப் பொருள் களை நோக்கினுல், இவை யெல்லாம் தாவரப் பொருள் களாகவே பெரும்பாலும் இருப்பதை நாம் காணலாம்.

6. தொழில் செய்வதற்கு ஆற்றலும், வெப்பமும் தரும் மற்ருேர் இன்றியமையாத சத்துக் கொழுப்புச் சத்தாகும். இந்தச் சத்து, குளிர்ச்சி மிகுந்த நாடு களில் வாழ்பவர்களுக்கு மிகுதியாக வேண்டும் ; வெப்பம் மிக்க நாட்டில் வாழும் நமக்கு ஓரளவு இருந் தால் போதும். இச் சத்துடைய பொருள்கள்—மீன் எண்ணெய், நெய், வெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பிராணிகளின் இறைச்சி முதலியன.

7. உடலானது வளர்ச்சி அடைவதற்கும், தேய்ந்து போன உறுப்புக்கள் மறுபடியும் புதியனவாக உண்டாவதற்கும், ஊன்செய் சத்துடைய பொருள்கள் தேவை. இச் சத்துடைய பொருள்கள்–முட்டை, பால், தயிர், மோர், மீன், இறைச்சி, உழுந்து, மொச்சை, அவரை, துவரை, பட்டாணி, கோதுமை முதலியன. இவற்றுள், தாவரப்பொருள்களிலிருந்து கிடைக்கும் ஊன்செய் சத்தைவிடப் பிராணிகளி லிருந்து கிடைக்கும் ஊன்செய் சத்து மிகுதியாகும். இச் சத்தினை, 'புரோட்டீன்' என வழங்குவர்.

8. உடல் வளர்ச்சிக்குத் தேவையான மற்றொரு சத்து, தாது உப்புக்களிலிருந்து கிடைக்கிறது. நிலத்திலிருந்தே இவ் வுப்புக்களைத் தரும் பொருள்கள் கிடைப்பதால், இவற்றிற்குத் தாது உப்புக்கள் எனப் பெயர் கொடுத்தனர். பழங்கள், கீரைகள், காய்கறி கள் முதலியவற்றிலிருந்து இந்தத் தாது உப்புக்களைப் பெறலாம்; பாலிலிருந்தும் இந்தச் சத்துக் கிடைக் கும். எலும்புகளையும் பற்களையும் வலுப்படுத்தவும், இரத்தத்தைத் தூயதாக்கவும், மிகுதிப் படுத்தவும் இந்த உப்புக்கள் இன்றியமையாதன.

9. இனி, வைடமின்கள் எனப்படும் சத்துப் பொருள்கள் மேற்கூறிய உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் விட, மிக மிக இன்றியமையாதன. இவை உடலில் இருந்தால்தான், மேலே குறித்த உணவுப் பொருள்களை எல்லாம், உடல் பயன்படுத்திக் கொள்ள முடியும். இவை யில்லாவிட்டால் நாம் பல விதமான நோய்களுக்கு உள்ளாவோம். இவை, பெரும்பாலும், தாவரப்பொருள்களிலிருந்தே கிடைக் கின்றன. காய்கறிகள், கீரைகள், பழங்கள் இவற்றில் வைடமின்கள் மிகுதியாக உண்டு; பாலிலும் மிகுதி

யாக உண்டு; இறைச்சியிலும் ஓரளவு உண்டு. இத் தகைய உணவுப் பொருள்களிலிருந்து வைடமின் கள் மிகுதியாகக் கிடைப்பன என்றுலும், அவை சிறிதளவே உடலால் கிரகித்துக்கொள்ள முடியும். அவ்வாறு சிறிதளவிலேயே கிடைப்பினும், அவற்ருல் உண்டாகும் உடல் வளர்ச்சியும், நலனும், நோயைத் தடுக்கும் ஆற்றலும் மிகுதியென்றே அறிவுடையோர் கருதுகின்றனர். இவை A, B, C, D என நான்கு வகைப்படும். அவற்றைப் பற்றி விரிவாகத் தனி நூலில் அறியலாம்.

10. மேற் குறிப்பிட்ட சத்துக்கள் கலந்துள்ள உணவே உடலுக்கு ஏற்றது. இத் தகைய கலப்புண வின் அமைப்பு, அவரவர் தொழிலுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றவாறு அவரவ ராலேயே ஏற்ற அளவில் அறிந்து உட்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு உட்கொண்டால்தான், நோயற்ற நல முடைய வாழ்க்கையை வாழ முடியும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" அன்ருே ?

11. பாலில், இயற்கையிலேயே, பெரும்பாலும் எல்லாச் சத்துக்களும் அளவாகக் கலந்த கலப்புணவு அமைந்திருக்கிறது. குழந்தைகளுக்குப் பாலே தக்க உணவாம். இதன் பொருட்டுப் பெற்ற தாயிடம் குழந்தைகளுக்கு ஏற்ற சத்துள்ள உணவாகிய பாலே இயற்கை அளித்திருக்கிறது. ஆனுல், தாய் நோயில்லாதவளாயும் தக்க கலப்புணவு உண்டு உடல் வளம் உடையவளாயும் இருந்தால்தான், அவளிட மிருந்து பாலுண்ணும் குழந்தை, உடல் வளர்ச்சியை யும், நோயின்மையையும் பெறும். சில தாய்மார்க ளிடத்தில் உடல் நலம் இல்லாமையால், பால் கிடைப்ப தில்லே. அப்படிப்பட்டவர்கள் தங்கள் குழந்தைகளே

நல்ல பசுவின் பால் கொடுத்து வளர்க்கலாம். பாலுண்ணும் பருவம் நீங்கின பிறகு கூடச் சில ஆண்டுகள் வரையில் பாலே மிகுதியாகக் கொடுத்துக் குழந்தைகளை வளர்த்தல் நல்லது.

12. சில உணவுப் பொருள்கள் உடலுக்கு நன்மை தருவன அல்ல. அவற்றை அறிந்து நீக்கி விடுதல் நல்லது. தேநீர், காப்பி முதலியன பருகும் போது, அவை நரம்புகளைத் தூண்டி எழுப்பி ஊக்கத்தை அளிக்கும்; ஆனால், பிறகு நரம்பின் கட்டுக்கோப்பு உறுதியைக் குலைக்கும்; பசி எடுப்பதையும் குறைக்கும். இவற்றைப் பழக்கத்திற்குக் கொண்டு வருவோர், தீமை அறிந்த பின்னும், விட முடியாது தத்தளிப்பர்.

13. உணவை உட்கொள்ளும்போது, நன்றாக மென்று உமிழ்நீர் கலக்குமாறு செய்தல் வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" என்பது பழமொழி. ஆகையால் அளவாகவும் உணவு உண்ணுதல் வேண்டும். இவ்வாறு கலப்புணவின் நுட்பத்தை அறிந்து உண்டு, உடற்பயிற்சியும், உடல் தூய்மையும், வாழும் இடம் தூய்மையும் கொண்டு, அவ்வாறே பருகும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று முதலியவற்றின் தூய்மையும் பெற்று வாழ்வோர், தடை இல்லாமல் நூறாண்டும் இன்பமாக வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயன்படுவார்.

அருஞ்சொற்பொருள்

நீராவி வண்டி - இரெயில் வண்டி. இன்றியமையாதது - அவசியமானது. உறுப்புக்கள் - பகுதிகள். பன்மடங்கு - பல மடங்கு. நீரிப்பொருள் - திரவப்பொருள். தினவு - நமைச்சல்; அரிப்பு. மாற்றங்கள் - மாறுபாடுகள். வேண்டற்பாலது -

விரும்பத் தக்கது. சத்து - உரம். கிரகித்துக்கொள்ள - வாங்கிக் கொள்ள; கவர்ந்து கொள்ள. தத்தளிப்பர் - மிகவும் வருந்துவர்.

I. விடை தருக :–

(1) நாம் ஏன் உணவு உட்கொள்ளுதல் வேண்டும்?

(2) எப்போது நாம் உணவு உட்கொள்ள வேண்டும்?

(3) பொய்ப்பசி என்றால் என்ன? அதை அறியும் அறி குறிகள் யாவை?

(4) கலப்புணவு என்றால் என்ன?

(5) சத்துக்களை எத்தனை வகையாக வகுக்கலாம்? அவை யாவை? அவற்றுள் ஒவ்வொன்றும் எந்த எந்தப் பொருள்களில் உள்ளது?

(6) உடலுக்கு நன்மை தாராத உணவுப் பொருள்கள் யாவை?

(7) எவ்வாறு வாழ்வோர் நூறாண்டும் இன்பமாக வாழ்தல் கூடும்?

II. இந்தப் பாடத்தில் வந்துள்ள பழமொழிகளை எடுத்தெழுதுக. அவை வந்துள்ள இடம் பொழுது காட்டி அவற்றை விளக்குக.

III. வாக்கியங்களில் அமைக்க :–

பன்மடங்கு, நாவுணர்ச்சிக்காக, பொய்ப்பசி, கிரகித்துக் கொள்ள, பழக்கவழக்கங்கள், கட்டுக்கோப்பு, உறுதி, தமக்கும் பிறர்க்கும் பயன்படுவர்.

IV. எதிர்மொழி கூறுக :–

தெளிவு, இராமை, சிறிது, எளிதில், மிகுதியாக, தூய்மை.

V. பிரித்தெழுதுக :–

உடலுறுப்புக்கள், அளவில்லாத, தூயதாக்க, இவையில்லா விட்டால்.

# 4. ஜான் கூடன் பெர்க்

1. கல்வி கற்பதற்கு இன்றியமையாதன சுவடிகள். இவை இக் காலத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. அச்சு எந்திர சாலைகள், காகிதங்களில் அச்சடித்துத் தைத்துக் கோடிக் கணக்கில் அவற்றைத் தருகின்றன. குறைந்த விலைக்கு, அழகான சுவடிகள் பெற்றுப் படித்துப் பயன் அடைகின்றோம்.

2. அச்சடிக்கும் முறை வருவதற்கு முன், கையால் எழுதியே கல்வி கற்பது வழக்கம். நூற்றுக் கணக்கான பக்கங்கள்கொண்ட சுவடிகளைக் கையால் எழுதியே கற்பதென்றால், அதனால் எவ்வளவு துன்பம் உண்டாகும் என்பது சொல்லாமலே விளங்கும். காகிதங்கள் செய்யும் முறை கண்டுபிடிப்பதற்கு முன்பு, எழுத்தாணிகொண்டு ஓலை ஏடுகளில் அரும்பாடுபட்டு எழுதியே மக்கள் கல்வி கற்றுவந்தனர். பன்னிரண்டாயிரம் பாடல்கள் அடங்கிய கம்பராமாயணத்தை ஓலை ஏடுகளில் எழுதிப் படிப்பதென்றால், அஃது எளிதான செயல் ஆகுமா? யாரோ ஒருவரிடத்தில் கம்பராமாயண ஓலைச்சுவடி இருக்கும். அவரிடமிருந்து அச் சுவடியில் உள்ளதை எழுதிக் கொள்ள, அவர் வீட்டில் எத்தனையோ மாதங்கள் தங்கியிருக்கவேண்டும். ஒரு சுவடியை எழுதிக் கொள்ளவே இவ்வளவு காலம் ஆகு மென்றால் பல சுவடிகளை எழுதிப் படிக்க எவ்வளவு தொல்லை ஏற்படும்?

3. ஓலை ஏட்டிலோ, காகிதத்திலோ எழுதிப் படிக்கும் பெருந்துன்பம் 15-ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில், உலகம் முற்றிலும் இருந்தது. இத்

துன்பத்திலிருந்து உலக மக்களுக்கு விடுதலை தந்த பெரியாரே ஜான் கூடன் பெர்க் என்பவர்.

4. ஜான் கூடன் பெர்க் என்பவர் ஜெர்மனி தேசத்து மேயன்ஸ் நகரத்தில் கி. பி. 1400-ஆம் ஆண்டில் பிறந்தார். இளமை முதற்கொண்டே இவர் பல துன்பங்களுக்கு ஆளானுர். மேயன்ஸ் நகரத்தில்



அடிக்கடி கட்சிக் குழப்பம் ஏற்படும். அதனுல், இவரும் இவர் கட்சியாரும் நகரைவிட்டு வெளியே அடிக்கடி துரத்தப்பட்டனர். இவருடைய குடும்ப சொத்தையும் அரசாங்கம் கவர்ந்துகொண்டது. அதனுல், இவர் ஸ்ராஸ்பெர்க் என்ற நகரில் குடியேறினர். அந்த நகரத்தவர் உதவியால் குடும்ப சொத்தைத் திரும்பப் பெற்று இவர் அங்கேயே வாழ்ந்து வந்தார்.

5. ஹாலண்டு தேசத்து ஹார்லெம் நகரில் இவருக்கு லாரன்ஸ் கோஸ் என்ற நண்பர் ஒருவர் இருந்தார். அவரைப் பார்க்கச் சென்று அங்கே

தங்கியிருந்தபோது, ஒரு மரப் பலகையில் செதுக்கப் பட்டிருந்த இலத்தீன் இலக்கணத்தை லாரன்ஸ் கோஸ் இவருக்குக் காட்டினர். அதைக்கண்ட நாள் முதல், அச்சிடும் எளிய முறையைக் கண்டுபிடிக்க ஜான் கூடன் பெர்க் உறுதி செய்து கொண்டார்.

6. சீன தேசத்தில் கி. பி. ஆரும் நூற்ருண்டில் ஒரு வகையான அச்சிடும் முறை இருந்தது. மரப் பலகையில் எழுத்துக்களைச் செதுக்கிச் சீன தேசத் தார் அச்சிட்டு வந்தனர். ஆனுல், ஒவ்வொரு சுவடியின் ஒவ்வொரு பக்கத்திற்கும், ஒவ்வொரு மரப் பலகையில் எழுத்துக்களைச் செதுக்கவேண்டி யிருந்த தால், கையால் எழுதுவதைவிட எந்த வகையிலும் இம் முறை துன்பத்தைக் குறைக்கவில்லை. எனவே, இந்த முறை மற்ற நாடுகளில் பரவவில்லை. கூடன் பெர்க்குக்கும் இந்த முறை தெரியாமலே இருந்தது.

7. அச்சிடும் முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கருதிய கூடன் பெர்க், அது குறித்தே இரவும் பகலும் எண்ணிவந்தார். இப்படி யிருக்கையில், ஆன்னெட் என்ற ஒரு நங்கை, இவர் கருத்தைக் கவர்ந்தாள். அவளையே மணந்துகொள்ள வேண்டும் என்று இவர் முடிவுசெய்தார். தனிமையாக இருக்கும்போதெல்லாம் அவளைப்பற்றிப் பாடுவதும், அவளுடைய பெயரை மரப் பட்டைகளில் செதுக்கு வதும் இவருக்கு வழக்கம். ஒரு நாள், ஈரமான இளம் பட்டை ஒன்றில், அவளுடைய பெயரைப் பல முறை அழகாகச் செதுக்கி, அதைத் தம்மிட மிருந்த ஒரு தோற்கடுதாசியில் இவர் சுற்றிவைத்தார் ; மறுநாள், அதை அந்த நங்கையிடம் கொடுக்க எண்ணிப் பிரித்துப்பார்த்தபோது, தோற்கடுதாசியில், பட்டை யில் இருந்த எழுத்துக்கள் அழகாகப் படிந்திருத்தலைக்

கண்டார் ; அச்சிடும் வழியைத் தமக்கு உணர்த்தவே அவ்வாறு தம் செயல் சென்றது என்று கண்டு களிக் கூத்தாடினர் ; அதன்பின், மரப் பலகைகளில் எழுத் துக்களைச் செதுக்கிப் பட்டைச் சாற்றுக்குப் பதில் கறுப்பு மையைப்பூசி அச்சிட்டுப் பார்த்தார்; பிறகு ஒவ் வோர் எழுத்தையும் தனித்தனியே சிறு மரத்துண்டு களில் செதுக்கி, அவற்றைக் கட்டியும் பிரித்தும் அச்சிடத் தொடங்கினர். அந்த முறை அச்சிடுவதற்கு எளிய முறையாகும் என்று கண்டபோது, இவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே கூறமுடியாது.

8. தனித்தனியே மரத்துண்டில் அச்சுச் செதுக்குவதற்குப் பழக்கம் மிகுதியாகவேண்டும் என்று கருதி, அவ்வாறு செதுக்குவதில் இவர் நெடு நாள் பழகினர் ; ஆனல், தாம் ஒருவராகவே அவ்வாறு முயன்றால், சுவடிகள் பலவற்றை அச்சிட முடியா தென்று உணர்ந்து, அதற்கென ஒரு தொழிற்சாலை அமைக்கக் கருதினர் ; அதற்கு ஏற்ற இடம் ஸ்விட்சர்லாந்து என்று உணர்ந்து, அவ் விடத் திற்குச் சென்று, பல செல்வர்களிடம் பொருளுதவி வேண்டினர். அவர்க ளெல்லோரும் இவரை ஏளனம் செய்தனரேயன்றிப் பொரு ளுதவி செய்ய முன்வரவே யில்லை. எனவே, தாமாகவே பொருள் சேர்த்து அத் தொழிலைச் செய்து முடிக்க இவர் உறுதி கொண்டார் ; சில கூட்டுத் தொழிலாளிகளோடு கூடி, நகைகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி, அதில் அவர்களோடு பகலெல்லாம் வேலை செய்து, இரவில் அச்சுத் தொழில் வேலையைத் தாமாகவே செய்துவந் தார் ; தாம் ஒருவராகவே அதைச் செய்வது அருமை யாகும் என்று கண்டு, பின், தம் கூட்டாளிகளுக்குத் தாம் கண்டுபிடித்த தொழிலின் நுட்பத்தை வெளி

யிட்டு, அவர்கள் உதவியை அதற்கும் வேண்டினர். 'கிணறு வெட்டப் பூதம் பிறந்த கதை'யாக, அவர்கள் இதைக் கேட்டதும் தாங்களே அதைச் செய்து இலாபம் மிகுதியாக அடையவேண்டும் என்று கருதிக் கூட்டுத் தொழிலிற்குப் பொருள் உதவ முடியாதெனக் கூறினர். பின், ஒருவாறு அவர்கள் நோக்கத்திற்கு இணங்கி, அச்சு வேலையை இவர் நடத்தினர். பொருள் மிகுதியாக வந்தது. ஆனால், பணத்தை யெல்லாம் அவர்களே கவர்ந்துகொண்டு, இவரைக் கேவலமாகவும் நடத்த முற்பட்டனர்; அச்சுத் தொழிலியற்றும் உரிமை கூடத் தங்களுடையதாகவே ஆக்கிக்கொள்ள முயன்றனர். ஆனால், அவர்கள் முயற்சி வீணாயிற்று. அச்சியற்றும் முறைக்கு உரிய உரிமை இவருடைய தாகவே அறிஞர்களால் முடிவு செய்யப்பட்டது.

9. கூட்டாளிகளால் ஒன்றும் பயனடைய முடியாதது கண்டு, இவர் தாம் பிறந்த ஊரான மேயன்ஸுக்குத் திரும்பிவந்தார்; தாம் காதலித்து வந்த ஆன்னெட் என்பாளை மணந்துகொண்டு, சிறிதுகாலம் அங்கேயே வாழ்ந்து வந்தார். மேயன்ஸில் திடீரென ஒரு குழப்பம் உண்டாயிற்று. அதனால், மறுபடியும் ஸ்விட்சர்லாந்துக்குப் போவதே தகுதியாகும் என எண்ணித் தம் மனைவியுடன் இவர் அவ் விடத்திற்கே சென்றார்; கூட்டாளிகளோடு சேர்ந்து பைபில் முதலிய சுவடிகளை அச்சிட்டுக் களித்தார். ஆனால், மறுபடியும் கூட்டாளிகள் இவரை ஏய்க்க முற்பட்டனர். எனவே, மனம் உடைந்து மனைவியுடன் தாய் நகரை இவர் அடைந்தார்.

10. தாய் நகரில் சில கூட்டாளிகளைச் சேர்த்துக் கொண்டு, அச்சுத் தொழிலை இவர் நடத்தினர். அங்கும் கூட்டாளிகள் இவரை ஏய்க்க முயன்றனர்.

இதற்கிடையில் அங்கே குழப்பம் ஏற்பட்டது. மனைவியுடன் இவர் வெளியே துரத்தப்பட்டார். வயது முதிர்ந்த காலத்தில் அயல் நாடுகளில் இவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. இறுதியில், நாஸ்கோ நாட்டின் தலைவர் ஆதரவில் சில காலம் வாழ்ந்திருந்து, அறுபத் தொன்பதாம் வயதில் இவர் உயிர் நீத்தார். இவருக்குப் பிறகு, இவர் கண்டுபிடித்த முறையைத் தொடர்ந்து, ஐரோப்பாவில் பல இடங்களில் அச்சுத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. இவருடைய அறிவின் பயனே இன்று அச்சுத் தொழிற்சாலைகளில் வளர்ந்துள்ள வளர்ச்சிகளெல்லாம். இவரால் உலகிற்கு விளைந்த நன்மையை அளவிட்டுக் கூறமுடியுமோ?

### அருஞ்சொற்பொருள்

இன்றியமையாதன - அவசியம் ஆவன. சுவடி - புத்தகம். எளிதான - சுலபம் ஆன. விடுதலை - நீக்கம். நங்கை - பெண். இணங்கி - உடன்பட்டு. கூட்டாளிகள் - பங்குகாரர்கள். ஏய்க்க - மோசம் செய்ய; ஏமாற்ற. விளைந்த - ஏற்பட்ட.

I. விடை தருக :—

1. அச்சடிக்கும் முறை வருவதற்குமுன், படித்து வந்த முறையாது?

2. ஐரோப்பாவில் முதல் முதல் அச்சடிக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் யார்?

3. சீனாவில் கண்டுபிடித்த அச்சடிக்கும் முறையில் இருந்த குறைபாடு யாது?

II. 1. ஜான் கூடன் பெர்க் அச்சிடும் முறையைக் கண்டு பிடித்த நிகழ்ச்சிகளைக் கூறுக.

2. அச்சுத் தொழிலை வளர்க்க ஜான் கூடன் பெர்க் மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பிடுக.

III. வாக்கியங்களில் அமைக்க :-

எளிய முறை, அளவுகூற முடியாது, கிணறு வெட்டப் பூதம் பிறந்த கதையாக, கூட்டாளி.

IV. எதிர் மொழி கூறுக :-

எளிது, விடுதலை, மகிழ்ச்சி, முடிவு.

## 5. பதுமினி இராணிப்பேட்டை

1. ஔரங்கசீபின் மைந்தனுன ஷாஆலம் என்பவன் டில்லியில் சக்கரவர்த்தியாய் இருந்தபோது, சூரசிங்கு என்ற இராஜபுத்திர மன்னனின் மகன் தேரணி சிங்கு என்பான், தன் தம்பி தரணி சிங் குடன் செஞ்சியம்பதியை ஆண்டு வந்தான். பாலாறு, சேயாறு, பெண்ணை யாறு, சங்கராபரணி யாறு என்ற ஆறுகளின் நீர்வளத்தாலும், கோலகிரி, கிருஷ்ணகிரி, இராசகிரி, இரத்தினகிரி என்ற மலை களின் பொருள் வளத்தாலும் செஞ்சியம்பதி சிறந்து விளங்கிற்று.

2. ஷாஆலத்திற்குத் தெய்வத் தன்மை பொருந் திய ஒரு குதிரை கிடைத்தது. அது கிடைத்தபோது, தெய்வத்தின் அருள் பெற்ற ஒருவனே அதை ஏறி நடத்தும் உரிமை பெறுவான் என்பதையும் ஷா ஆலம் அறிந்தான். அத் தகையவனைக் கண்டு உணர வேண்டும் என்று அவன் கருதினுன். அவன் கருத்து நெடு நாட்கள் வரையில் நிறைவேற வில்லை. 'செஞ்சி மன்னன் தேரணி சிங்கு என்பான் அக் குதிரையை ஏறி நடத்தும் ஆற்றல் உடையவன்' என்று அமைச் சர் கூற, ஓலை விடுத்து, அவனை ஷாஆலம் வரவழைத் தான்; அவன் வந்ததும், அவனிடம், குதிரையை ஏறி நடத்தினுல் நிரம்பப் பரிசில் பெறலாம் என்றும், தவறி னுல் ஏழாண்டுகள் சிறைவாசம் செய்ய வேண்டும் என்றும் கூறினுன். தேரணிசிங்கு குதிரையை ஏறி நடத்த முயன்றுன். ஆனுல் முடியவில்லை. எனவே, ஒப்பந்தப்படி அவன் சிறைப்பட்டான். அவன் தம்பி தரணி சிங்கு செஞ்சியை ஆண்டு வந்தான்.

3. குதிரையை அடக்கத் தேரணிசிங்கு சென்ற போது, அவன் மனைவி இராமாபாய் கருவுற்றிருந்தாள். பத்து மாதங்கள் கழிந்ததும், அவள் ஜயசிங்கு என்ற ஒரு மைந்தனைப் பெற்றாள். ஜயசிங்கைத் தேசிங்கு என்றும் அழைப்பது உண்டு.

4. ஐந்தாண்டு நிரம்பியதும், தன் தந்தை தேரணிசிங்கு சிறைப்பட்ட வரலாற்றை, ஜயசிங்கு, தன் தாய் மூலமாக அறிந்தான். உடனே அவன், தன் நண்பன் மகபத்கானுடன் டில்லிக்குச் சென்று, ஷாஆலம் வைத்திருந்த தெய்வக் குதிரையை அடக்கிச் சவாரி செய்துகாட்டிப் பரிசில்கள் பெற்றதோடு, தன் தந்தையையும் சிறையிலிருந்து மீட்டுக்கொண்டு செஞ்சியை அடைந்தான். தெய்வத்தின் திருவருள் பெற்றவன் ஜயசிங்கே என்பது உணர்ந்த ஷாஆலம் அவனிடம் மிகுதியாக மதிப்பு வைத்து, அவனை வழி கூட்டி அனுப்பினான்.

5. தேரணி சிங்கு, முன்போலவே செஞ்சியை ஆளத் தலைப்பட்டான்; ஆனால், தெய்வத்தின் திருவருள் பெற்ற மைந்தன் இருக்கத் தான் அரசனாக இருத்தல் அடாது என்று உணர்ந்து, ஜயசிங்கு ஏழாம் வயது எய்தியதும், அவனுக்கே பட்டம் சூட்டினான். ஜயசிங்கு பட்டம் சூடிய மூன்றாம் மாதத்தில், அவனுடைய தாய் விண்ணுலகு எய்தினாள். அவனுடைய எட்டாம் வயதில், தந்தையும் விண்ணுலகிற்கு விருந்தாளியானான். அவன் இளையவனாக இருந்தபடியால், அவன் சிற்றப்பன் தரணி சிங்கே அரசாங்க அலுவல்களைக் கவனித்து வந்தான். ஜயசிங்கு பதினெட்டாம் வயதை அடைந்தான். தெய்வக் குதிரையை அடக்கிய நாள் முதல், தன் மகள் பதுமினியை ஜயசிங்கிற்கே கொடுத்து

மணம் செய்து வைக்கவேண்டும் என்று கருதியிருந்த, ஷாஆலம் சேனைத் தலைவனாகிய பீம் சிங்கு என்பான், அவன் பதினெட்டாம் வயதை அடைந்ததும், தன் கருத்தை நிறைவேற்றிக் கொண்டான். அது முதல் ஜயசிங்கே அரசாளும் முழுப் பொறுப்பையும் தாங்கிநின்ருன். அதன் பின், நான்காண்டுகள் கழிந்ததும் ஷாஆலம் இறந்தான்.

6. ஷாஆலத்திற்குப் பிறகு, பருக்ஸியர் என்பான் டில்லி சக்கவர்த்தியானுன். அப்போது, ஆர்க்காட்டைச் சைதுல்லாகான் என்பவன், டில்லி சக்கரவர்த்தியின் ஆளுகையின் கீழ் ஆண்டு வந்தான். ஜயசிங்கின் வெற்றிப் புகழ்களைக் கேட்டுப் பொருமை கொண்ட சைதுல்லாகான் பாளையப்பட்டுக்களையெல்லாம் துணையாகச் சேர்த்துக்கொண்டு, அவனைப் போரில் வலிய இழுத்து அழிக்க எண்ணங் கொண்டான்; எனவே, தோன்றமல்லன் என்பானைத் தூதாக அனுப்பி, ஜயசிங்கு தனக்கு அடங்கியவன் என்றும், அவன் நெடுநாட்களாகச் செலுத்தாத வரிப் பணத்தை உடனே செலுத்தவேண்டும் என்றும் கூறுமாறு சொன்ஞன். தோன்றமல்லன் தூது உரையைக் கேட்ட ஜயசிங்கு சீற்றம் கொண்டு, 'போர் முனையில்-தான் சைதுல்லாகான் வரிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்' என்று பதில் கூறினுன். சைதுல்லாகான், உடனே, தாவுத்கான் என்ற சேனைத் தலைவனைப் பாளையக்காரர்களுடன் சென்று, ஜயசிங்கின் மீது போர் தொடுக்கும்படி ஏவினுன்.

7. அப்போது, ஜயசிங்கின் சேனைத் தலைவனுகிய மகபத்கான், தன் திருமணத்தை முடித்துவர வழுதாவூருக்குச் சென்றிருந்தான். அவனுக்குச் சைதுல்லாகான் படையனுப்பிய செய்தியை, ஜய

சிங்கு, ஓர் ஆள் மூலமாகத் தெரிவித்தான். தன் நண்பனுக்கு உற்ற இடுக்கணைப் போக்குவதே தன் முதற் கடமை என்று கருதிய மகபத்கான், தான் கொண்டிருந்த மணக் கோலத்தை உடனே களைந் தெறிந்து, தாலி கட்டுவதை விடுத்து, விரைந்து வந்து தாவுத்கானை எதிர்த்தான்; வெற்றியும் பெற்றான். ஆனால், செஞ்சி நோக்கித் திரும்பி வரும்போது, அவனைத் தாவுத்கான் மறைந்து நின்று சுட்டு வீழ்த்தினான்.

8. தன் நண்பன் உயிரைக் கவர்ந்த வஞ்சகன் செயலைக் கேட்டதும், ஜயசிங்கு ஆற்றொணாத் துன் பமும் சீற்றமும் ஒருங்கே கொண்டு படையெடுத்துச் சென்று, தாவுத்கானைக் கொன்று வீழ்த்திச் சைதுல்லா கானைத் தேடித் திரிந்தான். சமாதானம் விரும்பிச் சைதுல்லாகான் தோன்றமல்லனை ஜயசிங்கிடம் தூதாக அனுப்பினான். ஜயசிங்கு இணங்கவில்லை. போர் மூண்டெழுந்தது. போரில் வெற்றி பெற முடியாது என்பதுணர்ந்த சைதுல்லாகான், ஒரு வீரனுக்குத் தன்னைப்போல் மாறுவேடம் புனைவித்து அவனைப் போருக்கு அனுப்பிவிட்டு, ஓடி ஒளிந்து கொண்டான். போர் வீரனை நவாபு என்றே எண்ணி, அவன் மீது பாய்ந்து, அவன் கையை வெட்டி வீழ்த்திய ஜயசிங்கினிடம், அவன் உண்மையை உணர்த்தி உயிர் தப்பி ஒழிந்தான்.

9. சைதுல்லாகான் படைவீரர்கள் ஜயசிங்கின் முன் நிற்றல் ஆற்றாது, புறமுதுகு காட்டி ஓடி ஒளிந் தார்கள். பின், ஜயசிங்கு தனித்து நின்று, "நண் பன் மகபத்கானே விண்ணுலகு எய்தினான். எதிரி சைதுல்லாகானே வெட்கமின்றி ஓடி ஒளிந்து கொண்டான். போருக்கு எதிர் நிற்போர் ஒருவரும்

இல்லை. உயிர்த்தோழனை இழந்து நகருக்குத் திரும்பி யாது பயன்?'' என்று தனக்குள்ளே எண்ணித் தன்னுயிரைத் தானே போக்கிக் கொண்டான்.

10. ஜயசிங்கு உயிர் மாய்த்துக் கொண்ட செய்தி, உடனே நகரெங்கும் பரவியது. தன் கணவனுடைய வீரச் செயலைக் கேட்ட பதுமினி பெருமையும் கலக்கமும் ஒருங்கே எய்தி அவனுடன் உடன் கட்டை ஏறினாள்.

11. ஜயசிங்கின் வீரத் தன்மையையும் அவன் மனைவி பதுமினி ராணியின் கற்பின் பெருமையையும் கண்ட சைதுல்லாகான் பெரிதும் இரங்கினான்; தன்



செய்கையைக் குறித்து மிகவும் நாணினான். பதுமினி உடன்கட்டை ஏறிய காட்சி அவனை நீங்காத் துயரத்திற்கு உள்ளாக்கியது. அவளுடைய பெயரை என்றும் அழியாமல் உலகில் நிலை நிறுத்தச் செய்வதே, தான் அவளுக்கு இழைத்த கொடும்

பாவத்திலிருந்து உய்யும் வழி என்பது உணர்ந்த சைதுல்லாகான், அவளுடைய நினைவுச் சின்னமாக இராணிப் பேட்டை என்ற ஓர் ஊரை நிறுவினன். அவன் காலத்தில் இருந்த புகழேந்திப் புலவர், ஜய சிங்கின் பெயர் என்றும் உலகில் நின்று நிலவுதல் வேண்டுமென்று கருதி, தேசிங்கு ராஜன் கதை என்ற ஒரு நூல் இயற்றினர். அஃது எளிய நடையில் இயன்று, யாவராலும் படித்து இன்புறும் தன்மையதாய், ஜயசிங்கின் வீரத்தைக் குன்றின்மீது வைத்த விளக்கொளிபோல் விளக்கி நிற்கிறது.

### அருஞ்சொற்பொருள்

பதி - ஊர் அல்லது நகரம். உரிமை - சுதந்தரம். கருவுற்றிருந்தாள் - கர்ப்பமாய் இருந்தாள். அடாது - பொருந்தாது. 'விண்ணுலகு எய்தினன்', 'விண்ணுலகிற்கு விருந்தாளியானன்' —இறந்தான் என்பதைக் குறிக்கும் மங்கலச் சொற்றொடர்கள். சீற்றம் - மிக்க கோபம். திருமணம் - கலியாணம். இடுக்கண் - துன்பம். ஆற்ருெணு - பொறுக்க முடியாத. மூண்டெழுந்தது - மிக்குத் தோன்றியது. உடன் கட்டை ஏறுதல் - கணவன் உடல் எரிக்கும் ஈமத் தீயில் மனைவியும் விழுந்து உயிர் விடல். துயரம் - வருத்தம்.

I. விடை தருக :—

(1) தேரணி சிங்கு ஏன் சிறைப்பட்டான்? எவ்வாறு சிறை நீங்கினன்?

(2) ஜயசிங்கிற்கும் சைதுல்லாகானுக்கும் ஏன் போர் மூண்டது?

(3) ஜயசிங்கு ஏன் தன்னுயிரைத் தானே போக்கிக் கொண்டான்?

(4) இராணிப் பேட்டை எவ்வாறு தோன்றியது?

(5) ஜயசிங்கின் கதையைப் பாடியவர் யார்? அந்த நூலின் பெயர் யாது?

II. எதிர் மொழி கூறுக :—

உரிமை, அடாது, சீற்றம், பாவம்.

III. வாக்கியங்களில் அமைக்க :—

நீர்வளம், விண்ணுலகிற்கு விருந்தானன், ஆற்ருெணு, உடன் கட்டை ஏறல், நின்று நிலவுதல், குன்றின் மீது வைத்த விளக்கொளி.

# 6. கிராமத் தொழில்கள்

1. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினர் பாரதியார். உழவுத் தொழிலும் மற்றத் தொழில்களும் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. உழவும் பிற தொழில்களும் நடைபெருவிட்டால் நாட்டில் விளைவு ஏற்படாது; பொருட் பெருக்கம் உண்டாகாது. தொழில்கள் நடைபெற்ருல்தான் நாட்டில் வறுமை ஒழிந்து செல்வம் மிகும்.

2. உழவுத் தொழிலும் ஆலைத் தொழில்களும் நாட்டில் பெருவாரியாக நடைபெறும் தொழில்கள். இவற்றை மட்டும் வளர்த்தால் எல்லா மக்களுக்கும் எல்லா நலன்களும் ஏற்படமாட்டா. மக்கட் பெருக்கம் மிகுந்துள்ள நம் நாட்டில் ஆலைத்தொழில்களையே மிகுதியாக வளர்த்தால், எல்லா மக்களுக்கும் வேலை கிடைக்காது; பெருவாரியான மக்கள் வேலை இல்லாமல் திண்டாடுவர். கிராமக் கைத்தொழில்களைச் சிறப்புற வளர்த்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்; கிராம மக்களுக்குப் போதுமான வருவாய் ஏற்படும்; தேவையான நன்மைகளெல்லாம் எல்லோருக்கும் கிடைக்கும்.

3. கிராமங்களில் உழவுத்தொழில் நடைபெறுங் காலம் ஆண்டொன்றுக்கு ஆறுமாதங்களே. உழுது, எருவிட்டு, விதை விதைத்து, நீர் பாய்ச்சிக் களை யெடுத்து அறுவடை செய்யும் காலம்போக, எஞ்சியுள்ள பொழுது வீணுகவே கழிகிறது. அவ்வாறு வீணுகக் கழியும் காலத்தில், வீட்டில் இருந்தபடியே சில தொழில்கள் எளிதில் செய்யலாம். இவ்வாறு

செய்யும் தொழில்களையே பொதுவாகக் குடிசைத் தொழில்கள் என்று அழைக்கின்றோம்.

4. ஓய்வு நேரங்களில் மிகவும் எளிதாகச் செய்யக்கூடிய தொழில் நூல் நூற்பதாகும். ஆண்களும் பெண்களும், பெரியவர்களும் சிறியவர்களும் இத் தொழிலைச் செய்யலாம். பஞ்சையடித்துப் பண்



படுத்திப் பின் நூல் நூற்கவேண்டும். நூல் நூற்பதற்கு விலை மிக்க பெரிய கருவிகள் தேவையில்லை. இரும்புக் கம்பிகளில் சிறு சக்கரங்கள் கோத்துச் செய்யப்படும் கதிர்களும் (தக்ளிகளும்), கை இராட்டினங்களும் கொண்டு நூல் நூற்கலாம். இவற்றிற்கு மிகுதியான பொருள் தேவையில்லை.

5. கையால் நூற்கும் நூலினால் தறிகளைக் கொண்டு நெய்யும் துணிகள் கதர்த் துணிகள் எனப்படும். தறிகள் அமைத்துக் கொள்வதற்கு மிகுதியாகப் பொருளும் இடமும் தேவையில்லை.

இத் தகைய தறிகள் ஒவ்வொரு கிராமத்திலும் மிகுதியாக இருந்தால், எத்தனையோ மக்களுக்கு வேலை கிடைக்கும். ஆலைகள் மிகுதியாக ஏற்படுத்துவதனால் கிராம மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நிரம்ப ஏற்படுகின்றது. மிகப் பழைய காலத்தில், கையினாலேயே நூல் நூற்றுத் தறியினாலேயே துணி நெய்து மிக மிக மென்மையான ஆடைகளை யெல்லாம் உண்டாக்கி வந்தார்கள் என்று நூல்களில் படிக்கிறோம். நீராவி போன்ற மிக மென்மையான நூலாடைகளைத் தம் கைவன்மையாலேயே மிகப் பழங்காலத்தில் மக்கள் உண்டாக்கி வந்தார்கள். அத்தகைய கைவன்மை, எந்திரத் தொழில் வளர்ச்சியால் அடியோடு அழிந்துவிட்டது. அது, நாட்டுக்குப் பெரு நஷ்டமே யாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், கைவன்மையைப் பாதுகாக்கவும், மகாத்மா காந்தி அடிகளார், கையினாலேயே நூல் நூற்கவும் அந்த நூலைக்கொண்டு கைத் தறிகளில் நெய்யப்படும் கதராடைகளையே அணியவும் வேண்டும் என்று அறிவுரை புகன்று அரும்பாடு பட்டு வந்தார்.

6. எந்திரங்களினால் விரைவாக நூற்கப்படும் நூலைக்கொண்டும் தறிகளில் துணி நெய்யலாம். இத் தகைய துணிகளுக்குக் கைத்தறித் துணிகள் என்று பெயர். கிராமங்களில் இவ்வாறு நூல் வாங்கித் தறிகளில் துணி நெய்து பல மக்கள் பிழைத்து வருகிறார்கள்.

7. கூடை முறங்கள் கட்டுதல், கீற்று முடைதல், கயிறு திரித்தல், வண்டிகளுக்குத் தட்டி பின்னுதல் முதலிய குடிசைத் தொழில்களும் கிராமங்களில் நடைபெறும் சிறந்த தொழில்களாம். இவைகளை

யெல்லாம் வேடிக்கையாகக் கதைகளைப் பேசிக் கொண்டே பொழுது போக்காகக் கிராமவாசிகள் செய்து வருகிறார்கள். மூங்கில் பத்தைகளால், கூடை முறங்கள் பின்னிக் கட்டப்படுகின்றன. தட்டிகளும், மூங்கில் பத்தைகளாலேயே பின்னப்படுகின்றன. பனைநார், தேங்காய்மட்டை நார், சணல், கற்றாழை நார் இவற்றைக் கொண்டு கயிறு திரிக்கும் தொழில் நடைபெறுகின்றது. முற்றிய கோரைகளை அறுத்து உலர வைத்துப் பதமாக்கிப் பாய் முடைகிறார்கள். ஏரிக்கரைகளில் காடுகளாக அடர்ந்து வளர்ந்து கிடக்கும் பிரம்புகளைக் கொண்டும் கூடை நாற்காலி முதலியவற்றைச் செய்கிறார்கள்.

8. பொழுது போக்காகச் சிறு பொம்மைகள்



செய்வதும் ஊதியம் தரும் தொழிலாகும். மண்ணாலும் மரத்தாலும் விலங்குகளின் கொம்புகளாலும்

அழகான பொம்மைகளைச் செய்து விற்றால் ஏராள மான பொருள் கிராம மக்களுக்குக் கிடைக்கும்; கலைத்திறமும், கைத்திறமும் வளரும்.

9. நம்முடைய அன்றாடத் தேவைக்கு இன்றி யமையாத மட்பாண்டங்களைச் செய்வதும் கிராமக் கைத்தொழில்களுள் ஒன்றாகும். பாண்டங்கள் செய் வதற்குத் தகுதியான மண்ணெடுத்துப் பிசைந்து சக்கரங்களில் வைத்துச் சுற்றிச் சட்டி, பானை, குடம், மிடா, சால், தாழி முதலியவற்றைக் குயவர்கள் செய்து வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ் வாறு செய்த பாத்திரங்களை உலர்த்திக் காயவைத்துச் சூளையாக அடுக்கிக் கட்டைகள் கொண்டு நெருப் பிட்டுச் சுடுவார்கள். சுட்ட பிறகு அவை நீர் மொள்ளவும், சமையல் செய்யவும், தானியங்களைக் கொட்டி வைக்கவும் உபயோகப்படும். மட்பாண்டங் களில் உணவைச் சமைத்துச் சாப்பிட்டால் உடலுக் குப் பல நன்மைகள் விளையும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். மட்பாண்டங்களில், காய்ச்சிய நீரை ஊற்றிச் சிறிது நேரம் வைத்திருந்தால், அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். கோடைக்காலத்தில் இவ் வாறு மட்பாண்டத்தில் கிடைக்கும் தண்ணீரைக் குடிப்பது மிகவும் இன்பமாக இருக்கும்.

10. தச்சுவேலை, கருமாரவேலை, கொல்லத்து வேலை முதலியனவும் மட்பாண்டவேலை போலக் கிரா மத்தின் அடிப்படையான வேலைகளாகும். தச்சு வேலையால்தான், உழவுக் கருவியான கலப்பை, நுகத் தடி, வண்டி, பரம்பு முதலியன செய்யப்படுகின்றன. வீட்டின் மேற் கூரைகளில் அமைக்கப்படும் மரவேலை களும், வீட்டிற்குத் தேவையான பெட்டிகள், நாற் காலி, விசிப்பலகை, ஊஞ்சல், பீரோ, அலமாரிகள்

முதலியனவும் தச்சுத் தொழிலாலேயே உண்டாகின்றன. இவற்றை யெல்லாம் தச்சுத் தொழிலைத் தம் குலத் தொழிலாகச் செய்துவரும் தச்சர்கள் அழகாகச் செய்து தருகிருர்கள்.

11. கருமார், இரும்பை உலையில் காய்ச்சி அடித்துப் பண்படுத்திப் பல வகையான பொருள்களைச் செய்து தருகிருர்கள். கலப்பைக்குக் காறு, களையெடுக்கக் களைகொட்டு, மண்ணை வெட்ட மண்



வெட்டி, கிணறு எடுக்கக் கட்டபாறை, அறுவடை செய்ய அரிவாள், மரத்தை வெட்டக் கத்தி கோடரி, கிணற்றிலிருந்து நீர் இறைக்க ஏற்றச்சால் முதலான பொருள்களைக் கருமார்களே செய்து தருகிருர்கள். வண்டிச் சக்கரங்களுக்குக் கட்டு அமைத்தல், கடையாணி செய்து மாட்டல் முதலியனவும் அவர்கள் செய்யும் தொழில்களே.

12. கொல்லத்துக்காரர்கள் மக்கள் குடியிருக்க வீடும், மாடுகள் தங்கக் கொட்டகையும் கட்டுபவர்கள். கிணற்றின் கட்டடமும், பாலங்கள் முதலியனவும் அவர்களால் செய்யப்படும் தொழில்களே.

13. மேலே கூறிய தொழிலாளர்கள் யாவரும் கிராமங்களில் நிலங்களுக்கும் சொந்தக்காரர்களாக இருந்து, உழவுத் தொழிலால் பயிர் விளைத்துக் கொண்டும் ஒழிந்த நேரங்களில் மற்றத் தொழில்களைச் செய்துகொண்டும் வாழ்கிறார்கள். அவ்வாறு இருப்ப தால்தான் அவர்களுக்கெல்லாம் வாழ்க்கைக்குப் போதுமான வருவாய் கிடைக்கிறது.

14. எந்திரங்கள் மிகுதியாக ஏற்பட ஏற்பட, கிராமத் தொழில்கள் கைவிடப்படுகின்றன. இதற்குக் காரணம் எந்திரங்களால் உண்டாக்கப்படும் பொருள் கள் குறைந்த விலைக்கு விற்பதே யாகும். கிராம மக்களின் ஏழ்மை நிலையைக் கவனித்து, அவர்கள் தொழிலைக் கைவிடாமல் செய்வதற்குச் சமூகம் ஆவன செய்யவேண்டும். எந்திரங்களைக் குறைத்துக் கூட்டுறவு இயக்க முறைகளைக் கிராமங்களில் ஏற் படுத்தித் தொழிலாளர்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்கவும், உற்பத்தியாகும் பொருள் களை விற்பனை செய்யவும் வசதிகள் செய்து தந்தால் கிராமத்தொழில்கள் வளர்ச்சியடையும்.

### அருஞ்சொற்பொருள்

வந்தனை - வாழ்த்தி வணங்குதல். இன்றியமையாதன - அவசியமாவன. வறுமை - ஏழ்மை; தரித்திரம். ஆலைத் தொழில் - எந்திரத்தொழில். நலன் - நன்மை. எஞ்சியுள்ள - மிகுந்துள்ள. பண்படுத்தி - பக்குவப்படுத்தி. ஆடை - துணி.

I. விடை தருக :—

(1) தொழில்கள் நடைபெறுவிட்டால் யாதாம்?

(2) ஆலைத்தொழிலை வளர்ப்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை ?

(3) கதர்த்துணி எவ்வாறு செய்யப்படுகிறது ? அதன் சிறப்பு யாது ?

(4) குடிசைத் தொழில்கள் என்றால் என்ன ?

(5) மட்பாண்டங்களை எவ்வாறு செய்கிறார்கள் ?

(6) தச்சுவேலை, கருமாரவேலை—இவற்றால் கிராமங்களுக்கு உண்டாகும் அடிப்படையான நன்மைகள் யாவை ?

II. எதிர்மொழி தருக :–

வறுமை, நலன், ஆலைத்தொழில், தகுதியான, மிகுதி.

III. வாக்கியங்களில் அமைக்க :–

மக்கட்பெருக்கம், குடிசைத்தொழில்கள், கதர்த்துணிகள், குலத்தொழில், மூலப்பொருள்.

IV. கிராமத் தொழில்களுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

V. குடிசைத் தொழில்களுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

# 7. செஞ்சிக்கோட்டை

1. முன் ஒரு பாடத்தில் ஜயசிங்கு மன்னனைப் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அம் மன்னனும் அவனுடைய முன்னோரும் பகைவர்களுக்குச் சிறிதும் அஞ்சாது இருந்து ஆள்வதற்குப் பாதுகாவலாக அமைந்திருந்த இடமே செஞ்சிக்கோட்டை யாகும். இப்போது, அது பாழடைந்து சீர்குலைந்து கிடக்கிறது. என்றாலும், இன்றும் அதில், பழம் பெருமைகள் எல்லாம் அறிந்து வியத்தற்குரிய சின்னங்கள் பல உள்ளன. உள்நாட்டிலும் வெளி நாட்டிலு மிருந்து, சிறப்பாக வரலாற்று ஆசிரியர் களும், பொதுவாக மற்றவர்களும், அக் கோட்டை யின் சிறப்பைக் கண்டு, அதனால் அதில் இருந்து ஆண்ட மன்னர்களின் திறமையைத் தெரிந்து கொள்ள வருகிறார்கள்.

2. சென்னை—விழுப்புரம் நீராவி வண்டிப் பாதையில் உள்ள திண்டிவனம் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவில் அப் பழைய கோட்டை இருக்கிறது. திண்டிவனத்திலிருந்து பஸ் வண்டி வசதியுள்ளது; திருவண்ணாமலையிலிருந்தும் பஸ் வண்டி மூலமாகச் செஞ்சிக் கோட்டையை அடையலாம். திருவண்ணா மலையிலிருந்து செஞ்சிக்கோட்டைக்கு உள்ள தூரம் சுமார் 18 மைல்.

3. இப்போது அப் பழங்கோட்டையின் அருகில் அரை மைல் தொலைவில் செஞ்சி என்ற ஒரு சிற்றூர் உள்ளது. செஞ்சி தாலுக்காவில் தலைமை வாய்ந்த ஊராக அவ்வூர் உள்ளது. அங்கே, அரசாங்க அலுவலகங்கள் இருக்கின்றபடியால், சுற்றுப்புறத்தி

லிருந்து, மக்கள் அவற்றிற்கு வந்து போனபடி இருக்கிறார்கள். அதனால், அது ஜன நெருக்கம் உள்ளதாகக் காணப்படுகிறது. ஆனால், உண்மையில் அஃது ஒரு சிற்றூரே.

4. செஞ்சிக்கோட்டை, இயற்கை வளம் அமைந்த மூன்று மலைகளின் இணைப்பால் ஆனது. அம் மலைகள்—சந்திரகிரி, இராஜகிரி, கிருஷ்ணகிரி என்பனவாகும். இவற்றுள் சந்திரகிரி இப்போது சக்கிலி மலை என வழங்கப்படுகிறது.



5. செஞ்சிக்கோட்டைப் பிரதேசம் இப்போது ஏறத்தாழ ஐந்து மைல் சுற்றளவாகக் கிடக்கிறது. இதன் தெற்கில் உள்ளது சந்திரகிரி. இராஜகிரி தென் மேற்கில் உள்ளது. கிருஷ்ணகிரி வடக்கில் உள்ளது. சந்திரகிரியையும் கிருஷ்ணகிரியையும், சுமார் 30 அடி உயரமுள்ள ஒரு மதில், கிழக்குப் பக்கமாக இணைக்கிறது. அதன் வெளியே ஓர் அகழியுள்ளது. இராஜகிரியும் கிருஷ்ணகிரியும் அவ்வாறே மேற்கில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இணைப்பிற்கு வெளி

யிலும் அகழி உண்டு. ஆனால், முன்பு பகைவர்களுக்கு அச்சம் தந்த மதிற் சுவர், இப்போது பல இடங்களில் சரிந்தும் விழுந்தும் கிடக்கிறது ; அகழ், ஆடுமாடுகளும் சென்று தம் விருப்பம்போல் மேய்வதற் கேற்ற இடமாகத் தூர்ந்து கிடக்கிறது. மலைகளின் மீதும் அடிவாரங்களிலும் பல கட்டடங்கள் சிதைந்து கிடக்கின்றன.

6. செஞ்சிக்கோட்டையை அடைவதற்குப் பல வாயில்கள் உண்டு. அவற்றுள் ஒன்று புதுச்சேரி வாயில். இந்த வழியாக உள்ளே சென்றால், இராஜகிரி மலையைச் சார்ந்த கட்டடங்களைக் காணலாம். இந்த வாயிலில், பாதுகாவலுக்கு அமைந்த மறைவான அறைகளும், பகைவர்கள் கண்களில் படாதபடி இருந்து கொண்டு அவர்களைச் சுடுவதற்கு வசதியான ஏற்பாடுகளும், பழைய அரசர்களின் திறமையை இன்றும் விளக்கிக்கொண்டிருக்கின்றன. மலையடிவாரத்தில், உள்ளே சிலையில்லாத ஒரு கோயிலும் சிறிய மசூதியொன்றும் பாழடைந்து கிடக்கின்றன. அக் கோயிலை வேங்கடராமன் கோயில் என்கிறார்கள். மலைமேல், பல கோயில்கள் பாழடைந்துள்ளன. ஒன்றிலாவது சிலையில்லை. அடிவாரக் கோயிலிலுள்ள, கிணறு ஒன்று, சூரியன் ஒளி படாவிடினும் தெளிந்த நீருடன் இன்றும் அழகாகவே உள்ளது.

7. கோயிலையும் மசூதியையும் கடந்து உள்ளே செல்ல இராஜகிரிக்கு ஒரே வழிதான் உள்ளது. அங்கே ஐந்து பாழ் மண்டபங்கள் உள்ளன. அவற்றிற்கு அப்பால் ஒரு பெரிய பரந்த வெளி காணப்படுகிறது. அவ் வெளியே, முற்காலத்தில், அரசர்கள் தங்கள் மனைவி மக்களுடன் சிறப்பாக வாழ்ந்து வந்த இடம் என்கிறார்கள். அங்கே, கலியாண மஹால்

என்ற ஒரு செங்கற் கட்டடம் இன்றும் அழகாகக் காட்சி யளிக்கிறது. இஃது ஏழு அடுக்குக்களால் ஆனது. இதுவேசெஞ்சிக்கோட்டைக்கட்டடங்களுள் தலை சிறந்தது. இதன் படிக்கட்டுகள், ஒரே நேராக இல்லாமல் வளைந்து வளைந்து அமைந்துள்ளன. இம் மஹாலுக்கு எதிரிலும் மேற்கிலும் பல குதிரை இலாயங்கள் வரிசை வரிசையாக உள்ளன. இதற்குத் தெற்கேயுள்ள மண்மேடு அந்தப்புரம் இருந்த இட மென்றும், மேற்கேயுள்ள மண்மேடு ஆடவர்கள் இருந்த அரண்மனைப் பகுதியென்றும் தெரிகின்றன. அரண்மனைக்கும் அந்தப்புரத்திற்கும் இடையில் சுரங்க வாயில்கள் இப்போதும் உள்ளன. அரண் மனைப் பகுதிக்குத் தெற்கே ஆனைக்குளம் என்ற பெரிய குளம் ஒன்று சுற்றிலும் அழகிய மண்டபத் தோடும் ஒரு மூலையில் அரண்மனைக்குச் செல்லும் மறைவான வழியோடும் உள்ளது. குளத்தினருகே அரச குடும்பத்தைச் சார்ந்த வீரர்கள் உடற்பயிற்சி செய்வதற்கென ஒரு சிலம்பக் கூடம் இருக்கிறது. அங்கே, சுமார் ஆறடி சுற்றளவும் எட்டு அடி நீளமும் கொண்ட உருளைக்கல் ஒன்று காணப்படுகிறது.

8. சிலம்பக்கூடத்திற்கு மேற்கே மூன்று பெரிய அறைகள் அமைந்த களஞ்சியம் காணப்படுகிறது. அவற்றில், முறையே நெல், கம்பு, கேழ்வரகு இவற்றைக் கொட்டி வைப்பார்களாம். நெற் களஞ்சியத்திற்குக் கிழக்கே வெடிமருந்து சேகரித்து வைப்பதற்கென் ஒரு பெரிய மூடு கிணறு காணப் படுகிறது. அதன் தென்மேற்கே ஒரு கோயிலும் கூடமும் உள்ளன. அங்குள்ள ஒரு வாயிலைக் கடந்து வெளியே சென்றால், சிறிது தூரத்தில் இரண்டு குளங்களை அடையலாம். ஒரு குளக்கரை

யில் கருங்கல் மேடை ஒன்று உள்ளது. இவற்றை யெல்லாம் கண்டு, பின், இராஜகிரி மலைமீது ஏற வேண்டும்.

9. இராஜகிரி, சுமார் 600 அடி உயரமுள்ள செங்குத்தான மலையாகும். இதன்மீது செல்லும் வழியில், தங்குவதற்குரிய மண்டபங்களும், நீர்ச்சுனை களும், கோயில்களும் உள்ளன. இம் மலையிலிருந்து புதுச்சேரிக்குச் செல்வதற்கு என, ஒரு சுரங்க வழி யுண்டு. ஆனால், அது சிதைந்து புதைபட்டுக்



கிடக்கிறது. வழி முழுதும் பழ மரங்களும், பாறை களின் மீது தேன் கூடுகளும் உள்ளன. இவ்வளவும் கடந்து சென்றால் சுமார் 30 அடி இடைவெளியாகப் பிளவுபட்ட பெரும் பாறைகளை இணைக்கும் ஒரு மரப் பாலம் இருக்கிறது. பாலத்திற்குக் கீழே, சுமார் 60 அடி ஆழமுள்ள ஒரு பெரும்பள்ளம் காணப்படுகிறது. இந்தப் பாலம் பகைவர்கள் வரும்பொழுது எடுத்து விடப்படுமாம். ஆதலால், இந்த ஏற்பாடு இயற்கை

யாலும், செயற்கையாலும் செஞ்சிக்கோட்டைக்கு அமைந்த சிறந்த அரணுகும். பாலத்தைக் கடந்து சென்ருல், செங்குத்தான இடத்தை அடையலாம். அங்கே, ஒரு நெற் களஞ்சியம், ஒரு காவல் மண்டபம், ஒரு பணக் களஞ்சியம் இவை முக்கியமாகப் பார்ப்பதற் குரிய இடங்களாகும். அங்கே, மிகவும் வியக்கத்தக்க ஒரு தெளிவான நீர்ச்சுனையும், அதனருகே ஒரு கொடி மேடையும் உள்ளன. நீர்ச் சுனையின் அடியில் இருக்கும் பொருள்கள் நன்ருகத் தோன்றும். கொடி மேடையில் இருந்த கம்பத்தில் கொடி கட்டினுல், செஞ்சிப்பகுதி முழுதும் அது தோன்றும் என்கிருர்கள்.

10. மணிக்கூண்டு ஒன்று, அங்கே பார்த்தற் குரிய ஒரு முக்கிய இடம். அதில் மிகுந்த ஓசையெழுப்பும் ஒரு பெரிய மணியும், பொழுது அறியும் ஒரு கருவியும் இருந்தன என்று சொல்லுகிருர்கள். அவை இப்போது இல்லை. அக் கருவியால் நேரம் அறிந்து, அந்த மணியினுல் ஓசை எழுப்புவார்களாம். அவ் வோசை செஞ்சி முழுதும் கேட்குமாம். அத் தகைய சிறந்த மணி, இப்போது புதுச்சேரியில் இருக்கிறது என்று கேள்வி.

11. இராஜகிரிக்கு வடக்கே, அதற்கு எதிராகச் சிறிது தூரத்தில், கிருஷ்ணகிரி உள்ளது. அதன் மேல் ஏறுவதற்குப் படிக் கட்டுக்கள் உள்ளன. அதற்குச் செல்லும் வழியில், ஆங்காங்கே வீரர்கள் காவல் புரிந்த கட்டடங்களின் சின்னங்கள் உள்ளன. இந்தக் கிருஷ்ணகிரி, இராஜ, கிரியின் பாதி, அளவிற்கு மேல் சிறிதே உயரமானது. இது, சின்னமலை என்றும் அழைக்கப் படுகின்றது. இதன் உச்சியில், நெற்களஞ்சியம் ஒன்றும்,

எண்ணெய்க் கிணறு ஒன்றும் உள்ளன. அக் கிணறு இரண்டு பகுதியாக அமைந்துள்ளது. அவற்றுள் ஒன்றில் எண்ணெயும், மற்றொன்றில் நெய்யும் சேர்த்து வைப்பது வழக்கமாம். சிலையில்லாத அரங்கநாதர் கோயில் இங்கே உள்ளது; ஒரு சுனையும் உள்ளது ; உச்சியில் காற்றோட்டமுள்ள ஓர் அரசவை மண்டபம் பார்ப்போர் மனத்தை உருக்குவதாய் இருக்கிறது.

12. சக்கிலி மலை என்று வழங்கும் மற்றொரு மலை, ஏறுவதற்கு மிகவும் கடினமானது. இதில் சில இடிந்த மண்டபங்கள் தவிரப் பார்க்கக் கூடிய சிறந்த பொருள்கள் ஒன்றுமில்லை.

13. இவையெல்லாம் நிறைந்த செஞ்சிக் கோட்டையை, நேரில் சென்று பார்ப்போமானால், அதைப் பற்றிய பழங்காலச் சரித்திரத்தை நாம் உணர்ந்துகொள்ள நல்ல வாய்ப்பு உண்டாகும். பழங் காலத்து அரசர்கள், நாகரிகத்திலும் அறிவிலும் ஆற்றலிலும் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தார்கள் என்பது செஞ்சிக்கோட்டையைச் சென்று பார்ப்பதால் தெளிவாக விளங்கும். இறுதியில்,

“ எழுநிலை மாடம் கால்சாய்ந்து உக்குக்
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும் ”

என்ற வெற்றிவேற்கைப் பகுதி நினைவிற்கு வாராமல் போகாது.

அருஞ்சொற் பொருள்

மன்னன் - அரசன். வியத்தற்கு - ஆச்சரியப்படுவதற்கு. சின்னங்கள் - அடையாளங்கள் ; குறிகள். புகைவண்டி நிலையம் - இரெயில் ஸ்டேஷன். இணைப்பு - சேர்க்கை. அலுவலகம் - வேலை

செய்யும் இடம். பிரதேசம் - பரந்த இடம். வாயில் - வழி. சிலை - விக்கிரகம். அந்தப்புரம் - அரசமகளிர் வாழும் இடம். ஆடவர்கள்- ஆண்மக்கள். சிலம்பக் கூடம் - உடற்பயிற்சி செய்யும் இடம். களஞ்சியம் - பண்டசாலை. உக்கு - உதிர்ந்து.

I. விடை தருக —:

(1) செஞ்சிக்கோட்டைக்கு எவ்வெவ் வழியாகச் செல்லலாம்?

(2) செஞ்சியூர் ஜனநெருக்கம் மிகுந்திருப்பதற்குக் காரணம் யாது?

(3) இராஜகிரியில் உள்ள சிறந்த காட்சிகள் யாவை?

(4) கிருஷ்ணகிரியில் பார்க்கத் தகுந்த முக்கியமான இடங்கள் யாவை?

II. கலியாண மஹால், மணிக்கூண்டு, சின்னமலை—இவற்றைப் பற்றிச் சுருக்கமாக வரைக.

III. வாக்கியங்களில் அமைக்க :—

பாழடைந்து, சீர்குலைந்து, சிலம்பக்கூடம்.

IV. சரித்திரப் புகழ் வாய்ந்த இடம் ஒன்றைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

# 8. மழை வருவிக்கும் வகை

1. மழை எப்படி உண்டாகின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா ? பெரிய நீர்நிலைகளான ஏரி, கடல் முதலிய வற்றின்மேல் சூரியனுடைய கதிர்கள் விழுந்தால், அவற்றின் மேல் பரப்பிலுள்ள தண்ணீர் வெப்பம் அடைந்து நீராவியாக மாறுகிறது. நீராவி யானது தண்ணீரைவிட இலேசானதால், அது மேலே கிளம்பி, வானில், வெண்மைநிற மேகப் படல மாக இயங்குகிறது. அவ்வாறு இயங்கும்போது, குளிர்ச்சியான காற்று அதன்மீது பட்டதும், வெண் ணிற மேகம் குளிர்ந்து கரு நிறமாகி மழையைப் பொழிகிறது.

2. ஓர் அறிவு முதல் ஆறறிவு ஈருக உடைய உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் மழை மிகவும் இன்றியமையாதது. மழை பெய்யாவிட்டால், ஒரு புல்லின் நுனியையும் நாம் காணமுடியாது. அப்படி யாயின், பயிர்களை விளைவித்தல் எவ்வாறு முடியும் ? பயிர்கள் விளையவில்லை என்ருல் உணவு ஏது ? எனவே மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ் வன எல்லாம் மடிந்தே ஆகவேண்டும்.

3. மழை பெய்யாத காலங்களில், மக்கள் படும் பாடு அளவிட்டுக் கூற இயலாதது. பாண்டிநாட்டில், ஒருகாலத்தில், பன்னிரண்டு ஆண்டுகள் மழை இல்லாது போனதால், அங்கிருந்த புலவர்கள் யாவரும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று உயிர்வாழ்ந்தார்கள் என்றும், அப்பொழுது பல தமிழ் நூல்கள் அழிந்து போயின என்றும் வரலாற்று நூல்களால் நாம் அறி கின்ருேம். கடந்த நாலைந்து ஆண்டுகளாகக் கால மழை பெய்யாது சுருங்கிவிட்டபடியால், நம் நாட்டில்

பல இடங்களில், குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லாமல் மக்கள் தத்தளிக்கிறார்கள் என்று நாள் தோறும் செய்தித்தாள்கள் மூலமாக அறிகிறோம்.

4. மழை உண்டாகும் வழி தெரிந்திருந்தும் நாம் விரும்புகின்றபோது நம்மால் மழை பெய்வித்துக் கொள்ள முடியவில்லை. வானத்தில் இயங்கும் மேகக் கூட்டங்களைக் குளிர்ச்சியாக்கினால் மழை பெய்யும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவற்றைக் குளிர்ச்சியாக்குவது எப்படி? இது குறித்து மேல் நாடுகளில் உள்ளவர்கள் இடைவிடாது ஆராய்ச்சி செய்து வந்தார்கள்.

5. மேகங்களைக் குளிர்ச்சியாக்க வேண்டுமானால், அவைகள் இருக்கும் இடத்தை நாம் முதலில் அடைதல் வேண்டும். இக் காலத்தில் வானவூர்திகளான ஆகாய விமானங்களில் ஏறிச் சென்றால், மேக மண்டலங்களையும் அடையலாம்; அவற்றிற்கு அப்பாலும் உயரச் செல்லலாம். இவ்வாறு உயரச் சென்று, ஒருவகை மருந்தை மேகங்களின்மீது தூவி மழை பெய்விக்கும் முறையை இரஷ்யர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால், இந்த முறையால் மழை உண்டாக்குவதற்கு மிகுதியாகப் பணம் தேவையாகிறது.

6. குறைந்த செலவில் மழை உண்டாக்குவதற்குரிய வழியைக் கண்டுபிடிக்க, அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் பல செய்து வந்தார்கள். அவர்களுள் எல். ஜி. ரிச்சர்ட்ஸ் என்பவர் ஆராய்ச்சியில் வெற்றி பெற்றார். அவருக்கு உலகமக்கள் அனைவரும் என்றென்றும் கடமைப்படுவார்கள்.

7. மழை உண்டாவதற்கு, ரிச்சர்ட்ஸ் கையாண்ட பல பொருள்களுள் மிகவும் தலையாயது

'ஐஸ்' கட்டியே. ஐஸ் கட்டியைச் சிறு சிறு துண்டு களாகச் செய்து கொள்ளுதல் வேண்டும். ஆனால் அவை தண்ணீராக உருகாமல் ஆவியாக மாறு வனவாக இருத்தல் வேண்டும். அவற்றை மேகக்



கூட்டத்திற்கு மேலே சென்று அதன்மீது தூவினால், உடனே அது மழையைச் சொரிந்துவிடும். போர்ட் லண்ட் வானநிலை ஆராய்ச்சி நிலையத்தில், தலைவர் கர்னல் எல்லிசன் என்பவரும், எல். ஜி. ரிச்சர்ட்ஸ் என்பவரும் வானவூர்தியில் மேகத் திரட்சிகளுக்கு மேலே சென்று இவ்வாறு தூவிப்பார்த்து மழை பெய் யும் காட்சி கண்டு வியப்படைந்தார்கள். இதற்கு ஆகும் செலவு மிகமிகக் குறைவேயாகும்.

8. அமெரிக்கர்கள் கண்ட முறையைப் பின் பற்றி, ஆஸ்திரேலிய விஞ்ஞானிகளும் வெற்றி கண் டிருக்கிறார்கள்.

9. நம் நாடு பயிர்த் தொழிலேயே மிகுதியாகக் கொண்டுள்ள நாடு. பயிர்த்தொழில் செய்வதற்குத் தகுதியான நிலங்கள் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், மழைவளம் குன்றினால் நிலங்களிலிருந்து விளைவு உண்டாக்க முடியாது. ஆகவே, அமெரிக்கர்களும் ஆஸ்திரேலியர்களும் மழையை உண்டாக்கும் வழியை ஆராய்ந்து அறிந்ததுபோல் நம் நாடும் ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றி பெற்றால், உலகம் முழுமைக்குமே நாம் உணவு அளிக்கமுடியும். எனவே நாம் இம் முறையில் கருத்துச் செலுத்திச் செயற்கையால் மழை வளம் பெறுவோமாக!

### அருஞ்சொற்பொருள்

கதிர்கள் - கிரணங்கள். உயிர்ப் பொருள்கள் - பிராணிகள். விலங்கு - மிருகம். வரலாற்று நூல்கள் - சரித்திரங்கள். செய்தித் தாள்கள் - பத்திரிகைகள். தலையாயது - முதலானது; சிறந்தது. வியப்பு - ஆச்சரியம். குன்றினால் - குறைந்தால்.

I. விடை தருக :-

(1) மழை எப்படி உண்டாகிறது?

(2) மேகக் கூட்டங்களைக் குளிர்ச்சியாக்குவதற்குக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள விஞ்ஞான முறைகள் யாவை? அவற்றுள் சிறந்தது யாது? ஏன்?

(3) மழை பெய்யாமையால் உண்டாகும் தீமைகள் யாவை?

II. எதிர்மொழி தருக :-

வியப்பு, குன்றுதல், தலையாயது.

III. வாக்கியங்களில் அமைக்க :-

இன்றியமையாதது, தத்தளிக்கிறார்கள், கடமைப்படுவார்கள், குன்றினால்.

## 9. சொன்னபடி செய்த முனியன்

1. பெரியசாமி என்ற ஒரு முதலாளியிடம் முனியன் ஒரு பணியாளாக அமர்ந்தான். அவனை வேலைக்கு வைத்துக்கொள்ளும் பொழுது, பெரியசாமி, "எதையும் நான் சொன்னபடி செய்யவேண்டும்; நீயாக ஒன்றையும் உன் விருப்பம்போல் செய்யவேகூடாது" என்று அவனிடம் கூறினான். முனியன் அவ்வாறே செய்வதாகப் பணிவுடன் கூறி, அவர் கட்டளையிட்டபடியே பிசகு ஒன்றும் இல்லாமல் பணியாற்றி வந்தான். நாளடைவில், தானும் ஒரு மனிதன் என்பதையும், தனக்கும் பகுத்தறிவு உண்டு என்பதையும் அவன் அடியோடு மறந்துவிட்டு, ஓர் எந்திரம் போல, முதலாளி யிட்ட வேலையையே முனியன் செய்து வரலானான்.

2. ஒருநாள் மாலையில், முதலாளி பெரியசாமி முனியனைக் கூப்பிட்டு, "அடே முனியா! அடுத்த அறையில் விளக்கைப்போடு" என்று கட்டளை யிட்டார். அவர் வீட்டில் மின்சார விளக்குக்கள் அமைக்கப்பட்டிருந்தன. மின்சார விளக்கு ஏற்று வதற்கு, ஒரு பொத்தானை மேலிருந்து கீழாக அழுத்த வேண்டும் அன்றோ! அவ்வாறு அழுத்துவதை, "ஸ்விட்ச் போடுதல்" என்றுதானே கூறுவது வழக்கம்! 'ஸ்விட்ச்போடு' என்று சொல்வதற்குப் பதிலாக, 'விளக்குப்போடு' என்று சாதாரணமாக யாவரும் வழங்குவதுபோலப் பெரியசாமி கூறினார். முனியன்தான் பகுத்தறிவைப் பறிகொடுத்து விட் டானே! அவன் அவருடைய ஏவலைக் கேட்டதும், சொன்னபடி செய்வதே தன்னுடைய வேலையாகும் என்பதை மட்டும் மனத்தில் கொண்டு, அடுத்த

அறைக்குச் சென்று, கூரையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த விளக்கைக் (Bulb) கழற்றிக் கீழே போட்டான். 'டமார்' என்ற ஒலி எழுந்தது. பெரியசாமி அதைக் கேட்டுத் திடுக்கிட்டு அடுத்த அறைக்கு ஓடினார். கண்ணாடித் துண்டுகள் காலில் தைத்தன. "என்னடா முனியா?" என்று உரக்கக் கேட்டார் முதலாளி. "தாங்கள் சொன்னபடி தானே விளக்கை அறையில் போட்டேன்!" என்று முனியன் அமைதியாகப் பதிலளித்தான். முதலாளி, நாணத்தால் தலை குனிந்தார். பிறகு, அவன் போக்கை நினைத்தபோது, அவருக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

3. மற்றொரு நாள், அவர் அவனிடம் ஓர் அணாக் கொடுத்து, "எனக்கு வயிறு சரியாக இல்லை; கடைக்குப் போய்ச் சோடா வாங்கி வா" என்று கட்டளையிட்டார். அவன் மளிகைக் கடைக்குச் சென்று, "ஓர் அணாவிற்குச் சோடா கொடுங்கள்" என்று கேட்டான். அக் கடைக்காரன் சோடா மாவைக் கொடுத்தான். அதைக் கொண்டு வந்து முனியன் முதலாளியிடம் நீட்டினான். "சோடாபுட்டி வாங்கி வராமல் சோடாமாவு வாங்கி வந்திருக்கிறாயே!. இதையா நான் வாங்கிவரச் சொன்னேன்?" என்று அதட்டிக் கேட்டார் பெரியசாமி. "தாங்கள், 'சோடா புட்டி வாங்கிவா' என்று சொல்லாமல், 'சோடா வாங்கிவா' என்று தானே சொன்னீர்கள்? நான் கடைக்காரரிடம் சோடாத்தான் கேட்டேன். அவர் இதைத்தான் கொடுத்தார். என் சொல்லில் நம்பிக்கை இல்லை யென்றால் கடைக்காரரிடம் வந்து, நான் வேறு ஏதாவது கேட்டேனா என்று தாங்களே கேட்டு

அறிந்து கொள்ளுங்கள். தாங்கள் சொன்ன படியேதான் வேலை செய்திருக்கிறேன்'' என்று முனியன் அவர் கட்டளையைத் தான் தட்டி நடக்க வில்லை என்பதை விளக்கமாக விரித்துரைத்தான். பெரியசாமிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'சோடா புட்டி' என்று சொல்லாததும் தம் தவறுதான் என்று உணர்ந்து, மறுபடியும் ஓர் அணுக் கொடுத்து, ''சோடா புட்டி வாங்கிவா'' என்று பெரியசாமி கட்டளையிட்டார். முனியன், சோடா புட்டி வாங்கி வந்தான். பின்பு, ''அதை உடைத்துக் கொண்டு வா'' என்று முதலாளி ஏவினர். முனியன் புழைக் கடைக்குச் சென்று, ஒரு கல் எடுத்து அதை உடைத்து, ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்தான். அதைக் கண்டதும் பெரியசாமி திடுக்கிட்டு, ''இந்தப் 'பாட்டில்' ஓடுகளை எங்கிருந்து பொறுக்கிக் கொண்டு வந்தாய்? இவை ஏன்? இவற்றை யார் இங்கே கொண்டுவரச் சொன்னார்கள்?'' என்று கேட்டார். ''தாங்கள் சோடா புட்டியை உடைத்துக் கொண்டு வரும்படி சொன்னீர்களே! இதற்குள் மறந்துவிட்டீர்களா? தாங்கள் சொன்னபடியே இதோ உடைத்துத்தான் கொண்டு வந்திருக் கிறேன்'' என்று முனியன் அதை அவருடைய மேஜையின்மீது வைத்தான். பெரியசாமி, ஒரு பக்கம் வருத்தமும், ஒரு பக்கம் அவனுடைய அறியாமையைக் குறித்து இரக்கமும் கொண்டார்.

4. மற்றொரு நாள், ஓர் அறையில் கொடியில் போட்டிருந்த துணிகள் தீப் பிடித்து எரிந்தன. அந்த அறையின் வெளிப் புறத்திலுள்ள கூடத்தில் தான் முனியன் உட்கார்ந்துகொண் டிருந்தான். துணிகள் எரிந்துகொண் டிருந்ததையும் அவன்

பார்க்காம லில்லை. வீடு முழுதும் புகை சூழ்ந்து கொண்டது. வீட்டின் முற் பக்கத்தில் ஓர் அறையில் இருந்த பெரியசாமி, புகையைக் கண்டு உள்ளே ஓடி வந்து பார்த்தார். துணிகள் தீயில் எரிந்து சாம்ப ராகிக்கொண் டிருப்பதையும், முனியன் பார்த்துக்கொண் டிருப்பதையும் கண்டு, "என்னடா முனியா! நீர் ஊற்றி நெருப்பை அணைக்காமல் சும்மா உட்கார்ந்துகொண் டிருக்கிறுயே!" என்று அவனைக் கேட்டார். "தாங்கள் கட்டளையிட வில்லையே! நாளுக ஒன்றையும் என் விருப்பம்போல் செய்யவே கூடாது என்று கூறியிருக்கிறீர்களே!" என்றுன் முனியன். "உடனே நீர் ஊற்றி நெருப்பை அவி" என்றுர் பெரியசாமி. அவன் அவ்வாறே செய்தான். அதன் பின்பு, "எங்கே புகை கண்டாலும் அங்கே நெருப்பு உண்டு என்பதை நீ மறக்க லாகாது. புகை கண்டவுடன் நீ காலதாமதம் செய்யாமல் அதைக் கண்ட இடத்திற்கு விரைந்து சென்று தண்ணீரை ஊற்றவேண்டும். இதை நன்றுக நினைவில் வைத்துக்கொள்" என்று பெரியசாமி அவனிடம் கூறினுர்.

5. மறுநாள், பெரியசாமி சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே சுருட்டுப் பிடித்துக்கொண் டிருந்தார். அவரைச் சுற்றி அவருடைய நண்பர்கள் நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். உள்ளேயிருந்த முனியன் கண்ணிற்குப் புகை தென்பட்டது. உடனே அவன், ஒரு வாளி நிறையத் தண்ணீர் எடுத்துக் கொண்டுபோய் முதலாளியின்மீது ஊற்றினுன். நண்பர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். பெரியசாமி, அவமானத்தால் தலைகுனிந்து, பின்பு மிக்க சீற்றத்துடன் முனியனைப் பார்த்து, "இது

என்னடா? அறிவு கெட்டவனே!'' என்று கூவினர். உடனே அவன், ''நீங்கள் நேற்றுத்தானே 'புகையுள்ள இடத்தில் தீயுண்டு; அதைக் கண்டதும் தண்ணீர் ஊற்றத் தவறலாகாது' என்று கூறினீர்கள்! தாங்கள் சொன்னபடியேதானே தண்ணீர் ஊற்றினேன்!'' என்ருன்.

6. இனி அவனைத் தம்மிடம் வேலையில் வைத்துக் கொண்டிருந்தால் விபரீதமான விளைவுகளே ஏற்படும் என்று பெரியசாமி கருதினர்; வேலையிலிருந்து அவனை நீக்குவதற்கு யாது செய்யலாம் என்று எண்ணினர். சிறிது நேரம் பொறுத்து, ''முனியா, நான் கட்டளையிடுகின்றபடியே நீ செய்து வருகிருய் அல்லவா?'' என்றுகேட்டார். அவன், ''ஆம்'' என்ருன். ''இப்போது நான் கூறுவதைக் கவனமாகக் கேட்டுச் செய்யவேண்டும்'' என்ருர் அவர். ''அப்படியே!'' என்ருன் முனியன். உடனே அவர், ''இனிமேல், நீ வேலைக்கு வரவேண்டாம்; திரும்பிப்போய் வீட்டிலேயே நின்றுவிடு'' என்று கட்டளையிட்டார். அவன் அவர் கட்டளைப்படியே வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

7. பகுத்தறிவைப் பறிகொடுத்த முனியன் ஒன்றுக்கும் உதவாமல், தன் வேலையையும் இழந்து போனன்.

### அருஞ்சொற்பொருள்

முதலாளி - எஜமானன். பணியாள் - வேலைக்காரன். கூறினன் - சொன்னன். பணிவு - அடக்கம். கட்டளை - ஆணை; உத்தரவு. பிசகு - தவறு. நாளடைவில் - நாள் செல்லச் செல்ல. பகுத்தறிவு - நல்லது தீயது என்று பிரித்து அறியும் அறிவு. பறி கொடுத்துவிட்டான் - இழந்துவிட்டான். நாணத்தால் - வெட்கத்தால். போக்கை - நடத்தையை. மளிகைக் கடை - பல

சரக்குக் கடை. அதட்டிக் கேட்டார் - கோபமாகக் கேட்டார். புழைக்கடை - வீட்டிற்குப் பின்புறம் உள்ள இடம். கால தாமதம் - காலக் கழிவு. சீற்றம் - மிகுந்த கோபம்.

I. விடை தருக :-

(1) பெரியசாமி முனியனை வேலைக்கு வைத்துக்கொண்ட போது அவனிடம் யாது கூறினர்?

(2) 'விளக்கைப் போடு' என்று பெரியசாமி கூறியது கேட்டு முனியன் யாது செய்தான்?

(3) 'சோடா வாங்கிவா' என்று பெரியசாமி கூறியது கேட்டு முனியன் செய்தது யாது?

(4) முனியன் நெருப்பை ஏன் அவிக்கவில்லை?

(5) பெரியசாமியின்மேல் எப்போது ஏன் முனியன் தண்ணீர் ஊற்றினன்?

(6) பெரியசாமி முனியனை ஏன் வேலையிலிருந்து நீக்கி விட்டார்?

II. வாக்கியங்களில் அமைக்க :-

பகுத்தறிவு, காலதாமதம், விபரீதமான விளைவுகள்.

III. இப் பாடத்தால் நீவிர் அறியும் நீதி யாது?

# 10. வானக்குமிழி

1. நம்முடைய முன்னோர்கள், ஓர் ஊரிலிருந்து தொலைவில் உள்ள மற்றோர் ஊருக்குச் செல்ல, அடைந்த துன்பங்கள் பல. கால்நடையாகவோ, கட்டை வண்டிகளில் ஏறியோ அவர்கள் செல்ல வேண்டி யிருந்தபடியால் ஒருநூறு, இருநூறு மைல்கள் செல்வதற்கும் அவர்களுக்குப் பல நாட்கள் ஆயின. சென்னையிலிருந்து முந்நூறு மைல் தொலைவிலுள்ள மதுரையை அடைய, அவர்களுக்குக் குறைந்தது ஒரு மாத காலமாவது வேண்டியிருந்தது. ஆனால், இப்போது, விரைவாகச் செல்லும் 'எக்ஸ்பிரஸ்' நீராவி வண்டியிலேறிச் சென்னையிலிருந்து மதுரையைப் பன்னிரண்டு மணி நேரத்தில் அடையலாம்; வான ஊர்தி என்னும் ஆகாய விமானத்தில் ஏறி மூன்றுமணி நேரத்தில் அடையலாம்.

2. நீராவிவண்டி, மின்வண்டி, பஸ்வண்டி, மோட்டார் வண்டி முதலியவைகள் தரையில் விரைவாகச் செல்வதற்கும், ஆகாய விமானம், வானில் விரைவாகச் செல்வதற்கும் நமக்கு இப்போது வசதிகளாக உள்ளன. அவையெல்லாம் நாம் பெற்றுள்ள அரும் பெருஞ் செல்வங்கள் ஆகும்.

3. இன்றைக்கு ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன், நம்முடைய தமிழகத்தில், வான ஊர்தி இருந்ததாகச் சங்க நூல்களால் அறிகிறோம். பிறகு அஃது எப்படியோ பெயர்கூடத் தெரியாமல் மறைந்துவிட்டது.

4. பறவைகள் பறப்பதுபோல வானில் பறக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு அடிக்கடி மனத்தில் ஏற்பட்டுவந்தது. வான ஊர்தி கண்டு

பிடிக்கப்பட்டதற்கு முன்பு, வானக்குமிழியால் ஒருவாறு வானத்தில் சென்றுவர முடிந்தது. ஆனால் இந்த வானக்குமிழியைக் கண்டுபிடிப்பதற்கு மக்கள் அடைந்த துன்பங்கள் கணக்கில் அடங்கா.

5. வானக்குமிழியைச் சாதாரணமாகப் புகைக் கூண்டு என்றே வழங்குவர். இதை ஆங்கிலத்தில் ' பலூன் ' (Baloon) என்று வழங்குவர். ஆயிரத்து எழுநூற்று எண்பத்திரண்டாம் ஆண்டில், உடன் பிறந்தவர்களான ' ஈசியன் ' (Etienne) ' மாண்ட்கோல்பியர் ' (Montgolfier) என்ற இரண்டு பிரெஞ்சு மக்கள் காற்றைவிட இலேசான ' ஹைட்ரொஜன் ' என்ற நீர் வளியைப் புரையில்லாத பைகளில் நிரப்பி, அவற்றை வானத்தில் விட்டனர். அவை, வானத்தில் உயர்ந்து தாமாகச் சென்றன. அதன் பிறகு, 35 அடி குறுக்களவுள்ள வானக்குமிழி ஒன்று செய்து பறக்கவிட, அது 3000அடி உயரத்தில் வானில் சென்று 15 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு சிறிய ஊரில் கீழே இறங்கியது. இறங்கியவிடத்தில் அறுவடை செய்து கொண்டிருந்த குடியானவர்கள், அஃது ஒரு கொடிய பறவை என்று எண்ணி, அரிவாள் கோடரி முதலியன கொண்டு, துண்டு துண்டாக வெட்டிவிட்டனர். அதன்பிறகு, அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்து, வானக்குமிழிக்கு எவரும் தீங்கு இழைக்கலாகாதென ஆணை இட்டனர்.



6. சில நாட்களுக்குப் பிறகு, 'மாண்ட்கோல் பியர்,' வானக்குமிழியின் அடிப்புறத்தில் கூடைகளைக் கட்டி, ஆடு, கோழி முதலியவற்றை ஏற்றி அனுப்பினர். அவை, தீங்கு ஏதுமில்லாமல் வானத்தில் சென்று நிலத்தில் இறங்கின. முதன் முதல், அரசருடைய ஆணையைப் பெற்று, 'ரோசியர்ஸ்' என்ற வீரர் வானக்குமிழியில் ஏறிப் பறந்தார். 74 அடி உயரமும் 48 அடி குறுக்களவும் உள்ள வானக்குமிழி 1783-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள், 84 அடி உயரத்தில், ரோசியர்ஸ் என்பவரை ஏற்றிக்கொண்டு, கண்டோரெல்லாம் வியக்கும்படி, வானத்தில் அழகாக ஊர்ந்து சென்றது. அதற்குப் பின்பே, வானக்குமிழியில் ஏறிச் செல்ல அச்சமில்லாமல் பலர் முன் வந்தனர். ஐரோப்பா, அமெரிக்கா முதலியவற்றிலுள்ள நாடுகளில், வானக்குமிழியில் ஏறிச்செல்லும் பழக்கம் மிகுதியாயிற்று. ஆனால், 'ரோசியர்ஸ்', தம்முடைய தம்பியுடன் 'போலோன்' (Bowlogne) என்ற இடத்திலிருந்து இங்கிலாந்திற்குப் பறந்து செல்ல முயன்றபோது, 700 அடி உயரத்தில் வானக்குமிழி தீப் பிடித்துக் கொண்டதால், இருவரும் விழுந்து உயிர் துறந்தனர்.

7. இங்கிலாந்தில், 'லூனர்ட்டி' என்ற வீரரே முதன் முதலாக வானிற் பறந்தவர். அவர், வானக்குமிழியில் உட்கார்ந்துகொண்டு, இரண்டு துடுப்புக்களின் உதவியால், நீரில் படகைத் தள்ளுவது போன்று வானக்குமிழியைக் காற்றில் ஓட்டிச் சென்றார். பூனை, நாய், புறா இம் மூன்றையும் அவர் அப்போது தம்முடன் எடுத்துச் சென்றார். அரசரும் கூட அவர் பறக்கும் விந்தையைக் காணத் தம்முடைய குடும்பத்துடன் வந்திருந்தார். அழகாக வானக்

குமிழி நெடுநேரம் பறந்து சென்றது. ஆனால், அவர் கையிலிருந்த துடுப்பு ஒன்று தவறிக் கீழே விழுந்தது. அஃது ஒரு பெண்மீது விழ, அவள், அது பட்ட நடுக்கத்தால் நோய்வாய்ப்பட்டுச் சில நாளில் உயிர் துறந்தாள். அப்போது, குமிழி நிற்காமல் மிக உயரத்தில் பறந்தது. குளிர் தாங்கமுடியாமல் பூனை நடுங்கிற்று; புறா, குமிழியை விட்டுப் பறந்து சென்று வீட்டை அடைந்தது; 'லூனர்டி' அச்சம் சிறிதுமின்றி நெடுநேரம் வரையில் பறந்து சென்று, 'ஹேர் போர்டுஷையர்' (Hereford-shire) என்ற இடத்தில் குமிழியை இறக்கினர்.



8. 'லூனர்டி' மேலும் மேலும் வானக் குமிழியைப் பெரிதாக்கிக்கொண்டு, அடிக்கடி வானில் பறந்து சென்றுர். ஒரு சமயம் எடின்பரோ என்னுமிடத்திலிருந்து அவர் பறந்து சென்றபொழுது கடுங்காற்று வீசிக் குமிழியை வடகடலில் வீழ்த்தியது. செம்படவர்கள் உதவியால் அவர் தப்பிப் பிழைத்தார். அப்போதும், அவர் அச்சம் சிறிதும் கொள்ளாமல், மறுபடியும் ஆராய்ச்சிகள் செய்து பறக்கும் வழியை வளர்க்கத் தொடங்கினர். இவ்

வாறு அவர் பழகி நன்கு தேர்ச்சியடைந்த பிறகு, ஒரு நாள், 'ஸ்டாண்டன்' (Standan) என்னு மிடத்தில் $2\frac{1}{2}$ மணிநேரம் தொடர்ச்சியாகப் பறந்து காட்டினர். அவ் விடத்தில் அவர் நினைவாக அவர் வீரச் செயல்களை ஒரு கல்லில் எழுதி நாட்டியிருப் பதை இன்றுங் காணலாம்.

9. காற்று வீசும் வழியே வானக்குமிழி ஓடாமல் இருக்கவும், நினைத்தபடி அதைத் திருப்பவும் ஏற்ற வழிகளைக் கண்டுபிடித்தவர் 'பிளாஞ்சார்டு' என் னும் வீரர். இவரே வானக் குமிழியால் முதலில் கடலைக் கடந்தவர். பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் இடையிலுள்ள 21 மைல் நீளமான கடற் பகுதியைக் கடக்க இவர் விரும்பினர்; அதற்காகத் தாமாகவே ஒரு வானக்குமிழி செய்தார்; அதன் இரு பக்கங் களிலும் இறகுகள் போன்ற கருவிகள் அமைத்தார்; வானக்குமிழிக்கும் உட்காருமிடத்திற்கும் இடை யில் குடை ஒன்றை விரித்துக் கட்டினர். குமிழி இறங்கும்போது விரைவாக அன்றி, மெதுவாக இறங்கும் பொருட்டே இக் குடை வைக்கப்பட்டது. இவ்வளவும் செய்து கொண்டு, 'ஜெப்ரீஸ்' (Jeffries) என்ற அமெரிக்கர் ஒருவரையும் ஏற்றிக் காண்டு, 'டோவரி' லிருந்து இவர் புறப்பட்டார். ஆனல், இடைவழியில், எதிர் பாராமல், குமிழி விரைவாகக் கீழ்நோக்கிச் சென்றது. அதன் எடையைக் குறைக்க அதிலிருந்த எல்லாப் பொருள் களையும் பிளாஞ்சார்டு கடலில் வீசி எறிந்தார். அப்போதும் குமிழி கடலில் விழுந்துவிடும் போல் தோன்றிற்று. ஆனல், திடீரென ஒரு பெருங்காற்று வீசிக் குழிழியை மேலே கொண்டுசென்றது. இரு வரும் தீங்கொன்றும் இல்லாமல் தப்பினர். பகல் ஒரு

மணிக்கு இங்கிலாந்தில் புறப்பட்ட அக் குமிழி பிரான்சு நாட்டில் 'கெலே' (Calais) என்னும் இடத்திற்கு அருகில் ஒரு காட்டில் இறங்கியது. கடல் கடந்த இவருடைய வீரச் செயலைப் பாராட்டி அந் நாட்டு மன்னர் 'பிளாஞ்சார்டு'க்கு 500 பவுன் பரிசு வழங்கினர். குமிழி இறங்கிய இடத்தில் இவர் வீரச் செயல்களை எழுதிய ஒரு கல் நாட்டப்பட்டுள்ளது.

10. இவ்வாறு பலருடைய வீரத்தாலும் தியாகத்தாலும் வானக்குமிழியால் பறக்கும் செயல் 18-ஆம் நூற்றாண்டில் தொடங்கி வளர்ந்தது. அதுவே இக் காலத்தில் வான ஊர்தியைக் கண்டுபிடிப்பதற்கு ஏற்ற முதல் கருவியாக இருந்தது. இன்று வான ஊர்தி, பொறிகளின் ஆற்றலால் மிகமிக முன்னேற்றம் அடைந்திருக்கிறபடியால், வானக்குமிழி வேண்டாத பொருளாக மறைந்து நிற்கிறது. ஆனால் அதைச் செய்யும் முறைகள் எல்லாம் அடங்கிய நூல்கள் பல இருப்பதால் அதை எப்பொழுது வேண்டுமானாலும் நாம் செய்து காட்டலாம். எனவே, வானக்குமிழியும், என்றும் அழியாத பொருள்களுள் ஒன்றாகவே நிலைத்திருக்கும் என்னலாம்.

### அருஞ்சொற்பொருள்

வானவூர்தி - ஆகாய விமானம். விரைவாக - வேகமாக. வான் - ஆகாயம். வளி - காற்று ; ஆவி. அறிக்கை - விளம்பரம். இழைக்கலாகாது - செய்யக்கூடாது. ஆணை - உத்தரவு. உயிர் துறந்தார் - இறந்தார். விந்தை - விநோதம். பொறி - எந்திரம்.

I. விடை தருக :–

(1) பயணம் செய்வதற்குப் பயன்படும் ஊர்திகளிற் சிறந்தது யாது ? ஏன் ?

(2) வானக்குமிழி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது ?

(3) தற்காலத்தில் வானக்குமிழி ஏன் பயன்படுத்தப்பட வில்லை.

II. வாக்கியங்களில் அமைக்க :-

அரும் பெருஞ் செல்வங்கள், கணக்கில் அடங்கா, ஆணை யிட்டனர், உயிர்துறந்தார், கடுங்காற்று, என்றும் அழியாத பொருள்.

III. (1) பயணம் செய்வதற்குப் பயன்படும் சில ஊர்திகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(2) பிளாஞ்சார்டு வானக்குமிழியால் பறந்த வரலாற்றை வரைக.

IV. எதிர் மொழி தருக :-

விரைவாக, மறைந்தது, குறுக்கு, அருகில்.

# 11. தசரதன் சாபம்

## காட்சி 1

இடம் : அயோத்தியை அடுத்த ஒரு காடு.
காலம் : முற்பகல்.

**தசரதன் :** (தனக்குள்) இன்று வேட்டை குறித்துப் புறப்பட்ட நேரம் தக்கதன்று போலும்! ஒரு விலங்குகூடக் கண்ணிற் படவில்லையே! இக் காட்டில்—யானை, சிங்கம் முதலியன தம் விருப்பம் போல் திரிந்துகொண்டிருக்கும் என்று சொன்ஞர்களே! ஒன்றுகூடக் காணுதிருப்பதற்குக் காரணம் யாதோ தெரியவில்லை! எதற்கும் இந்த ஆற்ரோரத்தில் இப் புதருக்குள் சிறிது நேரம் மறைந்திருக்கலாம். விலங்குகள் இதில்தானே நீர் பருக வர வேண்டும்! (ஒரு புதருக்குள் மறைந்திருக்கிருன். ஆற்றில் யானை ஒன்று நீர் பருகும் ஒலி கேட்கிறது.)

ஏதோ ஒரு விலங்கு நீர் பருகும் ஒலி கேட்கிறது. (உற்றுக் கேட்கிருன்.) அது, யானை நீரைக் குடிக்கும் ஓசைதான்! என் தலையைக் கண்டால், அஃது ஓடிவிடும்! இங்கே மறைந்திருந்தபடியே அதன்மீது அம்பை விடுவேன். ஒலியெழும் இடத்திற்கு நேராகக் கணையை விடுவேஞனல், அந்த யானை, என் கணை பட்டுச் சுருண்டு விழுவது உறுதி. கண்ணினுல் கண்டுதான் பொருளை அறிய வேண்டுமோ? காதுணர்வாலும் பொருள்களை உறுதியாகத் தேர்ந்து கொள்ளலாம். இது வரையில் நம் காதுணர்வால் அறிந்த எதுவும் பழுதாகவில்லையே! ஒரு நொடிப் பொழுதும் கால தாமதம் செய்தலாகாது. இதோ கணையை ஏவுகிறேன். (ஆ என்ற அலறல்

கேட்கிறது. தசரதன் அவ் விடத்தை நோக்கி ஓடு கிருன். அங்கே ஓர் அந்தணச் சிறுவன் மார்பில் அம்பு பட்டுக் கீழே விழுந்து புரண்டு துடிக்கிருன்.)

அந்தணச் சிறுவன்: அம்மா! அப்பா! அந்தோ! வலி தாங்க முடியவில்லையே! என் உயிர் இதோ உடலைவிட்டுப் புறப்படுகிறதே! இனி யார் உங்களைக் காப்பாற்றுவார்கள்? கண்ணில்லாத உங்கள் கதி இனி என்னுகுமோ? ஆ! ஈசா! நீயே கதி!

தசரதன்: (தொலைவிலேயே அந்தணச் சிறுவனைக் கண்டு, தனக்குள்) ஆ! என்ன தவருன செயல் செய்துவிட்டேன்? (விரைந்தோடி அந்தணச் சிறுவனை அடைந்து), அப்பா! நீ யார்? நீ ஏன் இங்கே வந்தாய்? களிறு ஒன்று நீர் குடிக்கிறது என்று கருதியன்ருே நான் கணையை ஏவினேன்? அந்தோ! அஃது உன் மீதிலா படவேண்டும்? என்ன தவருன செயல் செய்துவிட்டேன்! உன்னைக் காண என் மனம் துடிதுடிக்கின்றதே! நீ யாரப்பா? சொல்லமாட்டாயா?

அ. சிறுவன்: ஐயா, என் பெயர் தருசுரோசனன் என்பார்கள். சலபோசன முனிவருக்கு ஒரே மகன் நான். என் தந்தை தாய் இருவரும் கண் இல்லாதவர்; இதோ சற்றுத் தூரத்தில்தான் இருக்கின்றனர். அவர்கள் குடிப்பதற்காகத்தான் நீர் மொண்டு செல்ல வந்தேன். என் கதி இப்படியாய் விட்டது.

தசரதன்: அந்தோ! நெறி தவறிச் செய்யத் தகாத செயலைச் செய்துவிட்டேனே! இனி உன்னைக் காப்பாற்றும் வகை எதுவும் இருப்பதாகவே தெரியவில்லையே! என்ருல் உனக்கு ஏதேனும் செய்ய இடமிருந்தால், மனத்தில் வேருென்றும் நினைக்காமல்

சொல்லப்பா? நான் செய்த தவற்றை மன்னித்து விடு. மன்னித்துவிட்டேன் என்று சொல்லு!

அ. சிறுவன்: ஐயா, நடந்தது நடந்துவிட்டது. நான் இன்னும் சிறிது நேரத்தில் உயிரிழப்பது திண்ணம். அதற்கு நான் வருந்தவில்லை! தங்களிடமும் எனக்கொன்றும் தவருன கருத்து ஏற்படவில்லை! எல்லாம் விதியின் விளையாட்டு என்பதை என் தந்தையார் அடிக்கடி வற்புறுத்திக் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனுல், ஒரு கவலைதான் இப்போது என் உள்ளத்தை அரிக்கிறது. என் பெற்ருேர் நீர் வேட்கையோடு தத்தளித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் உண்ணுவதற்காகக் காய் கனி கிழங்குகளைத் தேடி யலைந்து கொண்டுவருவதற்கு இன்று மிகுதியும் நேரமாய்விட்டது. வந்து சேர்ந்ததும், 'தண்ணீர்! தண்ணீர்! காதடைக்கிறது' என்று கதறினுர்கள். ஓடோடி வந்தேன். தங்களைப் பார்த்தால் உயர்ந்த நிலையில் இருப்போராகக் காணப்படுகின்றீர். இனி அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொடுப்பவர் யாரோ? என்னுடைய பிரிவைக் குறித்து அவர்களுக்கு யார் தெரிவிப்பாரோ? என் பிரிவைக் கேட்டு அவர்கள் என்ன பாடு படுவரோ? (பெருமூச்சு விடுகிருன்.)

தசரதன்: அப்பா, கவலைப்படாதே! நீ நினைத்தபடி, நான் உயர்ந்த நிலையில் இருப்பவனே. தசரத சக்கரவர்த்தி என்னும் பெரிய பெயருடைய கொடும் பாவி நானே! என்ருலும், உன் பெற்ருேர்களுக்கு நானே தண்ணீர் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்; உன் பிரிவையும் உணர்த்துகிறேன்; உன்னைப்போலவே குற்றேவல் செய்கிறேன். யாதொன்றுக்கும் கலங்காதே!

அ. சிறுவன் : அரசர் பெருமாஞ நீர்? ஆயின் எனக்குக் கவலேயில்லே. என் பெற்ருேர் உமக்கே அடைக்கலம். ஆ! ஈசா! (உயிர்விடுகிருன்.)

## காட்சி 2

இடம் : முனிவர் குடிசை.
காலம் : உச்சி வேளே.

(தசரதன், சிறுவனேத் தோளில் சுமந்துகொண்டு, ஒரு கையில் கமண்டலத்தில் நீர் எடுத்துக்கொண்டு வருகிருன்.)

முனிவர் : (காலடி ஒலி கேட்டு), மகனே, ஏன் இவ்வளவு தாமதம்? தாகத்தால் ஏற்பட்ட தத்தளிப்பு ஒரு புறம் இருக்க, கால தாமதத்தால், உனக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்று அஞ்சி நடுநடுங்கவும் தொடங்கிவிட்டோமே! கண்மணி, இங்கே வா! அருகே வா! (பெற்ருேர் இருவரும் கைகளே நீட்டி மகனேக் கட்டி அணைக்க விரும்புகின்றனர்.)

தசரதன் : முனிவரே, என்னே மன்னித்து விடுங்கள்! யான் தசரதன்! கொடும்பாவி! என் முன் ஞேர் புகழுக்கு இழுக்கு உண்டாக்கவே நான் தோன் றினேன்; வேட்டை குறித்துக் காட்டுக்கு வந்தேன்; யானே ஒன்று நீர் பருகுகிறது என்று மறைவில் நின்ற படியே முன்பின் ஆராயாது கணே விடுத்தேன். அந்தோ! தவருன செயல் செய்துவிட்டேன். நிகழ்ந் ததைச் சொல்ல நா எழவில்லேயே! எவ்வாறு சொல் வேன்? என் பிழையை மன்னித்துவிடுங்கள். இதோ உங்கள் அடியில் விழுந்து இரந்து வேண்டுகின்றேன். (அவர்கள் காலில் விழுகின்ருன்.)

முனிவர் : ஆ! என்ன நடந்தது! என் மக னுக்கு ஏதாவது தீமை ஏற்பட்டதா? சொல் அரசே! விரைவாகச் சொல் அரசே! என்ன நடந்தது?

தசரதன்: முனிவரே! அந்தோ! எவ்வாறு சொல்வேன்? நேராகப் பார்க்கவில்லை! மறைவில் இருந்து எய்ததால் கொடுமை நிகழ்ந்தது. ஏவிய கணை தங்கள் மகன்மீது.........



முனிவர்: ஆ! அந்தோ! மகனே! உன்மீது கணை பட்டதா? நீ எங்கேயடா இருக்கிறாய்? என் மகன் எங்கே? அங்கேயே கிடக்கிறானா? துடி துடித்துக்கொண்டிருக்கிறானா? அவன் என்ன ஆனான்?

தசரதன்: சொல்ல நா வரவில்லையே! தங்கள் மகன், தங்கள் அருமைக் கண்மணி, தங்கள் அருமந்த செல்வன், விண்ணுலகிற்கு விருந்.........

முனிவர்: விருந்தானானா? அந்தோ! கண் மணீ! எங்களை விட்டு நீ எப்படியடா பிரியத் துணிந் தாய்! கண்ணே! குருடர்களாகியும், எங்கள் கண்ணை

இதுவரையில் நாங்கள் இழந்ததாகவே கருத வில்லையே! உண்மையில் இன்றுதான் எங்கள் கண் போயிற்று. அரசே! உனக்கு ஏன் எங்கள்மீது இவ்வளவு பொருமை? உன்னை நாங்கள் என்ன செய்தோம்? எங்கள் நெஞ்சையே பிளந்துவிட்டாயே? மகனே! உன்னை இழந்து நாங்கள் எவ்வாறு உயிர் வாழ்வோம்? இதோ நாங்களும் வருகிறோம்.

தசரதன்: சுவாமி, வேண்டாம்! வேண்டாம்! அவ்வாறு செய்யவேண்டாம்! இதோ தண்ணீர் கொண்டு வந்திருக்கிறேன்! பருகுங்கள்! பருகித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுங்கள்! இன்று முதல் நானே உங்கள் புதல்வன்! தாங்கள் ஏவும் பணிகள் எல்லாவற்றையும் உங்கள் அருகில் இருந்தபடியே செய்துவருவேன்! அயோத்திக்குத் திரும்பிப் போக மாட்டேன். கவலையை விட்டுவிடுங்கள். என்னை மன்னித்து ஏவிப் பணிகொள்ளுங்கள்.

முனிவர்: அரசே, நீ சொல்வது நன்றாயிருக்கிறது! நீ எப்படி எங்கள் புதல்வனாவாய்? உனக்கொரு புதல்வன் இருந்தால் நீ அப்படிச் சொல்ல மாட்டாய்! உன் சொந்த புதல்வன் உன்னைவிட்டுப் பிரியுங்காலம் நேர்ந்தால்தான் எங்களுடைய உள்ளத் துன்பம் இத் தகையது என்று உன்னால் அறிந்து கொள்ளமுடியும்; அதுவரையில் உன்னால் அறிந்து கொள்ளவே முடியாது. சிறிதும் ஆய்ந்தோய்ந்து பாராமல் கணைவிடுத்து, எங்கள் மைந்தனைக் கொன்றாயே! உன் நெஞ்சம் இரும்பு நெஞ்சமே! அந்த நெஞ்சம் கரைந்து உருகினால்தான் உனக்கு உண்மை உணர்வு ஏற்படும். நாங்கள் எங்கள் மகனை விட்டு அரை நொடி நேரமும் தாமதிக்கமாட்டோம். இதோ நாங்கள் புறப்படுகின்றோம்! எங்களைப்போல்

நீயும் ஒரு காலத்தில் துன்பமடைவாய்! உன் அன்பிற் குரிய மகன் உன்னைவிட்டு ஒருகாலத்தில் நீங்குவான். அப்போது, நீ அவன் பிரிவிற்கு ஆற்றமாட்டாது, எங்கள் நிலையை அடைந்து உயிர் நீங்குவாய். இதி லிருந்து நீ தப்பவே முடியாது!

தசரதன்: சுவாமி, என்னை அருள்கூர்ந்து மன்னித்துவிடுங்கள்! என் பிழையைப் பொறுத்துக் கோபம் தணியுங்கள்.

முனிவர்: கோபமா? தணிவதா? கோபம் என்ன இருக்கிறது! முன்பே நீ பணிவு காட்டியதால் மிகக் கொடிய சாபம் எம் வாயிலிருந்து எழவில்லை. ஆனால்; உன்னுடைய மகன் உன்னைவிட்டுப் பிரியத் தான் வேண்டும்! அப்போது உன் உயிரும் உன்னை விட்டு நீங்கவே வேண்டும்! இதோ நாங்கள் எங்கள் மகனை நாடிச் செல்கின்றோம். (முனிவரும் அவர் மனைவியாரும் கீழே விழுகின்றனர்.)

### அருஞ்சொற்பொருள்

கணை - அம்பு. களிறு - ஆண்யானை. வேட்கை - விருப்பம். அஞ்சி - பயந்து. அருமந்த - அருமருந்துஅன்ன ; அமிழ்தத்தை ஒத்த. விண்ணுலகிற்கு விருந்தானான் - இறந்தான். பணி - வேலை.

I. விடை தருக :-

(1) அந்தணச் சிறுவன் எவ்வாறு இறந்தான்?

(2) சலபோசன முனிவர் தருசுரோசனன் இறந்ததை எவ்வாறு உணர்ந்தார்?

(3) தசரதன் முனிவர்பால் பெற்ற சாபம் யாது?

(4) இந்தப் பாடத்தால் நீவிர் அறியும் நீதி யாது?

II. இந்தப் பாடத்தில் நீவிர் அறியும் வரலாற்றை 15 வரிக்குள் ஒரு கட்டுரையாக எழுதுக.

III. எதிர்மொழி கூறுக :-

தாமதம், தவறு, பிரிவு.

IV. வாக்கியங்களில் அமைக்க :-

காதுணர்வு, துடிதுடித்தல், விதியின் விளையாட்டு, குற்றேவல், முன்பின் ஆராயாது, அருமந்த, விண்ணுலகிற்கு விருந்தானான், ஆய்ந்தோய்ந்து பாராமல்.

# 12. சென்னைக் கடற்கரை

1. பகலெல்லாம் உழைக்கும் தொழிலாளர்கள், அலுவலகங்களில் பணி செய்து அலுத்துப் போகும் கணக்காளர்கள், வீட்டிலேயே அடைந்து கிடக்கும் பெண்கள், பள்ளிக்கூடங்களில் சுவடியும் கையுமாகக் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள், பொம்மை வைத்து விளையாட விரும்பும் சிறுவர் சிறுமியர்— இவர்கள் அனைவரும் மனம் விரும்பி மகிழ்ச்சியோடு செல்ல விரும்பும் இடம் சென்னைக் கடற்கரை. சென்னையிலுள்ள இவர்களே அல்லாமல், அயலூர்களிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் சென்னைக்கு வருவோரெல்லாம் கண்குளிரக் கண்டு களிக்கும் இயற்கைக் காட்சிப் பொருளாக இலங்குவதும் சென்னைக் கடற்கரையே யாகும். இது, தமிழ் நாட்டின் அழகு மிக்க இயற்கைச் செல்வம் ஆகும். உலகில் உள்ள அழகிய கடற் கரைகளுள் இஃது இரண்டாவதாகும் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

2. சென்னையின் கண் கவர் வனப்பையும், வள மிகும் வீதிகளையும், வானளாவும் கட்டடங்களையும், அரசாங்க அலுவலகங்களையும், கொடிபறக்கும் கோட்டையையும், கலங்கரை விளக்கம் கொண்ட உயர்நீதி மன்றக் கட்டடத்தையும், உயிர்ப்பொருள் காட்சிச் சாலையையும், பொருட்காட்சிச் சாலையையும், எழும்பூர் சென்ட்ரல் புகைவண்டி நிலையங்களையும், கப்பல் தங்கும் துறைமுகத்தையும், பிற அழகிய காட்சிகளையும் கண்டு களித்த காட்சியாளர், சென்னைக் கடற்கரையையும், அதனை அடுத்துள்ள மாகாணக்கல்லூரிக் கட்டடத்தையும், சென்னெட் கட்டடத்தையும், சென்னைப் பல்கலைக் கழகக்கட்ட

டத்தையும் காணுது தம்மூர் திரும்புவாராயின், அவர்,



மாகாணக் கல்லூரி



செனெட் கட்டடம்

சென்னைக்கு வந்தும் வாராதவரே ஆவர் என்று கூறவேண்டும். ஏன்? சென்னையின் முழு அழகும்

அதிலுள்ள மக்களின் நோயில்லா வாழ்க்கையும் சென்னைக் கடற்கரையையே பொருத்துள்ளன.

3. சென்னைத் திருவல்லிக்கேணிக்கு அருகிலுள்ள 'மெரினா'க் கடற்கரையே சிறப்பாகச் சென்னைக் கடற்கரை என்று சொல்லப்படும். கடற்கரையை அடுத்துத் தெற்கு வடக்காக ஓர் அழகிய அகலமான பாதையும், அதில் இடைவிடாமல் ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகளும், அங்கே செல்வோ



பல்கலைக் கழகம்

ருடைய மனத்தில் திகைப்பையும் களிப்பையும் உடனுக்குடன் மாறிமாறி எழுப்புதல், சென்னைக் கடற்கரைக்குச் செல்வோர் அடையும் முதல் அநுபவமாகும். அந்தச் சாலையின் ஓரங்களில் ஒன்றன்பின் ஒன்றைக் கோத்து வைத்திருப்பது போல விதவிதமான மோட்டார் வண்டிகள் வரிசையாக நிற்கும் காட்சி, கடற்கரைக்குள் புகுவோரைச் சிறிது நேரம் அவ்வாறு புகாமல், அவற்றை நின்று நோக்கச் செய்யும். சாலையை அடுத்துக் கிழக்குப் பக்கத்தில், வித

விதமான நிறங்கள் கொண்ட மலர்ச்செடிகள், ஓவியம் தீற்றி வைத்ததுபோல் காணப்படும். இவற்றைக் கடந்து சென்ருல், ஒரே வெண்மணல் பரப்பு, அப் பரப்பில் திரள்திரளான மக்களின் கூட்டம், அவர் களிடையே காணப்படும் விதவிதமான அழகு—இவை யெல்லாம் அளவிட்டுக் கூற இயலாத அருங்காட்சிப் பொருள்களாகும். வெண்மணற் பரப்பிற்கு இப் புறமாகவே இரு மருங்கும் சவுக்குச் செடிகள் வேலி யமைந்த நடை பாதையில் நண்பர்கள் கைகோத்துக் களிப்புடன் உரையாடிச் செல்வர்.

4. வெண்மணற் பரப்பில், சிறுவர்கள், இடை யிடையே 'சடுகுடு' முதலிய விளையாட்டுக்கள் விளை



யாடி மகிழ்வர். அவர்கள் விளையாடுவதற்கு எனவே 'பார்' குச்சிகளும், சறுக்குப் பலகைகளும், பிற விளை யாட்டு வசதிகளும் நகராண்மைக் கழகத்தினர் அமைத்திருக்கிருர்கள். அவற்றில், அவர்கள் மகிழ்ச் சியோடு விளையாடி உடல் நலத்தையும், உடல் பலத் தையும் ஒருங்கே அடைகிருர்கள். தாய்மார்கள்

இடுப்பில் வைத்துச் செல்லும் இளங்குழந்தைகள் ஏறி விளையாடுவதற்கு எனவே, ஆட்டுகுதிரைகளும் ஊஞ்சல்களும் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். சில சிறுவர்களும் சிறுமிகளும் வெள்ளைச் சிப்பிகளைப் பொறுக்கிக் குவித்துக் களிப்பர். அவை பார்ப்பதற்குச் செல்வர்கள் வெண்பொற்காசுகளைத் தங்கள் மாளிகையின் கூடங்களில் குவித்து வைத்திருத்தல் போலத் தோன்றும். சிறிது நேரத்தில், அவ்வாறு குவித்து வைத்த அச் சிப்பிகளை, அவர்கள் வாரிவாரி இறைப்பர். வள்ளல்கள், தாங்கள் குவித்துவைத்திருக்கும் காசுகளை, ஏழை எளியவர்களுக்கு வாரிவாரி வழங்குவது போன்று அக் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சி யூட்டும். சில சிறுவர்கள், கோபுரங்கள் போலவும் வீடுகள் போலவும், மணலாலும் சிப்பிகளாலும் அமைத்து மகிழ்வர். அவர்கள் அமைக்கும் அமைப்புப் பிற்காலத்தில் அவர்கள் தேர்ந்த சிற்பிகளாக ஆவார்கள் என்பதை விளக்கும். காளை வயதுடையவர்கள் ஒருங்கு கூடிக் குறும்பு செய்து கொண்டும் பேசிக் கொண்டும் காலம் கழிப்பர். வயது ஏறிய ஆண்மக்களும் பெண்மக்களும், அமைதியாக உட்கார்ந்துகொண்டு, வானொலியில் பாட்டுக்களைக் கேட்டு மகிழ்வர்.

5. சில நாட்களில், வேடிக்கை காட்டுகிறவர்கள், அவ் விடத்திற்கு வந்து பலவித வேடிக்கைகள் காட்டி, ஆங்கு வந்தவர்களை மகிழ்விப்பர். சில நாட்களில், பொதுக் கூட்டங்கள் அங்கே நிகழும். அறிவாளிகள் பலருடைய பேச்சைக் கேட்க, விருப்பமுடைய மக்கள் அங்கே திரண்டு குழுமுவர்.

6. வேர்க் கடலை விற்போரும், கடலை பட்டாணி விற்போரும், கூட்டங்களுக்கு இடையிடையே சென்று

விருப்பத்துடன் அவற்றை விற்று, மக்களுக்குக் களை யாற்றும் தொண்டு புரிவர். இத் தொண்டு, அவர்க ளுடைய குடும்பங்கள் வாழ்வதற்குத் தேவையான வருவாயை நிரம்ப அளிக்கும். மாலை வேளையில் கதி ரவன் மேற்கே சாயுங்கால், நீலக்கடல், கண்கவர் வனப்பைத் தரும். பௌர்ணமி நாளில், செங்கதிரவன் மேற்கிலும், வட்டமான வெண்கதிரவன் கடல்மீது கிழக்கிலும் தோன்றும் காட்சி, கண்களுக்கு விருந்து ஆகும். கடலில், பேரலைகள் கொந்தளித்து எழுந்து, வெண்ணிலவிற்கு எதிரில் களிநடம் புரிவதுபோலத் தோன்றும். அப்போது, தண்ணீரின் அருகே சென்று மக்கள் திரண்டு நிற்பர். அலைகள், அவர்கள் கால் களில் அடுக்கடுக்காக வந்து பின்செல்லும் காட்சி, அவர்களுடைய கால்களில் அவை விழுந்து பணிந்து முத்தமிட்டுச் செல்வது போலத் தோன்றும். அப்போது, சிறுவர்கள் அலைகளைக் கையினால் தாவிக் குடைந்து களிப்பது, அவ் வலைகளுக்குத் தாங்கள் நன்றியைத் தெரிவிப்பது போலக் காட்சி யளிக்கும்.

7. கடலில் சென்று மீன் பிடிப்போர், மாலை வேளையில் படகுகளில் மீன்பிடித்துக்கொண்டு திரும்பி வருவர் ; படகுகளைக் கரையில் இழுத்துச் சேர்த்து விட்டு, மீன்களைக் கரையில் குவித்துப் பங்கிடுவர். பல் வேறு மணிகளைப் பதித்துவைத்தால் ஒப்பப் பல நிறம் கொண்ட மீன்களைக் காணவும் வாங்கவும், மக்கள் அவர்களைச் சூழ்ந்து நிற்பர். உயிருள்ள மீன்கள் துள்ளி எழுவதும், உயிரற்ற மீன்கள் போட்டவாறு கிடப்பதும், சுறுசுறுப்புள்ளவர்கள் துள்ளிக் குதிப் பதும், சோம்பலுள்ளவர்கள் சோர்ந்து கிடப்பதும் ஒப்பத் தோன்றும்.

8. சிலர், அச்சம் சிறிதும் இல்லாமல் அலைக ளுக்கு இடையே நீந்தி விளையாடுவர்; அலைகள் திரண்டு வரும்போது, அவற்றின்மீது தாவிப் பாய்ந்தோ உள்ளே மூழ்கியோ, அவற்றினின்றும் தடு மாருது தப்பி நிற்பர். மற்றவர், அவற்ருல் உருண்டு கரையில் வந்து ஒதுங்குவர். இவற்றை யெல்லாம் கண்டு களித்துத் திரும்புங்கால், இருள் புகுந்தும் அது தோன்ருதவாறு, ஒளி மிகுந்த சாலை விளக்குக் கள் பேரொளி தந்து கண்ணொளியை மழுங்கச் செய் யும். வடக்கே துறைமுகத்தில் கப்பல்கள் நிற்கும்; அங்கிருந்து தெற்காக மெதுவாக நோக்கிக் கொண்டே வந்தால் அரசாங்க அலுவலகங்கள், கோட்டை, சென்னைப் பல்கலைக் கழகம், ரெவின்யூ போர்டு ஆபீஸ், சென்னை மாகாணக் கல்லூரி, லேடி வெல்லிங்டன் கல்லூரி, மேரி அரசியார் கல் லூரி முதலிய கட்டடங்கள் நிமிர்ந்து நின்று காட்சி யளிக்கும்.

9. இத் தகைய காட்சிகளை யெல்லாம் ஒருங்கே காணும் வாய்ப்பு வேறு எந்த இடத்திலும் உண் டாகாது. சென்னைக் கடற்கரை-உயர்ந்தவர் தாழ்ந் தவர், செல்வர் ஏழை, முதலாளி தொழிலாளி, ஆண் பெண், சிறுவர் பெரியோர், இளையர் முதியோர் அனைவரும் ஒருங்கே அநுபவிக்கும் பொதுஉடைமைப் பொருளாக இலங்குவது வியப்புடைய பொருள்களுள் மிக வியப்பான பொருளேயன்ரே!

அருஞ்சொற்பொருள்

அலுவலகங்கள் - வேலைசெய்யும் இடங்கள். இலங்குவது - விளங்குவது. மருங்கு - பக்கம். வெண்பொற்காசு - வெள்ளி ரூபாய். திரண்டு - ஒன்று சேர்ந்து. குழுமுவர் - கூடுவர். கதிரவன் - கிரணங்களை உடையவன்; சூரியன்; சந்திரன். செங்

கதிரவன் - சூரியன். வெண்கதிரவன் - சந்திரன். வனப்பு - அழகு. அச்சம் - பயம்.

I. விடை தருக :–

(1) சென்னைக் கடற் கரைக்குப் பொதுவாகச் செல்ல விரும்புபவர் யார்?

(2) சென்னையில் கண்டுகளிக்கத் தக்க இடங்கள் எவை?

(3) சிறுவர்கள் கடல் மணலில் எவ்வெவ்வாறு விளையாடுவர்?

(4) அலைகள் எவ்வெப்போது எவ்வெவ்வாறு தோன்றும்?

II. வாக்கியங்களில் அமைக்க :–

திரள்திரளாக, அருங்காட்சி, ஏழைஎளியவர், கலங்கரை விளக்கம்.

III. பிரித்துக் கூறுக :–

அயலூர், வருவோரெல்லாம், மகிழ்ச்சியூட்டும், பேரொளி.

IV. எதிர்மொழி கூறுக :–

நண்பர், மகிழ்ச்சி, வனப்பு, இருள்.

# 13. இளங்கோவடிகள்

1. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று கூறினர் நம் தேசியக் கவிஞரான பாரதி யார். சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காவியம், படிப்பா ருள்ளத்தை அள்ளிக்கொள்ளும்; கவர்ந்து கொள்ளும். வள்ளுவர் தந்த திருக்குறளும், இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், கம்பர் பாடிய இராமாயணமும் மிகச் சிறந்த நூல் கள் என்பது அறிவுடையோர் கொள்கை. இவற்றுள், கண்ணகி என்னும் கற்பரசியின் வரலாற்றைத் தன் னகத்தே கொண்டு காவியச் சுவைக ளெல்லாம் பொருந்தி யிருக்குமாறு பாடப்பட்டுள்ள சிலப்பதிகா ரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் வரலாறும், கேட்பா ருள்ளத்தை அள்ளிக்கொள்வதாகும்.

2. வடவேங்கடம், தென்குமரி, கீழ்க்கடல், மேல்கடல்—இவற்றின் இடைப்பட்ட நிலமே பண் டைத் தமிழ் நாடாகும். மலையாள நாடு என்று இப்போது விளங்கும் பகுதி, பண்டைக் காலத்தில் தமிழ் நாடாகவே இருந்தது. இந்தப் பகுதி சேர நாடு எனப் பழங் காலத்தில் அழைக்கப்பட்டு வந்தது. சேர நாட்டின் அரசர்கள் சேர மன்னர்கள் என வழங்கப் பெற்றனர்.

3. சேர நாட்டை, இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் என்ற ஓர் அரசன் பண்டைக் காலத்தில் ஆண்டு வந்தான். வஞ்சிமா நகரைத் தலைநகராகக் கொண்டு, அறிவும் ஆற்றலும் நிறைந்து, சேர நாட்டை ஆண்டு வந்த அவ் வரசனுக்குச் செங் குட்டுவன் என்ற மைந்தன் ஒருவன் தோன்றி னன். அவனுக்குப்பின் மற்றொருவன் மைந்தனாகத்

தோன்றினான். அவன் செங்குட்டுவனுடைய தம்பி யாதலால் அவனைத் தம்பியரசன் என்ற பொருளைக் குறிக்கும் இளங்கோ என்ற செல்வப் பெயராலேயே எல்லோரும் அழைத்துவந்தனர். செங்குட்டுவனும் இளங்கோவும் ஒருவரிடம் ஒருவர் அன்பு கொண்டு, பண்பு நலன்கள் எல்லாம் பெற்று, இணை பிரியாமல் வாழ்ந்து வந்தனர்.

4. ஒரு நாள், நெடுஞ்சேரலாதன், மன்னர்கள் புடைசூழத் தன் தலைநகராகிய வஞ்சியம்பதியில், அரசவையின்கண், சிறப்போடு அரியணையில் வீற்



றிருந்தான். அவனுடைய மைந்தர்கள் இருவரும் அவனுக்கு இரு பக்கத்திலும் அமர்ந்திருந்தனர். அப்பொழுது, எதிர்காலத்தில் நடக்க இருப்பதை முகக்குறி கொண்டே கூறவல்ல நிமித்திகன் ஒருவன் அரசவைக்கு வந்தான். வந்தவன், அரசனுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, இரு மைந்தர்களுடைய

முகத்தையும் சிறிது நேரம் உற்று நோக்கினன். பிறகு, அவன் அரசனைப் பார்த்து, "இம் மைந்தர் களுள் இளையவனே அரச னுதற்குரிய குறிகளை எல்லாம் பெற்றிருக்கின்ருன். ஆதலின், அவனே அரசனுவான்" என்று கூறினன்.

5. நிமித்திகன் சொல்லைக் கேட்டதும், இளங் கோவிற்குச் சிறிது கோபம் உண்டாயிற்று. 'அண் ணன் இருக்கத் தம்பி அரசுரிமையை எய்துவது முறையாகாதே' என்று அவர் கருதினர். அண்ணன் செங்குட்டுவன் அரசுரிமையை எய்துவதற்குத் தாம் எக்காலத்தும் தடையாயிருத்தல் கூடாது என்று உறுதிகொண்டு, அப்பொழுதே, அவர் துறவு நெறியை மேற்கொண்டார். அது கண்ட யாவரும், அதுமுதல், அவரை 'இளங்கோவடிகள்' என மரியாதையுடன் அழைக்கத் தலைப்பட்டனர்.

6. மூத்தவன் செங்குட்டுவனே அரச பதவி அடைய வேண்டும் என்ற பரந்த உயரிய நோக்கத் துடன், ஆயுள் முழுதும், இளங்கோவடிகள் துறவற நெறியிலேயே நின்று வாழ்க்கையை நடத்திவந்தார். அகப்பற்று, புறப்பற்று இன்றி, மணம் புரிந்துகொள் ளாமல், ஒழுக்கமே விழுப்பமாகக் கொண்டு பின்பற் றும் நெறியே துறவற நெறியாகும். அரச பதவி கிடைக்கிறது என்றபோது, அதை வேண்டாமென்று மறுத்துத் துறவற நெறியை மேற்கொண்ட இளங் கோவடிகள் தன்மை பெரிதும் போற்றுதற் குரியது.

7. பாரதத்தில் வரும் 'வீடுமர்' வாழ்க்கையும் இளங்கோவடிகள் வாழ்க்கையையே ஒத்ததாகும். தம் முடைய தந்தையின் இன்ப வாழ்க்கையைக் கருதி, அரச பதவியைத் தள்ளிப் பிரம்மசரிய ஒழுக்கத்தை மேற்கொண்டார் வீடுமர்.

8. வீடுமரின் தந்தையான சந்தனு பேரரசன் பரிமளகந்தி என்பாளிடம் காதல் பூண்டு, இரண்டாம் தாரமாக அவளை மணக்க விரும்பினான். அவனுடைய முதல் மனைவியாகிய கங்கையின் மைந்தர் வீடுமர் பட்டத்திற் குரியவராக இருக்கத் தம்முடைய மகள் பரிமளகந்திக்குப் பிறக்கும் பிள்ளைகள் பட்டத்திற்கு உரியவர்களாக ஆக முடியாதே என்று கருதி, அவளுடைய பெற்றோர்கள், அவளைச் சந்தனுவுக்கு மணம் செய்துதர மறுத்தார்கள். சந்தனு, இருதலைக் கொள்ளி எறும்பை ஒத்து மனம் புழுங்கினான். அதைக் கண்ட வீடுமர், தாம் அரசுரிமை ஏற்பதில்லை எனச் சூள்செய்து, பரிமளகந்தியைத் தம்முடைய தந்தைக்கு மணம் செய்து தருமாறு அவளுடைய பெற்றோரை வேண்டினார். அரச பதவியை ஏற்காவிட்டாலும், அவர் மணம் செய்து கொண்டால் அவருக்குப் பிறக்கும் மைந்தர்களே அரச பதவிக்கு உரிமையைப் பெறுவார்கள் ஆதலால், அப்போதும் தம்முடைய மகளின் மைந்தர் அரசுரிமை எய்த முடியாது என்று கூறி, அவர்கள் தம்முடைய மகளை மணம் செய்து கொடுக்க இசையவில்லை. அது கேட்ட வீடுமர், "நான் மணந்து கொண்டால்தானே இந்த விளைவுகளெல்லாம் ஏற்படும்! ஆகையால், நான் மணம் செய்து கொள்ளேன்" என்று சூள்செய்து கொடுத்தார். எனவே, அவர் அது முதல் கொண்டு, பிரம்மசாரியாகவே தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். அண்ணன் பொருட்டுத் துறவற ஒழுக்கம் மேற்கொண்ட இளங்கோவடிகள் நெறியும், தந்தை பொருட்டுப் பிரம்மசரிய விரதம் பூண்ட வீடுமர் நெறியும் வியந்து பாராட்டுதற்கு உரியன.

9. பிரம்மசரியம் பூண்ட வீடுமர், மற்றவர்களுக்கு உதவியாக இருந்து தூய வாழ்க்கை நடத்தி வந்தார். இளங்கோவடிகளும், துறவு பூண்ட பின், தம்முடைய தமையனர் நல்வாழ்க்கைக்காகத் தம்மால் ஆனவெல்லாம் செய்து வந்தார்.

10. இளங்கோவடிகள், குணவாயிற் கோட்டத்தில் இருந்து கொண்டு, தம்முடைய துறவு நெறியைப் போற்றி வந்தார். அதனோடு, அவர் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தார். இயற்கையின் எழில் நலம் கண்டு அவர் இன்புறுவார்; மலைகளின் மாண்பையும், ஆறுகளின் அழகையும், மலர்களின் வனப்பையும், மயில்களின் ஆடலையும், செங்கதிரோன் சீர்த்தியையும், தண்கதிரோன் தண்ணொளியினையும் கண்டு அவற்றில் ஈடுபடுவார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமி ழாற்றலும் பெற்ற அவர்க்குத் துறவு வாழ்க்கை பேரின்ப வாழ்க்கையாகவே இருந்தது.

11. ஒரு சமயம், அவர் தம் தமையன் செங்குட்டுவனோடு மலைவளம் காணச் சென்றுர். அப்போது, அவருடைய நண்பரான சாத்தனரும் அங்கே வந்திருந்தனர். மலைவளம் கண்டு களிப்பில் ஆழ்ந்திருந்த செங்குட்டுவனிடம், குன்றக் குறவர் கூட்டமாக வந்து நின்று, "அரசர் பெருமானே, நறு வேங்கை மரத்தின் நிழலில் நின்ற காரிகை ஒருத்தி, தன் கணவனோடு வான ஊர்தியில் ஏறி விண்ணுலகு நோக்கிச் சென்றதை நாங்கள் எங்கள் கண்ணாரக் கண்டு களித்தோம். அவள் எந் நாட்டாளோ? யார் மகளோ?" என்று கூறினர்.

12. உடனிருந்த சாத்தனர், அக் காரிகை கண்ணகி என்பதைக் கூறி, அவளுக்கு உண்டான துன்

பங்களை எல்லாம் மிக்க உருக்கத்தோடு எடுத்துரைத்தார். ஊழ்வினை காரணமாகக் கண்ணகி அடைந்த துன்பத்தையும் கோவலன் கொலையுண்ட செய்தியையும் கேட்டு, இளங்கோவடிகள் மிகவும் பரிவு எய்தினர்.

13. கண்ணகியின் வரலாற்றைக் காவியமாகப் பாடி அவளைச் சிறப்பிக்க வேண்டும் என்று இளங்கோவடிகள் உறுதி செய்துகொண்டார்; அரசியலில் தவறு செய்தவர்க்கு அறமே கூற்றமாகும் என்ற உண்மையையும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துவர் என்ற உண்மையையும், ஊழ்வினை உரிய காலத்தில் மக்களிடம் பொருந்தித் தன் விளைவைத் தவருது உண்டாக்கும் என்ற உண்மையையும் உலகத்தார்க்குத் தம்முடைய காவியத்தின் மூலமாக உணர்த்த விரும்பினர்; சிலம்பு காரணமாகவே கோவலன் கொலையுண்டதும் கண்ணகி தன் கற்பின் திறத்தை நிலைநாட்டியதும் கண்டு, தம்முடைய காவியத்திற்குச் சிலப்பதிகாரம் என்ற பெயர் கொடுத்தார்.

14. கண்ணகி பற்றிய வரலாறு, சோழ பாண்டிய சேர நாடுகள் மூன்றிலும் நிகழ்ந்த செய்திகளை உணர்த்த வேண்டும். துறவு மனப்பான்மை உள்ள ஒருவரே மூவேந்தர்களைப் பற்றியும், அவர்களுடைய நாடுகளைப் பற்றியும், அங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், ஒருபால் கோடாது உணர்த்தல் கூடும். ஆகவே, சாத்தனரும் அது கருதி, இளங்கோவடிகளையே கண்ணகி வரலாறு உணர்த்தும் காவியம் இயற்றி அருளுமாறு வேண்டினர். இளங்கோவடிகள் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றியருளினர்.

15. தமிழ்க் காவியங்களுள் சிலப்பதிகாரமே முதல் முதல் இயற்றப்பெற்றது. அதற்கு ஒப்பாகவோ உயர்வாகவோ வேறு எந்தக் காவியத்தையும் கூற முடியாது. கண்ணகிக்குக் கோயில் கட்டி, அவள் புகழை உலகோர் அறிய உணர்த்தினுன் செங் குட்டுவன் என்ற சேரர் பெருமான். சிறந்த காவியம் பாடிக் கண்ணகியின் புகழ் என்றும் அழியாதவாறு நிலைநிறுத்தினுர் இளங்கோவடிகள். கண்ணகியின் புகழ் விளக்கும் சிலப்பதிகாரக் காவியம் என்றும் உலகில் நிலைபெற்று நிற்பது போலவே, இளங்கோவடி களுடைய துறவுச் சிறப்பும், புலமைச் சிறப்பும், புகழ்ச் சிறப்பும் என்றும் அழியாது நிலைபெற்று நிற்கும்.

### அருஞ்சொற்பொருள்

நெஞ்சு - மனம்; உள்ளம். அள்ளும் - கவரும். கவிஞர் - கவி பாடும் புலவர். காவியம் - கவிஞரால் பாடப்பட்ட ஒரு தொடர் கதை. சுவைகள் - படிப்பார்க்கு இன்பம் ஊட்டும் வியப்பு வீரம் முதலிய சாரமான பகுதிகள். ஆற்றல் - வல்லமை. மைந்தன் - மகன். தோன்றினுன் - பிறந்தான். இளங்கோ - இளவரசன்; தம்பியரசன். புடை - பக்கம். அரசவை - அரச சபை. அரியணை - சிம்மாசனம். நிமித்திகன் - பின்னுல் வரப் போவதைச் சில குறிகளால் அறிந்து முன்னுல் உணர்த்துவோன். அகப்பற்று - உடலில் உள்ள ஆசை. புறப்பற்று - மனைவி மக்கள் பொருள் முதலியவற்றில் உள்ள ஆசை. அகம் - உள்ளே. புறம் - வெளியே. விழுப்பம் - மேலானது; உயர்வானது. இருதலைக் கொள்ளிஎறும்பு - இன்னது செய்வதென்று தோன்ருமல் திகைத் தலைக் குறிக்கும் ஒரு தொடர். புழுங்கினுன் - வருந்தினுன். சூள் - சபதம். விளைவு - சம்பவம்; நிகழ்ச்சி. செங்கதிரோன் - சூரியன். தண்கதிரோன் - சந்திரன். காரிகை - அழகிய பெண். பரிவு - துன்பம். கூற்றம் - எமன். ஒருபால் - ஒரு பக்கம். கோடாது - சாயாமல்.

I. விடை தருக :–

(1) இளங்கோவடிகள் துறவு ஒழுக்கம் மேற்கொண்ட காரணம் யாது ?

(2) வீடுமருக்கும் இளங்கோவடிகளுக்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை ?

(3) சிலப்பதிகாரம் என்பது யாது ? அஃது எவ்வாறு ஏற்பட்டது ?

(4) சிலப்பதிகாரம் உணர்த்த வந்த உண்மைகள் யாவை ?

(5) சிலப்பதிகாரத்தின் சிறப்புக்கள் யாவை ?

II. பிரித்தெழுதுக :–

சிலப்பதிகாரம், கற்பரசி, அரசவை, அரியணை, இளங்கோவடிகள்.

III. வாக்கியங்களில் அமைக்க :–

காவியச் சுவைகள், ஒருவரிடம் ஒருவர், புடைசூழ, துறவறநெறி, அரசுரிமை, இருதலைக் கொள்ளி எறும்பு, ஒருபால் கோடாது, நிலைநிறுத்து.

IV. எதிர்மொழி கூறுக :–

துறவறம், இன்புறுவார், விண்ணுலகு, புகழ், முடியாது.

## 14. சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி

### பஞ்ச தந்திரக் கதை

1. ஒரு பட்டணத்தில் தேவதத்தன் என்ற பெயருடைய ஒரு செட்டி இருந்தான். அவன் இரும்பு வாணிகம் செய்பவன். ஒரு சமயம், அவனுக்கு வாணிகத்தில் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டது. அவன் குடியிருந்த வீடும் ஆயிரம் இரும்புக் கம்பி களுமே அவனிடம் எஞ்சின.

2. வேறொரு பட்டணத்திற்குச் சென்று வாணிகம் செய்யத் தேவதத்தன் விரும்பினான். அவனுக்குத் தருமதத்தன் என்ற ஒரு நண்பன் இருந்தான். தான் வைத்திருந்த ஆயிரம் இரும்புக் கம்பிகளையும் அவனிடம் கொடுத்து, அவற்றைத் தான் திரும்பி வரும்போது தன்னிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி வேண்டிக்கொண்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு, தேவதத்தன் அயல் பட்டணத் திற்குப் போனான்.

3. "கெட்ட குடியே கெடும்" என்பது பழ மொழி. அப் பழமொழி, தேவதத்தன் வாழ்க்கையில் உண்மை யாயிற்று. தான் சென்றடைந்த பட்டணத் தில் பொருள் ஈட்டுவதற்கு அவன் அரும்பாடு பட்டான். அவனுடைய உழைப்பெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே ஆயிற்று. அவனால் சிறிதளவும் பொருள் ஈட்டமுடியவில்லை. உணவிற்கே அவன் திண்டாடினான். எனவே, அவன் தன் சொந்த பட்டணத்திற்கே திரும்பிவிட முடிவு செய்தான்.

4. தான் முடிவுசெய்தவாறே, தேவதத்தன் தன் சொந்த பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான். உடனே

அவன், தன் நண்பன் தருமதத்தனிடம் சென்ருன். அவனிடம், "நண்பா, அயல் பட்டணத்திற்குப் பொருள் ஈட்டச் சென்றேன் அன்ருே! அவ் விடத்திற்கும் என் நிழல் என்னுேடேயே வந்தது. என்ருல் பொருள் ஒன்றும் ஈட்டவே முடியவில்லை. ஆதலால், இவ் விடத்திற்கே திரும்பி வந்துவிட்டேன். இங்கேயே நான் மறுபடியும் வாணிகம் செய்யக் கருதுகிறேன். ஆதலால், நான் உன்னிடம் கொடுத்து விட்டுப் போன ஆயிரம் இரும்புக் கம்பிகளையும் கொடு. அவற்றையே முதலாகக் கொண்டு நான் வாணிகத்தை நடத்தவேண்டும்" என்று தேவதத்தன் கூறினுன்.

5. அதைக்கேட்ட தருமதத்தன், "நண்பா உன் இரும்புக் கம்பிகளை யெல்லாம் ஓர் அறைக்குள் போட்டுப் பூட்டி வைத்திருந்தேன். அவற்றை யெல்லாம் எலிகள் தின்றுவிட்டன. நான் என் செய்வேன்? அவற்றை நான் எங்கிருந்து கொடுப்பேன்?" என்று வருந்துபவன்போலக் கூறினுன். அவன் கூறியதைக் கேட்டதும் தேவதத்தன் திடுக்குற்ருன்; ஆனுல், "இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. எங்காவது எலிகள் இரும்புக் கம்பிகளைத் தின்னுமா? இதுவரையில் இவ்வாறு கேட்டதுமில்லை; பார்த்ததுமில்லையே!" என்று தன் மனத்திற்குள் நினைத்துக்கொண்டு, "நல்லது நண்பா! இருக்கட்டும்! அதைப்பற்றிக் கவலை அடையாதே!" என்று அவனிடம் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்விட்டான்.

6. நான்கு நாட்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் காலையில், தேவதத்தன் தருமதத்தன் வீட்டிற்குச் சென்ருன். தருமதத்தனுக்கு ஐந்து ஆண்டுகள்

நிரம்பிய ஓர் ஆண் மகன் உண்டு. அச் சிறுவன் மிக்க அழகுடையவன். அச்சமோ கூச்சமோ இன்றி அவன் எல்லாரிடமும் நெருங்கி விளையாடுவான். தேவதத்தன் அவனோடு சிறிது நேரம் விளையாடினான். பிறகு, "நண்பா, இவனிடம் நீண்ட நேரம் விளையாடிக்கொண் டிருக்க எனக்கு ஆவலாய் இருக்கிறது. இவனை என் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் வைத்திருந்து, இன்று மாலையில் கொண்டு வந்து விட்டுவிடுகிறேன். தடை சொல்லாமல் இவனை என்னோடு அனுப்பு" என்று அவன் தருமதத்தனை வேண்டினான். "அப்படியே ஆகட்டும்!" என்றான் தருமதத்தன்.

7. தேவதத்தன் சிறுவனை அழைத்துக்கொண்டு சென்று தன் வீட்டை அடைந்தான்; அன்று முழுதும் அவனோடு விளையாடிக்கொண் டிருந்தான். மாலை நேரம் வந்தது. அப்போது, அச் சிறுவனை அடுத்த வீட்டில் கொண்டுபோய் ஒளித்து வைத்து விட்டுத் தேவதத்தன் தன் நண்பன் வீட்டை அடைந்தான்.

8. அவன் வெறுங் கையோடு வந்ததைப் பார்த்த தருமதத்தன், "என் மகன் எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டான். "நண்பா, உன் பிள்ளை இன்றெல்லாம் என்னோடு மகிழ்ச்சியாகவே விளையாடிக்கொண் டிருந்தான். சற்று நேரத்திற்கு முன், அவன் தெருவிற்குச் சென்றான். ஓர் ஊர்க் குருவி அவன் மீது பாய்ந்து அவனைத் தூக்கிக்கொண்டு பறந்து சென்றுவிட்டது. என்னால் ஆன வரையில் அவனை மீட்க முயன்றேன்; ஆனால் முடியவில்லை. என் செய்வேன்! இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டு உன்னிடம் மன்னிப்புக் கேட்டுப் போகவே வந்தேன்" என்று மிக்க உருக்கத்தோடு தேவதத்தன் கூறினான்.

9. "ஊர்க்குருவி என் பிள்ளையை எவ்வாறு தூக்கிச் செல்ல முடியும்? நீ சொல்வது முற்றும் பொய். ஊர் அதிகாரியிடம் வா" என்று கூறி, அவனைத் தருமதத்தன் ஊர் அதிகாரியிடம் இழுத்துக் கொண்டு சென்றான்; "ஐயா, இவன் என் பிள்ளையை என்னவோ செய்துவிட்டு, அவனை ஊர்க்குருவி தூக்கிக்கொண்டு போய்விட்டது என்று கூறுகிறான். இவனிடமிருந்து என் மகனை மீட்டுத் தரவேண்டும்" என்று அவரிடம் முறையிட்டான்.

10. ஊர் அதிகாரி செட்டியைப் பார்த்து, "இவன் பிள்ளை எங்கே இருக்கிறான்? உண்மையாகச் சொல்" என்று கேட்டான். அதற்கு அவன்,



"உண்மையாகவே அவனை ஊர்க்குருவிதான் தூக்கிக்கொண்டு போய்விட்டது" என்றான். ஊர் அதிகாரி அதைக்கேட்டு நகைத்து, "ஒரு சிறிய ஊர்க்

குருவி சிறுவனை எப்படித் தூக்கிக்கொண்டு போக முடியும்? நீ சொல்வதுபோல உலகில் என்றுமே நிகழ்ந்ததாகக் கேட்டதுமில்லையே! அப்படியிருக்க நீ எவ்வாறு இப்படிக் கூறத் துணிந்தாய்?'' என்றான்.

11. "ஆயிரம் இரும்புக் கம்பிகளை எலிகள் தின்றுவிட முடியுமானால், சிறுவனை ஊர்க்குருவி மட்டும் ஏன் தூக்கிக்கொண்டு போகமுடியாது? என்னிடம் இருந்த ஆயிரம் இரும்புக் கம்பிகளையும் இவனிடம் கொடுத்து விட்டுப் போயிருந்தேன். திரும்பி வந்து கேட்டதும், அவற்றை எலிகள் தின்று விட்டன என்று இவன் கூறுகிறான். உலகில் அது நடக்கக் கூடுமானால் ஏன் இது நடக்கக் கூடாது?'' என்று தேவதத்தன் தன் குறையை ஊர் அதிகாரியிடம் விளக்கிக் கூறினான்.

12. ஊர்அதிகாரி, நடந்ததை எல்லாம்ஆதியோடு அந்தமாக விசாரித்து உண்மை யுணர்ந்தான். இறுதியில், அவன் தருமதத்தனைப் பார்த்து, "இவனுடைய இரும்புக் கம்பிகளை இவனிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உன் சிறுவனை நீ இவனிடமிருந்து பெற்றுக்கொள்'' என்று தீர்ப்புக் கூறினான். தன் சூழ்ச்சிக்கு ஏற்ற எதிர் சூழ்ச்சியைச் செய்த தேவ தத்தன் திறமையைக் கண்டு நாணம் கொண்டு, தரும தத்தன், தான் ஒளித்து வைத்திருந்த இரும்புக் கம்பிகளைக் கொண்டுவந்து கொடுத்தான். தேவதத்தனும் அவன் பிள்ளையை அவனிடம் கொண்டுவந்து விட்டான்.

அருஞ்சொற்பொருள்

வாணிகம் - வியாபாரம். ஈட்டுவதற்கு - சம்பாதிப்பதற்கு. விழலுக்கு இறைத்த நீர் - 'வீண்' என்னும் பொருளைத் தரும் ஒரு தொடர். முடிவு செய்தான் - தீர்மானித்தான். சூழ்ச்சி - தந்திரம்.

கவலை - வருத்தம். பரபரப்பு - அவசரம். மகிழ்ச்சி - சந்தோஷம். ஆதியோடு அந்தம் - முதலிலிருந்து இறுதி. திறமை - அறிவாற்றல்.

I. விடை தருக :-

(1) 'கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி தேவதத்தன் வாழ்க்கையில் எவ்வாறு உண்மையாயிற்று?

(2) தருமதத்தன் தேவதத்தனை எவ்வாறு ஏமாற்றினான்?

(3) தேவதத்தன் செய்த எதிர் சூழ்ச்சி யாது?

(4) இக் கதையால் நீங்கள் அறியும் நீதி யாது?

II. சந்தர்ப்பம் காட்டி விளக்குக :-

(1) 'விழலுக்கு இறைத்த நீராயிற்று.'

(2) 'என் நிழல் என்னோடேயே வந்தது.'

(3) 'ஓர் ஊர்க்குருவி அவன் மீது பாய்ந்து அவனைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றுவிட்டது.'

(4) 'உலகில் அது நடக்கக்கூடுமானால் ஏன் இது நடக்கக் கூடாது?'

III. வாக்கியங்களில் அமைக்க :-

பொருள் ஈட்டுவதற்கு, விழலுக்கு இறைத்த நீராயிற்று, என் நிழல் என்னோடேயே வந்தது, முதலாகக் கொண்டு, திடுக்குற்றான், வெறுங் கையோடு, முறையிட்டான், ஆதியோடு அந்தமாக.

IV. இக் கதையைத் தருமதத்தன் கூறுவதுபோல் எழுதுக.

## 15. கோதையார்

1. நம் செந்தமிழ் நாட்டில், ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களுள்ளும், கல்வியில் வல்லவர் களாய்க் கவிபாடும் ஆற்றல் நிரம்பியவர்களாய்ப் பலர் பண்டைக் காலத்திலும் இருந்தனர். அவர்களுள், நூலறிவும் கடவுளன்பும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்த வர் கோதையார் என்ற நங்கையார் ஆவர். இந்த அம்மையார், வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் தலைசிறந்த ஒருவராக மதிக்கப்பெறுவர். கண்ணபிரா னிடம் கரைகாண முடியாத அன்புகொண்டு, அப் பெருமானையே தம்முடைய கணவராகப் பெற வேண்டும் என்று விரும்பி, அவ்வாறே அப் பெரு மானை அடைந்து மாறாத இன்பம் எய்தினவர் இப் பிராட்டியார். இவரால், பெண்ணுலகம், பெரும் புகழும் சிறப்பும் ஒருங்கே எய்தியது.

2. வடநாட்டில், ஆண்டவனையே அல்லும் பகலும் எண்ணியெண்ணி, அவன் மீது பக்திரசம் நிறைந்த பாடல்களைப் பாடியவர் மீராபாய் என்ற நங்கையார். தென்னாட்டில், தமிழ்மொழியில் பக்தி ரசம் பெருக் கெடுக்கும் பாடல்களைப் பாடினவர் கோதையார்.

3. பாண்டி மாநாட்டில், ஸ்ரீ வில்லிபுத்தூர் என்ற திருப்பதியில், வடவேசுவரபுரம் என்ற விஷ்ணு கோயிலில் நித்திய கைங்கரியம் செய்து கொண்டு, விஷ்ணுசித்தர் என்ற ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் செய்த தவத்தின் பயனாகத் தோன்றியவரே கோதையார். வடவேசுவரபுரம் என்ற ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் பெயர் வடபத்திரசாயி என்பது. ஆலிலையின்மீது துயில்கொள்ளுவோன் என்பது வடபத்திரசாயி என்ற தொடரின் பொருளாகும். அப் பெருமானுக்


T.R. NATHAN

குப் பூமாலை கட்டிச் சாத்தியும், பாமாலை தொடுத்துச் சூட்டியும் வருதலையே, விஷ்ணுசித்தர் தமக்கேற்ற பெருந்தொண்டாகக் கொண்டார். இவர் தொண்டின் பெருமையால் இவருக்குப் பெரியாழ்வார் என்ற பெயரும் ஏற்பட்டது.

4. பெரியாழ்வாருடைய தவமகளாராகத் தோன்றிய கோதையார், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்; இளமை முதற்கொண்டே, தம் தந்தையாருடன் பூமாலை தொடுப்பதையும், அவர் பாடும் பாடல்களைத் தாமும் உடன் சேர்ந்து பாடுவதையும் தம்முடைய பொழுது போக்காகக் கொண்டார். வீண் விளையாட்டுக்களில் இவருக்குச் சிறிதும் விருப்பம் ஏற்படவேயில்லை. கண்ணபிரானுடைய புகழ்களைத் தந்தையார் கூறக் கேட்டு வந்த கோதையார்க்கு, நாளடைவில் அப் பெருமானிடம் மிகுந்த அன்புகொள்ளுமாறு அவை செய்துவிட்டன.

5. ஒருவர் மற்றொருவரிடம் நிறைந்த அன்பு கொண்டுவிடுவாராயின், தம்மைப் போலவே தம்முடைய அன்பரும் இருத்தல் வேண்டும் என்று கருதுவது இயற்கை. வடபத்திரசாயிக்குத் தொடுக்கும் மாலை, அவருக்கு மிக்க அழகைத் தரவேண்டும் என்ற கருத்தோடு கோதையார் மாலை தொடுப்பார்; அதனால், மாலை தொடுக்கும்போது அதில் மிகுதியாகக் கவனம் செலுத்துவார்; தொடுத்து முடிந்ததும், எம் பெருமானுக்குத் தாம் தொடுத்த மாலைகள் அழகாக இருக்குமா என்பதைக் கண்டு தெளிவதற்காக அவற்றைத் தம்முடைய தலையிலும் கழுத்திலும் அணிந்துகொண்டு கண்ணாடியின் முன் நின்று அழகு பார்ப்பார்; தமக்கு மனநிறைவு ஏற்பட்டால்

தான் மகிழ்ச்சியுடன் தாம் அணிந்த மாலைகளைக் கழற்றிப் பூக்குடலையில் வைத்துத் தந்தையாரிடம் தந்து கோயிலுக்கு அனுப்புவார்; இல்லாவிட்டால், அவற்றை அழகு நிறையுமாறு மறுபடியும் திருத்திக் கட்டி முடித்தே மனநிறைவு பெற்று அவற்றைத் தந்தையாரிடம் தருவார். ஆனால், இவ்வாறு இவர் பூமாலைகளைச் சூடி அழகு பார்த்துக் கொடுத்த செயல் பெரியாழ்வாருக்கு நெடுநாட்கள் தெரியாமலே இருந்துவந்தது. அம் மாலைகளோ நாளுக்கு நாள் மணம் மிகுந்து விளங்கின.

6. ஒரு நாள், பெரியாழ்வார், கோதையாருடன் மாலைகளைக் கட்டி வைத்துவிட்டு, அவற்றைக் கொண்டுபோவதற்கு முன்பு ஏதோ ஒரு செயல் குறித்துச் சிறிது நேரம் வெளியே சென்றிருந்து திரும்பி வந்தார். அப்போது, மாலைகளைச் சூடிக்கொண்டு கண்ணாடியின் முன்பாகக் கோதையார் நிற்பதை அவர் நோக்கினார். உடனே, "ஆண்டவனுக்குச் சூட்டும் மாலையை நீ அணிந்து அழகு பார்ப்பது தகுதியாகுமா? என்ன தவறான செயல் செய்யத் துணிந்து விட்டாய்?" என்று அவர் கோதையாரைப் பார்த்துச் சிறிது வெறுப்புடன் கூறினார். கோதையார், மனம் கசிந்து கலங்கி நின்றார். அதுகண்ட பெரியாழ்வார் அவரைத் தேற்றிவிட்டு அன்று மாலை நேரம் ஆவதற்குள் புது மாலைகள் கட்டிக்கொண்டு போய்ப் பெருமாளுக்குச் சாத்தினார்.

7. அன்றிரவு, வடபத்திரசாயி, பெரியாழ்வார் கனவில் எழுந்தருளி, "உம்முடைய மகள் சூடிக் கொடுக்கும் மாலைகளையே எமக்குச் சூட்டவேண்டும்" என்று கூறி மறைந்தார். ஆழ்வார் உடனே எழுந்து, வியப்பும் திகைப்பும் ஒருங்கே கொண்டு,

"எம்மை ஆளவந்த தெய்வமே ஆண்டாள்!" என்று கருதித் தம்முடைய மகளாரிடம் மதிப்பு மிகக் கொண்டார்; தாம் விடியற்காலையில் கண்ட கனவைக் கோதையாரிடம் விரித்துரைத்தார். அதுமுதல் கோதையாரை, ஆண்டாள் என்று ஆழ்வார் அழைக்கத் தலைப்பட்டார்.

8. மறுநாட் காலையில், கோயில் அருச்சகரும் பெரியாழ்வார் வீட்டை அடைந்து, "கோதையார் சூடிக்கொடுக்கும் மாலையே எமக்கு வேண்டும்" என்று வடபத்திரசாயி தம் கனவில் வந்து கூறியதாகத் தெரிவித்து மகிழ்ச்சி காட்டினர். அன்று முதல் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலைகளையே, மிக்க பயபக்தியுடன் அருச்சகர் எம்பெருமானுக்குச் சாத்திவந்தார். சூடிக்கொடுத்த நாச்சியார் என்று யாவரும் கோதையாரைப் புகழ்ந்து பாராட்டத் தலைப்பட்டனர்.

9. பூமாலை சூடிக்கொடுத்து இறைவனிடம் உள்ள தம் அன்பை யாவரும் அறியுமாறு செய்தது போலவே, பாமாலை பாடியும் அவனிடம் தம் அன்பை மிகுதியாகக் காட்ட நாச்சியார் தொடங்கினர். திருவரங்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அரங்கநாதப் பெருமான், தம்மைத் தன் காதலியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆண்டாள் இடைவிடாது கசிந்து கசிந்து பாடுவார்; திருமாலே தம்மை வந்து திருமணம் செய்து கொண்டது போலக் கனவுகண்டு மகிழ்வார். இவ்வாறு இவர் பாடிய பாடல்களே திருப்பாவை எனவும் நாச்சியார் திருமொழி எனவும் இப்போது வழங்குவன. திருப்பாவையிலுள்ள முப்பது பாடல்களுள், ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும், பொருளறிந்து

உருக்கமாகப் பாடிப் பக்திபூண்டு மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் வைகறையில் திருமாலை நினைந்து ஒவ்வோராண்டிலும் நோன்பு இயற்று வார்க்கு, இம்மையில் இன்பமும் மறுமையில் வீட்டுலகப் பேறும் தடையில்லாமல் கிடைக்கும் என்பது வைணவர்களுடைய உறுதியான கொள்கை. நாச்சியார் திருமொழியில் மேகம், குயில் முதலிய வற்றைத் திருமாலிடம் தூதாக அனுப்பும் கருத் துக்கள் நிரம்பிய அழகான பாடல்கள் உள்ளன. இவ் விரண்டு நூல்களையும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற தொகுப்பில் காணலாம்.

10. ஆண்டாள் பாடல்கள் தமிழ் மொழியின் வளமும், பக்தி நலமும் ஒருங்கே நிறைந்தவை. கவிதை நலம் மட்டும் விரும்பும் தமிழ்ப் புலவர் களுக்கும் ஆண்டாள் கவிதைகள் சிறந்த விருந் தாகும்; பக்தியுடையவர்களுக்குப் பக்தியை வளர்க்கும் சிறந்த மருந்தாகும்.

11. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நாச்சி யார் ஆண்டாள் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற கோதையார், தம்முடைய வாழ்க்கையின் இறுதியில் பெரியாழ்வாரும் மற்றப் பெரியார்களும் புடைசூழச் சென்று திருவரங்கத்தில் ஆதிசேஷன் என்னும் பாம்பணையின்மீது பள்ளிகொள்ளும் திருவரங்க நாதனோடு மணக்கோலத்துடன் இரண்டறக் கலந்த னர் என்பர். நாச்சியார் வாழ்க்கைச் சிறப்பினையும் கவிதை வனப்பினையும் பக்திப் பெருக்கினையும்,

'' அன்ன வயல்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல் ''

என்ற ஒரு தனிப்பாடல் நன்கு விளக்கிக் காட்டும். ஆண்டாள் அருளிச் செய்த, திருப்பாவை நாச்சியார் திருமொழி என்பவற்றைப் பாராயணம் செய்து, அவரைப் பக்தியுடன் நினைந்து ஏத்துவார்க்கு, ஆண்டவனிடம் நேரே கொள்ளும் பக்தியின் சிறப்பெல்லாம் கிடைக்கும் என்பது உறுதி.

### அருஞ்சொற்பொருள்

ஆற்றல் - வல்லமை. திகழ்ந்தவர் - விளங்கியவர். எய்தினவர் - அடைந்தவர். பூக்குடலை - பூ வைக்கும் ஒருவகை ஓலைக் கலன். தேற்றிவிட்டு - கலக்கத்திலிருந்து நீக்கித் தெளிவித்துவிட்டு. வடபத்திரம் - ஆலிலை. கசிந்து - உருகி. வைகறை - அதிகாலை. பள்ளி கொள்ளும் - படுத்து நித்திரை செய்யும். வனப்பு - அழகு. பக்தி - கடவுளன்பு. பாராயணம் - ஓதுதல். ஏத்து - துதி.

I. விடை தருக :-

(1) பெரியாழ்வார் ஆற்றிவந்த பெருந்தொண்டு யாது ?

(2) ஆண்டவனுக்குத் தொடுத்த மாலையைக் கோதையார் சூடிக் கொண்டதன் நோக்கம் யாது ?

(3) கோதையார்க்கு ஆண்டாள் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது ?

(4) ஆண்டாள் பாடிய நூல்கள் யாவை ?

II. சந்தர்ப்பம் காட்டி விளக்குக :-

(1) "உம்முடைய மகள் சூடிகொடுக்கும் மாலைகளே எமக்குச் சிறந்தனவாகும்."

(2) "கோதையார் சூடிக்கொடுக்கும் மாலையே எமக்கு வேண்டும்."

III. வாக்கியங்களில் அமைக்க :-

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, பொழுது போக்கு, மனநிறைவு, தேற்றிவிட்டு, வைகறை, பள்ளிகொள்ளும், பாராயணம்.

IV. எதிர் மொழி கூறுக :-

எய்தினவர், பெருக்கம், நிறைந்த, மகிழ்ச்சி, இம்மை, ஏத்து.

V. இறையன்பும் கவிபாடும் ஆற்றலும் பெற்ற நங்கையர் இருவர் பெயர் கூறுக.

# 16. கேள்விக்கு இனியன்

1. மதுரைக் குமரனூர் என்ற புலவருக்கு ஐயம் மிகுந்தது. "எங்குச் சென்றாலும், ஆங் கெல்லாம் திருமுடிக்கிள்ளியையே யாவரும் வியந்து பேசினர். அவன் ஓர் அரசன்கூட அல்லன்; சோழன் படைத் தலைவர்களுள் ஒருவன். சோழன் நலங்கிள்ளி யிடம் இருந்த மதிப்புக் காரணமாகத் திருமுடிக் கிள்ளி என அவன் பெற்றோர் அவனுக்குப் பெயரிட்டு அழைத்தனர். ஒருவேளை அது காரணமாகவே அவ னிடம் நலங்கிள்ளி அன்பு காட்டிப் படைத் தலைவ னாக ஆக்கியிருக்கலாம். அன்பு யாங்கு உள்ளதோ ஆங்கு ஆக்கத்திற்குக் குறைவு ஏது! ஏனாதிப் பட்ட மும் அவனுக்குக் கிடைத்துவிட்டது. ஏனாதி மோதிரமும் அவன் பெற்றான். அது காரணமாக அவனைக் கண்மூடிக் கொண்டு வியப்பதெனின் அது பொருத்தம் ஆகுமோ! அரச னெவ் வழி மக்க ளெவ் வழி!"

2. "இல்லை! அரசன் வியப்பது காரணமாகக் குடி மக்கள் வியப்பது எனில், அஃது ஒரு நாட்டில்தானே நிகழ்தல் கூடும்! பல நாட்டிலிருந்து பகைவர் படை யெடுத்து வருவர்; வேறு வேறாகவும் வருவர்; ஒருங்கு சேர்ந்தும் வருவர்; அழகிற் குறைந்தவர் அல்லர்; ஆடையிற் குறைந்தவர் அல்லர்; அணிகளைப் பற்றிக் கூறுவானேன்? போரிலும் வல்லவர்; ஆனால் அவர் நோக்க மெல்லாம் தம் அழகை இழவாமல் பாதுகாக்க வேண்டு மென்பதிலேயே இருந்தது. நாள்தோறும் அறுசுவை யுண்டி போற்றிப் பாதுகாக்கும் தம் உடலை, வாள் சுவைக்க இடந்தருவது பேதைமையே அன்றோ? யாக்கைக்கு முறுக்களிக்கும் குருதி நரம்புகளைத்

துளைக்க, அம்பிற்கு இடங்கொடுப்பது அறியாமையே யன்றோ? எனவே, திருமுடிக்கிள்ளியிட மிருந்து அம்போ, வாளோ, வேலோ வரின், அவரெல்லாம் புறங்காட்டித் தம் அழகைப் போற்றிக் கொள்வர். இதிலென்ன தவறு உள்ளது! சோழ நாட்டில் மட்டு மன்று, எந்த நாட்டிற்குச் சென்றாலும் திருமுடிக் கிள்ளியின் பகைவரை யாவரும் பழிப்பர். அவனையே வியப்பர். அதற்குக் காரணம் என்னை?'' புலவருக் கிருந்த ஐயம் இதுவே.

3. புலவர் மதுரைக் குமரனார் எண்ணி எண்ணிப் பார்த்தார். ஒன்றும் அவருக்கு விளங்க வில்லை. அவன் பகைவரையும் அவனையும் புலவர் சீர்தூக்கிப் பார்த்தார். "அவரும் ஒன்றினியர்; அவனும் ஒன்று இனியன். அவரும் ஒன்று இன்னார்; அவனும் ஒன்று இன்னான். அப்படி யாயின், அவரையும் அவனையும் ஒப்பக் கூறட்டுமே? அவரைப் பழித்து அவனை வியப்பானேன்?''

4. மதுரைக் குமரனார், ஏனாதி திருமுடிக் கிள்ளியை நன்கு அறிவார். சோழன் நலங்கிள்ளியும் அவரால் பாராட்டப் பெற்றுள்ளான். புலவர், வயிறு வளர்க்கப் பாடி வாழ்க்கை நடத்தினவரும் அல்லர்; தம்முடைய தகுதியறிந்து வரவேற்று உபசரித்தா லொழியப் பேரரசராயினும் பொருட்படுத்தார்.

5. ஒரு சமயம் சோழன் பெருந் திருமா வளவன் ஏதோ வேறு காரியத்தால் அவருக்கு வேண்டியன கொடுக்கத் தாமதித்தான். அது பொறாதவராய்ச் சுடச்சுட அவன் உள்ளம் வருந்து மாறு, "அரசரே, யாம் மிக்க துன்பம் அடையினும், எம் தகுதியை உணரும் உணர்ச்சியில்லாதவருடைய உடைமையை மதியோம்; நல்லறிவுடைய நல்

குரவையே மிகச் சிறப்பாக மதிப்போம். யாம் போய் வருகிறோம்'' என்று கூறிப் புறப்பட்டு விட்டார், உணர்ச்சி மிக்க புலவர் குமரனார். ஆகவே, உலகம் கண்மூடித்தனமாக ஒருவனை வியப்பதெனின், அதனை அவர் எங்ஙனம் ஏற்றுக்கொள்வார்!

6. "அவனையே கேட்டு விடுவோம் அதற்குக் காரணம்! காரணம் கூறுனாயின், அவனே தன்னை உலகம் வியப்பது தவறு எனக் கூறட்டுமே!'' என்று முடிவு செய்துகொண்டு, புலவர் திருமுடிக்கிள்ளியை அடைந்தார். திருமுடிக்கிள்ளி அவரைத் தொலைவில் கண்டபோதே முகமலர்ச்சி கொண்டான்; இருக்கை



விட்டெழுந்து விரைந்து வந்து இனிய சொற்கள் கூறி வரவேற்றான்; உணவு படைத்தான். இருவருக்கும் ஓய்வான நேரம் கிடைத்தது. அவனுடைய பரிவாரமும் சூழ இருந்தது. புலவர் ஐயம் ஒழியும் நேரம் வந்தது. வழக்கம் போலச் சுடச்சுடவே அவர் அவனிடம் தம் கருத்தைத் தெரிவித்தார் :

7. "நீயோ சண்டை ஏற்பட்டால் குதித்தெழு கின்றாய்; பகைவரை எதிர் நின்று கொல்லுகின்றாய்; உன் படை, ஒருவேளை புறங்கொடுக்க முற்பட்டாலும், அதைத் தடுத்து ஊக்கம் கொடுத்துப் பகைவர் முன் செல்கின்றாய்; பகைவர் வாள் கொண்டு உன் மார்பில் வெட்டினாலும் தளர்ச்சியடைகின்றாயில்லை; வாள் வடுவை மார்பெல்லாம் உடையாய். உன் அழகே கெட்டுவிட்டது. என் கண்கள் உன்னைப் பார்க்கவே நாணுகின்றன. அருமையாகப் பெற்ற அழகினை நீ இழந்து நிற்கின்றாயாதலால், கண்ணுக்கு நீ மிக மிக இன்னாய். யாண்டும் உன்னை வீரம் மிக்கவன் என்றே கூறுவதால், கேள்விக்கு நீ இனியையே."

8. "உன் பகைவர் உன்னைக் கண்டவுடனே புறங் கொடுக்கின்றனர். காரணம், வேறொன்றுமில்லை! உன் வில்லிலிருந்து நூற்றுக் கணக்கான அம்புகள் இமை கொட்டும் நேரத்தில் வெளியேறுகின்றன; பசி மிக்கன போல அவை பாய்கின்றன; பகைவர் மார்பின் குருதியைச் சுவைக்க முற்படுகின்றன. பகைவர் அறிவுடையவர்கள்; போற்றிக் காக்கும் தம் உடலில் ஊறுபட அவர் இடங் கொடுப்பதில்லை; அம்பு வரும் வழியினின்றும் விலகிப் புறங்கொடுத்து ஓடிவிடுவர். உலகம் அவரை வீரர் அல்லர் என்று கூறுவதால் கேள்விக்கு இன்னாதவர் என்பது உண்மையே. ஆனால், கண்ணுக்கோ அவர் மிக இனியவர்."

9. "உன்னையும் உன் பகைவரையும் சீர்தூக்கிப் பார்த்தால், நீயே வீரன் என்று கூறப்படுகின்றாய்; ஆதலின், கேள்விக்கு இனியை. நானே நேரில் காண்கின்றேன் உன் மெய் வடுக்களை; ஆதலின், நீ கண்ணிற்கு இன்னாய்."

13 31/6/57 13969 சென்னை-600 00

10. "உன் பகைவரோ உனக்குப் புறங் கொடுத்தனர். ஆதலின், வீரர் அல்லர் என்பதால், அவர் கேள்விக்கு இன்னர்; ஆனல், கண்ணிற்கு மிக இனியர்."

11. "இரண்டு பண்புகள் உள்ளன. அவை உன்னிடமும் உள்ளன; அவரிடமும் உள்ளன. நீ ஒன்று இன்னய். அவர் ஒன்று இன்னர். நீ ஒன்று இனியை; அவர் ஒன்று இனியர். எனவே, நீயும் அவரும் ஒத்த பண்புகளே உடையீர். ஒவ்வாத பண்புகள் உங்களிடம் வேறு எவையேனும் உள்ளனவோ? யானறியேன்! உலகம் உன்னை வியப்பானேன்? இதற்குக் காரணம் நீயே எனக்கு விளக்கிக் கூறவேண்டும்."

12. புலவர் கூறியதையெல்லாம் ஏனுதி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். புலவர் பதிலை எதிர் பார்த்தார். உள்ளத்திருந்து ஓங்கி வழிந்த உவகை அவன் வாயிதழ்களைச் சிறிதே திறப்பித்துப் புன்முறுவல் தோன்றச் செய்தது. புலவர் ஐயம் தீர்ந்தார்.

குறிப்பு:—மதுரைக் குமரனுர் என்ற புலவர், ஏனுதி திருமுடிக்கிள்ளி என்னும் சோழ நாட்டுப் படைத் தலைவனை இகழ்வது போன்று புகழ்ந்தும், அவன் பகைவரைப் புகழ்வது போன்று இகழ்ந்தும் கூறிய கூற்றைக் கேட்டுக் கிள்ளி புன் முறுவல் பூவாது வேறு யாது சொல்ல இருக்கிறது! புலவர் அவன் பதிலையா எதிர்பார்த்தார்? இப் பொருள் அடங்கிய பாடலைப் புறநானூற்றில் (167) படித்து இன்புறுக!

## அருஞ்சொற்பொருள்

ஐயம் - சந்தேகம். ஏனுதிப்பட்டம் - படைச் சிறப்பில் மேம் பட்டவர்களுக்கு அரசர் கொடுத்துவந்த மதிப்புப் பட்டம். குருதி - இரத்தம். யாக்கை - உடல். நல்குரவு - தரித்திரம், வறுமை.

I. விடைகூறுக :-

(1) குடிமக்கள் ஏன் திருமுடிக்கிள்ளியை வியந்து பாராட்டினர்?

(2) திருமுடிக்கிள்ளியின் வீரச் சிறப்பைக் குமரனர் பாராட்டியவாறு எங்ஙனம்?

(3) திருமுடிக்கிள்ளி கேள்விக்கு எங்ஙனம் இனியன்?

(4) மதுரைக்குமரனர் திருமுடிக்கிள்ளியை இகழ்வது போன்று புகழுமாறு எங்ஙனம்?

II. மதுரைக்குமரனர் மானம் மிக்க புலவர் என்பதைச் சான்று ஒன்று தந்து விளக்குக.

III. வாக்கியங்களில் அமைக்க :-

புறங்காட்டுதல், வயிறு வளர்த்தல், கண்மூடித்தனம், சுடச் சுடத் தெரிவித்தல்.

IV. சந்திர்ப்பம் காட்டி விளக்குக :-

(1) "நல்லறிவுடைய நல்குரவையே மிகச் சிறப்பாக மதிப்போம்."

(2) "நீ ஒன்று இன்னய்; அவர் ஒன்று இன்னர். நீ ஒன்று இனியை; அவர் ஒன்று இனியர்."

V. எதிர்மொழி கூறுக :-

ஆக்கம், அறியாமை, இனியர், பேரரசர், ஊக்கம்.

# செய்யுட் பகுதி

## 1. கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா. (1)

—ஔவையார்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள் ;
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் ;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள் ;
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள் ;
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்(து) உட்பொருள் ஆவாள். (2)

—சி. சுப்பிரமணிய பாரதியார்

மைஅணி கண்டன் ; மறைவிரி நாவன் ; மதித்துகந்த
மெய்அணி நீற்றன் ; விழுமிய வெண்மழு வாட்படையான் ;
செய்ய கமலம் மணம்கம ழும்திரு வேதிகுடி
ஐயனை ஆரா அமுதினை நாம்அடைந்(து) ஆடுதுமே. (3)

—திருநாவுக்கரசர்

குன்றி டாதகொ ழுஞ்சுட ரே!மணி
மன்றுள் ஆடிய மாணிக்க மே!உனை
அன்றி யார்துணை ? யார்உற(வு)? ஆர்கதி ?
என்று நீ எனக்(கு) இன்னருள் செய்வதே ? (4)

—தாயுமானவர்

அரியாய அம்மானை அமரர் பிரானைப்
பெரியானைப் பிரமனை முன்படைத் தானை
வரிவாள் அரவின் அணைப்பள்ளி கொள்கின்ற
கரியான் கழல்காணக் கருதும் கருத்தே. (5)

—நம்மாழ்வார்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
**தீனரட் சகன்**பதம் சிந்தித்(து) ஏத்துவாம். (6)

—கிருஷ்ணபிள்ளை

## குறிப்புரை

### 1. கடவுள் வாழ்த்து

1. இது விநாயகரைப்பற்றியது. பாகு - வெல்லப்பாகு. கோலம் - அழகு. துங்கம் - உயர்வு. கரி - யானை. தூமணி - தூயமணி - பரிசுத்தமான மாணிக்கம். சங்கத் தமிழ் - மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் வளர்க்கப்பட்ட தமிழ். தமிழ் மூன்றும் - இயல், இசை, நாடகம் என்னும் மூவகைத் தமிழறிவும்.

2. இது கலைமகளைப்பற்றியது. கொள்ளை இன்பம் - மிக்க இன்பம். குலவு - பொருந்திய. கருணை - அருள்.

3. இது சிவபெருமானைப் பற்றியது. மை - கருமைநிறம் பொருந்திய நஞ்சு. அணி - அணிந்த. மறைவிரி - வேதம் பிறந்த. மதித்து - உயர்வாகக்கருதி. உகந்த - விரும்பிய; உயர்ந்த என்றும் ஆம். மெய் - உடல். நீற்றன் - விபூதி அணிந்தவன். விழுமிய - மேலான. மழு வாள் - மழு என்னும் பெயரையுடைய வாள்; மழு என்பது எரியிரும்புப் படை என்று கொண்டு, மழு வேறு வாள் வேறு என்றும் கொள்வர். ஆரா அமுது - தெவிட்டாத அமிழ்தம். ஆடுதும் - ஆடுவோம்.

4. இதுவும் சிவபெருமானைப்பற்றியது. குன்றிடாத - குறையாத. கொழு சுடரே - பேரொளியே. மணி மன்று - அழகிய அம்பலம். கதி - புகலிடம்.

5. இது திருமாலைப் பற்றியது. அமரர் - தேவர். பிரான் - தலைவன். படைத்தான் - உண்டாக்கியவன். வாள் - ஒளி பொருந்திய. அரவு - பாம்பு; ஆதிசேடன். அணை - படுக்கை. பள்ளிகொள்கின்ற - யோகநித்திரை செய்கின்ற. கரியான் - கரிய நிறமுடைய திருமால். கழல் - திருவடி. கருதும் - எண்ணும். கருத்து - எண்ணம் அல்லது உள்ளம்.

6. இது இயேசுநாதரைப் பற்றியது. வானம் - மேல் உலகத்தில் உள்ள தேவர். பூமி - பூமியில் உள்ள மக்கள். ஞானம் - மெய்யறிவு. நனி - மிக. ஊனம் - குற்றம். தீன ரட்சகன் - எளியாரைக் காப்பவன். பதம் - திருவடி. ஏத்துவாம் - துதிப்போம்.

## 2. நீதியுரைகள்

### 1. நல்வழி

சாதி இரண்டே

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. (1)

உயர்குடிப் பிறந்தார் இல்லையென்னார்

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (2)

உழவிற்கு ஒப்பில்லை

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (3)

அதிகம் செலவு செய்வோன் கதி

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு. (4)

ஈவோரே உற்றார்

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். (5)

—ஔவையார்

## 2. வாக்குண்டாம்

மானமுடையோர் பகைவருக்குப் பணியார்

உற்ற விடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். (6)

நல்லார் பொருட்டே மழைபெய்யும்

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (7)

உருவம்கண்டு இகழ்தல்ஆகாது

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா—கடல் பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும். (8)

அடக்கம் உடையார் அறிவிலர் ஆகார்

அடக்கம் உடையார் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு. (9)

மன்னனேவிடக் கற்றோன் சிறப்புடையன்

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பு. (10)

—ஔவையார்

1582—8

## 3. நன்னெறி

தீதற்ருேர் புகழ்கருதாமல் உதவுவர்

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்ருேர்—துன்றுசுவை
பூவின் பொலிகுழலாய் ! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து ? (11)

கூடிப் பிரியேல்

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலே போம். (12)

உயர்ந்தோர் பிறர்துன்பம் ஒழிப்பார்

தம்மையும் தங்கள் தலேமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும்செல் லாதோ கடல் ? (13)

கீழோர் பிறர்குற்றமே கூறுவர்

உண்டு குணமிங்(கு) ஒருவர்க்(கு) எனினும் கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்ருே
காக்கை விரும்பும் கனி. (14)

நல்லார் நட்புப் பயன்படும் ;
அல்லார் நட்புப் பயன்படாது

நல்லார் செயும்கேண்மை நாடோறும் நன்ருகும்
அல்லார் செயும்கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்ஞகிப் போம். (15)

—சிவப்பிரகாச சுவாமிகள்

## 4. திருக்குறள்

அறன் வலியுறுத்தல்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். (16)

செய்ந்நன்றி யறிதல்

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. (17)

அடக்கமுடைமை

யாகாவா ராயினும் நாகாக்க ; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (18)

ஒழுக்கமுடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் ; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (19)

பயனில சொல்லாமை

சொல்லுக சொல்லின் பயனுடைய ; சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல். (20)

ஈகை

நல்லா(று) எனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (21)

வாய்மை

எல்லா விளக்கும் விளக்கல்ல ; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (22)

கல்வி

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு ? (23)

கேள்வி

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (24)

அறிவுடைமை

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (25)

—திருவள்ளுவர்

## குறிப்புரை

1. ஒழிய - அல்லாமல். சாற்றுங்கால் - சொல்லுமிடத்து. நெறி - வழி. மேதினி - பூமி. இட்டார் - கொடுத்தவர். பட்டாங்கு - உண்மைநூல்.

2. பெருக்கு - வெள்ளம். உலகு - உலகில் உள்ளவர். ஊட்டும் - உண்பிக்கும். ஏற்றவர்க்கு - இரந்தவர்க்கு. நல்கூர்ந்தார் - வறியர். எனமாட்டார்-என்று சொல்லமாட்டார். இசைந்து- (கருத்து) இசைந்து.

3. வீற்றிருந்த - சிறப்போடு இருந்த. வாழ்வும் - வாழ்க்கையும். விழும் - அழிந்து போம். ஏற்றம் - உயர்வாகும். பழுது - அழிவு ; பயனில்லாமை. பணிக்கு - தொழிலுக்கு.

4. ஆன - தனக்குக் கிடைத்த. முதல் - முதற்பொருள். செலவு ஆனுன் - செலவுசெய்தவன். அழிந்து - கெட்டு. மதி - அறிவு. நாடு - ஆராய்ந்து அறிவாயாக.

5. கூவி - கூப்பிட்டு. இரந்து - வேண்டி. அங்கு - அம் மரத்தருகில். அமுதம் - பால். கற்ரு - கன்று ஆ - கன்றையுடைய பசு. கரவாது - ஒளிக்காமல். உற்ருர் - உறவினராவர்.

6. உற்ற இடத்தில் - (மானக்கேடு) வந்த இடத்தில். உயிர் வழங்கும் - உயிரை விடும். பற்றலர் - பகைவர். பணிவரோ - வணங்குவரோ (வணங்கார்). கற்றூண் - கல் தூண் - கற்கம்பம். இறுவது - முறிவது.

7. பொசியும் - கசிந்து ஊறும். தொல்உலகு - பழமையான உலகம். உளரேல் - இருப்பாராயின்.

8. தாழை மடல் பெரிது - தாழம்பூவின் இதழ் பெரியது (ஆனுல் அதன் வாசனை குறைந்தது.) மகிழ் கந்தம் இனிது - மகிழம்பூவின் (இதழ் சிறியது. ஆனுல் அதன்) வாசனை மிகவும் இனிமையானது. மண் நீரும் ஆகாது - (உடல் அழுக்கைக்)

கழுவும் நீரும் ஆகாது. சிற்றூறல் - சிறு ஊறல் - சிறிய ஊறல் நீர்.

9. அறிவு இலர் - அறிவு இல்லாதவர். கடக்க - வெல்ல. கருதவும் - நினைக்கவும். உறு மீன் - பெரிய மீன். வாடி இருக்கும்- சோர்ந்திருக்கும்.

10. மன்னன் - அரசன். மாசு அற - குற்றம் நீங்க கற்றோன் - படித்தவன். சீர்தூக்கின் - ஆராய்ந்தால். சிறப்பு - பெருமை.

11. முகமன் - உபசாரமொழி. இயம்பாதவர் - கூறுதவர். துன்று - அகப்பட்ட. சுவை - சுவையுடைய உணவை. பூவின் - பூவால். பொலி - விளங்கும். குழல் - கூந்தல். பூ கை - அழகிய கை. நயந்து - விரும்பி.

12. நீக்கம் - பிரிவு. புணர்ந்தாலும் - கூடினாலும். நொய்து - அற்பம். புல்லினும் - கூடினும். திண்மைநிலை - உறுதியான நிலைமை. போம் - கெட்டுப் போகும்.

13. இழியினும் - தாழ்ந்தவர்கள் ஆயினும். இடர் - துன்பம். அல்கு - சிறிய.

14. கீழ் - கீழோர். கொண்டு - எடுத்து. புகல்வது - பேசுவது. மலர் சேக்கை - பூ மெத்தை. பொழில்வாய் - சோலையில். கனி - பழம்.

15. கேண்மை - நட்பு ; சிநேகம். நல்லாய் - நற்குணம் உடையவளே. தீங்கனி - மதுரமாகிய பழம்.

16. ஒல்லும் வகையால் - செய்யக்கூடிய வகையால். அறவினை - அறச்செயல். செல்லும் வாய் எல்லாம் - செல்லும் இடம் எல்லாம். செயல் - செய்க.

17. நன்றி - நன்மை ; உதவி. நன்று அன்று - அறம் அன்று. நன்று அல்லது - தீமை.

18. யா - எவற்றை. காவார் - காக்கமாட்டார். காவாக்கால் - காப்பாற்றுவிட்டால். சோகாப்பர் - துன்பம் அடைவர். இழுக்குப் பட்டு - குற்றத்தில் அகப்பட்டு.

19. நன்றிக்கு - நல்வாழ்க்கைக்கு ; அறத்திற்கு. வித்து - ஆகும் - காரணம் ஆகும். என்றும் - எப்போதும். இடும்பை - துன்பம்.

20. பயன் உடைய - பயன் உடைய சொற்கள். சொல்லற்க- சொல்லாதிருக்கக் கடவர்.

21. நல் ஆறு - நல்ல வழி. கொளல் - வாங்கிக் கொள்ளுவது. தீது - தீமையானது. ஈதல் - கொடுப்பது. நன்று - நல்லது.

22. சான்றோர்க்கு- பெரியோர்க்கு. பொய்யா விளக்கு - பொய் சொல்லாமையாகிய விளக்கு.

23. யாதானும் - எதுவாயினும். நாடாம் - நாடு ஆகும். ஆல் - அசை. என் - ஏன். சாம் துணையும் - சாகும் வரையில்.

24. எனைத்தானும் - எவ்வளவு சிறிதே ஆயினும். அனைத்தானும் - அவ்வளவு ஆயினும். ஆன்ற - நிறைந்த.

25. என் உடையரேனும் - என்ன உடையவர் ஆயினும். இலர் - (ஒன்றும்) இல்லாதவரே ஆவர்.

## 3. சதகங்கள்

### கூடிற் பயன்படல்

செத்தைபல கூடிஒரு கயிருயின் அதுகொண்டு
திண்கரியை யுங்கட்டலாம்
திகழ்ந்தபல துளிகூடி ஆருயின் வாவியொடு
திரள்ஏரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூல் ஆயிடின்
உடுத்திடும் கலைஆக்கலாம்
ஓங்கிவரு கோலுடன் சீலையும் கூடினல்
உயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி(டு) உமிகூடின்
மல்குமுளை விளைவிக்கலாம்
மனம்ஒத்த நேயடுமாடு கூடிஒரு வர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றிபெறலாம்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
அமலனே அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர் (1)
அறப்பளீச் சுரதேவனே.

—அறப்பளீச்சுர சதகம்—அம்பலவாணக் கவிராயர்

## நல்லினம் சேர்பயன்

சந்தனவி ருட்சத்தை அண்டிநிற் கின்றபல
　　தருவும்அவ் வாசனைதரும் ;
தங்கமக மேருவைஅ டுத்திடும் காக்கையும்
　　சாயல்பொன் மயமேதரும் ;
பந்தமிகு பாலுடன்வி ரவியதண் ணீரெலாம்
　　பால்போல்நி றம்கொடுக்கும் ;
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
　　படியேகு ணம்கொடுக்கும் ;
அந்தமிகும் மரகதக் கல்லைத்த ரித்திடின்
　　அடுத்ததும் பசுமையாகும் ;
ஆனபெரி யோர்களொடு சகவாசம் அதுசெயின்
　　அவர்கள்குணம் வருமென்பர்காண் ;
மந்தரநெ டுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி
　　மருக! மெய்ஞ் ஞானமுருகா !
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
　　மலைமேவு குமரேசனே! (2)

—குமரேச சதகம்—குருபாத தாசர்

## இவர்க்கு இவைவேண்டாம் எனல்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
　　பெரியோரை முனிதல் வேண்டாம் ;
பின்ஒன்று முன்ஒன்று பேசியே அவமான
　　பேர்கொண்டு திரிதல் வேண்டாம் ;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சரை
　　ஒருநாளும் நம்பல் வேண்டாம் ;
ஒருவருக்(கு) இச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
　　ஊமைபோல் நிற்றல் வேண்டாம் ;
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
　　தாம்போய்வி லக்கல் வேண்டாம் ;

தைரியம் தனில்விக்ர மாதித்தன் என்னினும்
தம்மையே புகழல் வேண்டாம் ;
மற்றென்றும் எண்ணாது செய்யல்வேண் டாமென்பர் ;
மணவாள நாராயணன்
மனதில்உறை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே! (3)

—திருவேங்கட சதகம்—நாராயண பாரதியார்

## குறிப்புரை

1. திண்கரி - பலமுள்ள யானை. வாவி - தடாகம். கலை - ஆடை. சீலை - துணி. கவிகை - குடை. தண்டுலம் - அரிசி. மல்கும் - மிகுந்த. நேயம் - அன்பு. அற்ற கனியைப் பொருத்து - கீழே விழுந்த பழத்தை மறுபடியும் மரத்தில் பொருத்தி வைத்து. அரி - விஷ்ணு. அமலன் - பரிசுத்தமானவன். அருமைமதவேள் - அருமையான மதவேள் என்பவன். (இவன் மோழை என்னும் அரசன் பெற்ற மைந்தன். அம்பலவாணக் கவிராயருடைய உபகாரி. இச் சதகத்தின் பாட்டுடைத் தலைவன்). நினைதரு-நினைக்கின்ற. அறப்பளீச்சுரதேவன் - அறப்பளீச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்.

2. விருட்சம் - மரம். அண்டி - நெருங்கி. தரு - மரம். அடுத்திடும் - சேர்ந்துள்ள. வடம் - நூல் ; கயிறு. அந்தம் - அழகு. சகவாசம் - நட்பு. மந்தர நெடுங்கிரியின் - மந்தரம் என்ற பெரிய மலையை மத்தாகக் கொண்டு. கடல் கடைந்த - திருப்பாற் கடலைக் கடைந்த. அரிமருக - திருமாலின் மருகனே. குகனே - முருகனே. புல்வயல்நீடு - புல்வயல் பரந்த. மேவு - பொருந்திய.

3. முனிதல் - கோபித்தல். உற்றவர்கள் - நெருங்கியவர்கள்; உறவுமுறையானவர். உறை - வசிக்கின்ற. அலர்மேலு மங்கை - தாமரை மலர்மேல் வாழ்கின்ற திருமகள். மணவாளன் - கணவன். வரதன் - வரம் தருபவன்.

# 4. கதை

## 1. நண்டு கொக்கைக் கொன்ற கதை

(பஞ்ச தந்திரம்)

மீனென்றையு மேதின்றுடல்
மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பால்நண்டு
தனைக்கண்டிரை கொள்ள
ஞானம்தரு மோனங்கொடு
நண்ணும்படி கண்டப்
பால்நண்டிதை, "நீ இங்குறை
பண்பேதுரை ?" என்ன. (1)



"என்னென்றுரை செய்வேன் ? இனி
யான்எங்ஙனம் உய்வேன் ?
கொன்னும்திய வலைகாரர்கள்
கூடிக்குளம் ஏரி

மன்னும் தடம் எல்லாம்மிக
வளைத்தேவலை வீசிச்
சின்னஞ் சிறு பொடிமீன் முதல்
சேரப்பிடித் தாரே ;" (2)

" இந்தக்குளம் நாளைக்கென
எண்ணிக்கொடு போனர் ;
அந்தப்படி வந்தேபிடித்(து)
அவர்காவில் எடுத்தே,
சந்தக்கடை தொறும்மீன்கடை
தானேஎன விற்பார்;
எந்தப்படி இவர் தப்புவ(து) ?
எனஎண்ணி இருந்தேன்." (3)

" அந்தப்பழி காரர்வரும்
முனமேயோர் உபாயம்
சிந்தித்தனன் நான்;அப்படிச்
செய்தால் அவைஉய்யும் ;
எந்தப்படி யானும்அழைத்(து)
இங்கேவரு வாயேல்,
இந்தக்குளம் விட்டோர்குளம்
எய்தும்படி செய்வேன்," (4)

என்றேபக ராசன்சொல,
இயல்நண்(டு)அதை நம்பிச்
சென்றேபல மீனேடுரை
செயவே,அவை கூடி,
நன்றேஎன வரஒவ்வொரு
நடைக்கொன்றுகொண் டேகிக்
கொன்றேசில தின்றேசில
கொடும்பாறையில் உலர்த்தி, (5)

அலவன்தசை தனைஉண்டிட
அதையும்கொடு செலஅந்
நிலம்எங்கணும் மீன்என்புகள்
நிறைகொண்டது கண்டே,
" நலதிங்கிது பலமீனையும்
நனிதின்றது ; நமையும்
கொலவந்தது ; நாமும்இது
கொலுமுன்கொலு வோமே;" (6)

" நம்மால்வரு பிழையேஇது;
நாமும்அந்த மீன்போல்
சும்மாஇருந் தனமேல்கொலும் ;
அதிலேஒரு சூழ்ச்சி
எம்மால்வகை வருமாறினிச்
செய்வேம்" என எண்ணி,
அம்மா!பகன் கழுத்தைக்கவை
அடியால்நெருக் கியதே ; (7)

நெருக்குண்டற வீழ்ந்தேகொக்கு
நீங்கிற்றுயிர்; அலவன்
இருக்கும்தலம் ஏகித்தன(து)
இனத்தோடிருந் ததுவே;
செருக்கும்பகை பெரிதாகிலும்
சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைந்தால் அதின்
முடியாததும் உளதோ? (8)

—வீரமார்த்தாண்ட தேவர்

அருஞ்சொற்பொருள்

1. ஒரு பால் - ஒரு பக்கம். இரை - உணவாக. ஞானம் - மெய்யுணர்வு. மோனம் - மௌனம். உறை - வாழ்கின்ற. பண்பு- தன்மை.


1
2
3
4
A.S.R.

2. உரை செய்வேன் - சொல்வேன். உய்வேன் - பிழைப்பேன். கொன்னும் - மிகவும். திய - தீய; கொடிய. மன்னும் - நிலை பெற்ற. தடம் - தடாகம்; குளம். சின்னஞ்சிறு - மிகச்சிறு.

3. எண்ணிக்கொடு - எண்ணிக்கொண்டு. காவில் - காவடியில். சந்தக்கடை - சந்தைக்கடை.

4. முனம் - முன்பு. உபாயம் - தந்திரம். சிந்தித்தனன் - எண்ணினேன். உய்யும் - பிழைக்கும். எந்தப்படியானும் - எப்படியாவது. எய்தும்படி - அடையும்படி.

5. பகம் - கொக்கு. பகராசன் - கொக்குகளின் அரசு.

6. அலவன் - நண்டு. தசை - இறைச்சி; மாமிசம். கொடுசெல - கொண்டுபோக. என்புகள் - எலும்புகள். நனி - மிகவும்.

7. கவை - பிளவுபட்ட.

8. தலம் - இடம். ஏகி - சென்று. இனம் - கூட்டம். செருக்கும் - கர்வம் கொள்ளும். முருக்கும்படி - அழிக்கும்படி.

## 2. நரி நான்கு உபாயம் செய்த கதை

### பஞ்சதந்திரம்

இறந்த யானையைத் தின்னவோர் இகலனங் கெய்தச்
சிறந்த சிங்கமொன் றடைந்துநீ யாரெனச் சிறியேன்
மறங்கொள் நீகொன்ற யானையைக் காத்திங்கு வதிந்தேன்
அறம்த வாச்சிங்க அரசனே என்றதந் நரியே. (1)

ஈது நான்கொன்ற தன்றுநீ கொள்களன் றிசைத்துப்
போத மற்றொரு புலிவந்து யார்என நரியார்
மாது லாஇதை மடித்தகே சரிஒன் றங் குளதால்
ஓது வேங்கைஇங் குறில்எனக் குரைஎன ஒளித்தே. (2)

என்ன காரணம் அதற்கெனில் வேங்கைஒன் றெய்தி
முன்னொர் யானையைக் கொன்றுதான் மூழ்கப்போம் காலைத்
துன்னி எச்சில்ஆக் கியதெனச் சொல்லலும் வேங்கை
பின்னர் எண்ணியே மருமக னேநின்றற் பிழைத்தேன். (3)

என்று சொல்லிமுன் ஓடிய திதன்பினேர் குரங்கு
துன்ற நோக்கிஇக் கரியினைத் துண்ணெனக் கிழித்துத்
தின்று போஎனக் குரங்கதைக் கிழித்தது சிங்கம்
நன்று வந்ததென் றுரைத்திட நடுங்கிஓ டியதே. (4)

பக்கு வம்செய்து குரங்குபோ தலும்நரி பார்த்துத்
தக்க தென்றுணப் போம்பொழு தொருநரி சார்ந்து
கைக்கொ ளற்கெண அதைஅடித் தோட்டியே கடிதில்
தொக்க வெம்பசி தொலைந்திட உண்டது நெடுநாள். (5)

(இவ்வாறு சாம பேத தான தண்டம் என்ற நான்கு உபாயங்களால் நரி தீமை நீங்கியது.

—வீரமார்த்தாண்ட தேவர்

அருஞ்சொற்பொருள்

1. இகலன் - நரி. மறம் - வீரம். வதிந்தேன் - இருந்தேன். தவா - கெடாத.

2. இசைத்து - கூறி. போத - செல்ல. மாதுலா - மாமா. மடித்த - கொன்ற. கேசரி - சிங்கம். ஓது - கூறப்படும். வேங்கை - புலி. உறில் - அடைந்தால். உரை - கூறு.

3. எய்தி - அடைந்து. துன்னி - அடைந்து.

4. துன்ற - அடைய. துண்என - விரைவாக.

5. சார்ந்து - அடைந்து. எண - எண்ண; நினைக்க. கடிதில் - விரைவாக.

(சாமம் - இன்சொல். பேதம் - பிரித்தல். தானம் - ஈதல். தண்டம் - அடித்தல்; தண்டித்தல்.)

## 5. நாட்டுப் பாடல்

### மோவுத்துக்காரன் வெற்றி பெற்று வஞ்சகத்துக்குள்ளாதல்

"சலாமையா ! சலாமையா ! மோவுத்துக் காரனே !
அறியாமல் சண்டைக்கு வந்தே ஊனயா ! மோவுத்துக்
காரனே !
என்தலையைக் கார்க்க வேணு மையா! மோவுத்துக் காரனே !
தெய்வமும் நீரே ! தேசிகரும் நீரே ! மோவுத்துக் காரனே !
அடிமை யென்னை ஆதரிக்க வேண்டும் ! மோவுத்துக்
காரனே !
என்று வணங்கி சலாம்செய்தான் ஷேக்முகம் மதையா !
அந்தப் பேச்சைக் காதிலே கேட்டான் மோவுத்துக் காரனும்;
பகையாளி, சண்டைக்கு வந்தால் பாலன் விடுவேனு ;
ஈட்டி யெறிந்த கையை இப்போ என்னிட வாளாலே
கண்ட துண்டமாய் வெட்டி யெறிந்தான் மோவுத்துக் கார
கத்தி பிடித்த சிப்பாய் மார்களைக் கரணையாடி வாரான் [னும்;
சலாம்வாங்கின சிப்பாய் மார்களை ஓடிப் போகச் சென்னுன்;
பதினெட்டு வயது பால ஊனயா மோவுத்துக் காரனும் ;
ஒருக்காலமும் சண்டை யறியான் மோவுத்துக் காரனும் ;
கைக ளெல்லாம் ஓய்ந்து போச்சு மோவுத்துக் காரனுக்கு ;
இரத்த கவலு கவ்விக் கொண்டது மோவுத்துக் காரனுக்கு ;
களைகள் வந்து மூண்டு கொண்டது மோவுத்துக் காரனுக்கு;
ராசாவிடம் போகலா மென்று குதிரையைத் திருப்பி னுனும் ;
சந்தோஷ மாகத் திருப்பினு ஊனயா மோவுத்துக் காரனும் ;
பரத நாட்டிய மாடி வருகுது நீலவேணி குதிரை ;
இராசா முன்னுக்கு வாரா ஊனயா மோவுத்துக் காரனும் ;
அந்த வேளைக்குப் பதுங்கி யிருந்தார் தப்பின குண்டுக்காரர்;
இரட்டைக் குண்டு பார்பண்ணி படுக்கென்று சுட்டாராம் ;
படுக்கென்ற சத்தம் திரும்பிப் பார்த்தான் மோவுத்துக் கார
[னும்

அந்தக் குண்டு நெற்றியில் பட்டது மோவுத்துக் காரனுக்கு ;
அல்லாரே அல்லாரே அல்லாரே யென்று கீழே விழுந்தானும்;
அரிகோ விந்தா என்று சொல்லி கீழே விழுந்தானும் ;
வைகுந்த பதவி சேர்ந்தா னையா மோவுத்துக் காரனும்.

மோவுத்துக்காரன் இறந்ததைப் பார்த்து
தேசிங்குராஜன் விசனப்படல்

மோவுத்துக் காரன் முன்னே வந்தான் ராஜா தேசிங்கு ;
மண்டி போட்டு உட்கார்ந்தா னையா ராஜா தேசிங்கு ;
வாரி யெடுத்து மடிமீதில் வைத்தான் ராஜா தேசிங்கு ;
முகத்தோ டேமுகம் வைத்தா னையா ராஜா தேசிங்கு ;
கோடுகோ டென்று கதறி யழுதான் ராஜா தேசிங்கு ;
"என்னை விட்டுநீ எப்படிப் போனாய், மோவுத்துக் காரனே!
எனக்கு நல்லஇடந் தேடி வையும் மோவுத்துக் காரனே !
நவாப்பை வெட்டி நானும்வருகிறேன் மோவுத்துக் காரனே!"
தனக்குத் தானே தைரிய மானான் ராஜா தேசிங்கு ;
பெரிய குழியாய் வெட்டச் சொன்னான் ராஜா தேசிங்கு ;
லட்சம் பொன்னு தானங் கொடுத்தான் ராஜா தேசிங்கு ;
குழியில் தூக்கி வைத்தா னையா மோவுத்துக் காரனை !
மண்டி போட்டு படுத்தது பாரு நீலவேணி குதிரை ;
பட்டா உருவி கையிலே பிடித்தான் ராஜா தேசிங்கு ;
இரண்டுதுண் டாகத் தீர்த்தா னையா ராஜா தேசிங்கு.

மோவுத்துக்காரனையும் அவன் குதிரையையும் புதைத்தல்

குதிரையைக் கூடப் புதைத்தா னையா ராஜா தேசிங்கு ;
பெரிய கோரி கட்டச் சொன்னான் ராஜா தேசிங்கு.

—தேசிங்குராஜன் கதை—புகழேந்திப் புலவர்

அருஞ்சொற்பொருள்

தேசிகர் - குரு. பாலன் - சிறுவன். சிப்பாய்மார் - வீரர். கவனு - நாற்றம். கவ்விக்கொண்டது - சூழ்ந்துகொண்டது. வைகுந்தபதவி சேர்ந்தான் - இறந்தான். பட்டா - கத்தி. கோரி - மசூதி.

## 2. அருச்சுனன் அல்லியார்க்குத் தன் கதை சொல்லல்

ஆனால் அழகுமன்னன் அல்லியர்க்குக் கதைஉரைப்பான் :
குருகுல வங்கிஷமாம் குந்திமக்கள் ஐந்துபேராம் ;
துருவாசர் மந்திரத்தால் துலங்கவந்த நவமணிகள் ;
சந்திர குலம்விளங்கத் தருமரவர் ஐந்துபேர்கள் ;
பாண்டுராசன் பெற்றெடுத்த பஞ்சவர்கள் ஐவருண்டு ;
தருமருக்கு நேரிளையான் தாக்குடைய வீமராசன் ;
வீமனுக்கு நேரிளையான் வில்வாங்கும் அருச்சுனன்காண் ;
நெருப்பில் பிறந்ததொரு நேரிழையாள் துரோபதையை
எட்டாத வில்வளைத்து இளங்கொடியை மாலையிட்டான் ;
மீசை முறுக்கழகன் ; விழியிலே கறுப்பழகன் ;
நாவுதனில் நட்சத்திரம் ; நயவிழிப் பார்வையுள்ளான் ;
தோளிலே துளசிமாலை ; தொப்புளிலே அமுர்தகலசம் ;
பல்லிற் பரசவீணை ; பாதத்திற் செந்தாமரை ;
முதுகிலே மச்சரேகை ; முழங்காலில் மாணிக்கம் ;
முன்னிலும் பின்னழகன் ; மோககன்னி மணவாளன் ;
பின்னிலும் முன்னழகன் ; பெண்களுக்கு மணவாளன் ;
அருச்சுனனைப் போலே அழகுடையார் யாருமில்லை ;
திக்குநல்ல பாலகரை ஜெயம்பண்ணும் சேவகன்தான்.

அல்லியரசாணி மாலை—புகழேந்திப் புலவர்

அருஞ்சொற்பொருள்

வங்கிஷம் - வம்சம். துலங்க - விளங்க. பஞ்சவர்கள் - ஐந்துபேர்கள். நேர் - ஒத்த. இழை - ஆபரணம். மச்சம் - மீன். ஜயம் - வெற்றி.

## 6. இயற்கைக் காட்சிகள்

### இளங்கதிர் எழுச்சி

இளங்கதிர் எழுந்தான் ; ஆங்கே
    இருளின்மேல் சினத்தை வைத்தான் ;
களித்தன கடலின் புட்கள் ;
    எழுந்தன கைகள் கொட்டி !
ஒளித்தது காரி ருள்போய் !
    உள்ளத்தில் உவகை பூக்க
இளங்கதிர் பொன்னி றத்தை
    எங்கணும் இறைக்க லானன். (1)

—அழகின் சிரிப்பு—பாரதிதாசன்

### பயன்தரும் காடு

ஆடிய கிளைகள் தோறும்
    கொடிதொங்கி அசையும் ! புட்கள்
பாடிய படியி ருக்கும் !
    படைவிலங்(கு) ஒன்றை ஒன்று
தேடிய படிஇ ருக்கும் !
    காற்றோடு சருகும் சேர்ந்து
நீடிசை காட்டா நிற்கும் ;
    பயன்தந்து நிற்கும் காடே. (2)

—அழகின் சிரிப்பு—பாரதிதாசன்

### மலர்கள்

வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம்—நல்ல
    வாசனை வீதியில் வீசிநிற்போம் ;
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
    உட்காரப் பீடமும் இட்டுவைப்போம் ;
மந்தைய ரோடு குமரரையும்—மனம்
    வாய்த்த மணம்செய்து வாழவைப்போம் ;

தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
　　தாழ்ந்து வணங்க மேல்தந்திடுவோம் ;
ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
　　ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம் ;
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
　　பொங்கு களிப்பெணம் காட்டிநிற்போம். (3)

—கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

அருஞ்சொற்பொருள்

1. இளங்கதிர் - இளஞ்சூரியன் ; உதயசூரியன். எழுந்தான் - உதயமானன். சினம் - கோபம். புட்கள் - பறவைகள். காரிருள் - கரிய இருள்.

2. விலங்கு - மிருகம். இசை - ஒலி ; ராகம்.

3. மது - தேன். பூசனை - பூசை. எணம் - எண்ணம்.

## 7. தனிப் பாடல்கள்

மலைநாடு முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடியது

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. (1)

—ஔவையார்

தில்லை நடராசப் பெருமானைப் பாடியது

நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால்; ஐயாநின்
ஆட்டுக் கிரண்டுகால்; ஆனாலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேஇவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி. (2)

—காளமேகப் புலவர்

பிரயாணத்தில் கட்டுச் சோற்றைப்
பறிகொடுத்துப் பாடியது

சீராடை அற்றிடும் வைரவன் வாகனம் சேரவந்து
பாராரும் நான்முகன் வாகனம் தன்னைமுன் பற்றிக்கௌவி
நாரா யணனுயிர் வாகனம் ஆயிற்று; நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினில் பற்றினனே. (3)

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

தன் குற்றத்திற்கிரங்கிப் பாடியது

கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்;
காடெறியும் மறவனைநா டாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானைப் புலியே(று) என்றேன்;
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல்தோளை;
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்(கு) இல்லை என்றான்;
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே. (4)

—இராமச்சந்திரக் கவிராயர்

### அருஞ்சொற் பொருள்

1. வேழம் - யானை. மலைநாடு - சேரநாடு. மேதக்க - மேன்மை பொருந்திய. பூழியர்கோன் - பாண்டியர் அரசன். தென்நாடு - பாண்டி நாடு. சான்றோர் - பெரியோர் ; கல்வி, கேள்வி அறிவு ஒழுக்கம் இவற்றில் நிறைந்தோர்.

2. ஆட்டுக்கு - ஆடு ஆகிய பிராணிக்கு. ஆட்டுக்கு - ஆட்டத்திற்கு. நாட்டம் - நட்டம் ; நடனம் ; கூத்து. சீர் - சிறப்பு ; மேன்மை. தில்லை - சிதம்பரம். ஆட்டை - ஆட்டத்தை. புலி - புலிக்கால் முனிவர் ; வியாக்ரபாதர்.

3. ஆடை - துணி. வைரவன் - பைரவமூர்த்தி. வைரவன் வாகனம் - நாய். நான்முகன் வாகனம் - அன்னம். அன்னம் - சோறு. நாராயணன் வாகனம் - பருந்து. பருந்து ஆயிற்று - பருந்து போல் பறந்து போயிற்று. மை - ஆடு. மை வாகனன் - அக்கினி ; நெருப்பு. நெருப்பு - பசி நெருப்பு ; மிக்க பசி. நாய் சோற்று மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது ; அதனால், பசி மிகுந்தது என்ற பொருள் காண்க.

4. காடு எறியும் - காட்டை வெட்டி அழிக்கும். மறவன் - காட்டுக்காரன். புலி ஏறு - ஆண் புலி. மல் - மற்போர் ; தோள் முட்டிச் சண்டை செய்தல். புயம் - தோள். சூம்பல் - சுருங்குதல் ; மெலிதல். வள்ளல் - கொடையாளி.

## செய்யுட் பகுதி

### கேள்விகள்

1. ஔவையார் கரிமுகனை என்ன என்ன வேண்டுகிறார்? யாது தருவதாகக் கூறுகிறார்?

2. கலைமகள் எங்கே எங்கே இருப்பதாகப் பாரதியார் குறிப்பிடுகிறார்?

3. திருவேதிகுடி ஐயனைத் திருநாவுக்கரசர் எவ்வாறு வருணித்துள்ளார்?

4. தாயுமானவர் மன்றுள் ஆடியை வேண்டுவது யாது?

5. எப்படிப்பட்டவனுடைய கழலைக் காண நம்மாழ்வார் கருத்துக் கருதுகிறது?

6. தீனரட்சகன் என்ன என்ன அமையத் தோன்றினன் எனக் கிருஷ்ணபிள்ளை உணர்த்துகிருர் ?

7. சாதி எத்தனை? அவற்றைச் சார்ந்தவர் எத் தன்மையவர் ?

8. யார், வறியராஞலும் இல்லை என்ஞர் ? எதுபோல ?

9. மற்றத் தொழில்களைவிட உழவே உயர்ந்தது என்பது எவ்வாறு ?

10. அதிகம் செலவு செய்பவன் என்ன என்ன தீமை அடைவான் ?

11. எப்படிப்பட்டவர் உற்ரு ராவர் ?

12. மானமுடையோர் எவ்வாறு கல் தூணுக்கு ஒப்பாவார் ?

13. நல்லார் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்யும் என்பதை விளக்கும் உதாரணம் யாது ?

14. 'உடல் சிறியர் என்றிருக்க வேண்டா' என்பதை விளக்கும் உதாரணங்கள் யாவை ?

15. கொக்கின் அடக்கம் விளக்கும் கருத்து யாது ?

16. மன்னனை விடக் கற்ரேன் எவ்வாறு சிறப்புடையன் ?

17. கைபோன்றவர் தீதற்ரேர் என்பது எவ்வாறு ?

18. 'கூடிப் பிரியேல்' என்ற கருத்தை விளக்கும் நன்னெறியின் பாடற் பொருளைத் தருக.

19. கடலானது கழியிற் செல்வது போல உயர்ந்தோர் யாது செய்வர் ?

20. கீழோர் இயல்பு யாது? எது போல ?

21. காய் முற்றின் என் ஆம்? தளிர் முற்றின் என் ஆம் ?

22. எதை மறத்தலாகாது? எதை மறத்தல் வேண்டும் ? இவற்ருல் விளக்கப்பட்ட கருத்துக்கள் யாவை ?

23. சான்ரேர்க்கு விளக்காவது யாது ?

24. சாந்துணையும் ஏன் கற்றல் வேண்டும் ?

25. எல்லாம் உடையார் யார் ? ஒன்றும் இல்லாதவர் யார் ?

26. எவ்வெவை கூடின் என்னென்ன பயன் ஆம் ?

27. எவ்வெவை எவ்வெவற்றைச் சேர்தலால் நற் பயன் பெறும் ?

28. என்ன என்ன செய்தல் ஆகாது ?

29. நண்டு கொக்கை ஏன் எவ்வாறு கொன்றது ?

30. நரி மேற்கொண்ட உபாயங்கள் யாவை? அவற்றை அஃது எங்ஙனம் மேற்கொண்டது?

31. மோவுத்துக்காரன் எவ்வாறு இறந்தான்? அவன் இறந்ததைத் தேசிங்கு எவ்வாறு அறிந்தான்? அறிந்தபின் அவன் செய்தது யாது?

32. அருச்சுனன் தன் வரலாற்றை அல்லியார்க்கு எவ்வாறு உணர்த்தினான்?

33. சூரிய உதயம், காடு, மலர்கள் இவற்றின் இயற்கைக் காட்சிகளை வருணிக்க.

34. நால்வகைத் தமிழ் நாடுகளின் சிறப்புக்கள் யாவை?

35. நடராசப் பெருமான் கூத்தைக் காளமேகப் புலவர் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?

36. கட்டுச்சோற்றைப் பறி கொடுத்ததை வீர ராகவமுதலியார் எவ்வாறு உணர்த்தியுள்ளார்?

37. இராமச்சந்திரக் கவிராயர் தம் குற்றத்தை எவ்வாறு உணர்ந்ததாகக் கூறுகின்றார்?

139669



# ENGAL TAMIL VACHAKAM

BOOK VI

FOR FORM I & STANDARD VI

BY

M. A. DORAI RANGASWAMY, M.A., M.O.L.

AND

R. SRINIVASAN, M.A.

VINDHYA PUBLICATIONS

VEPERY : : MADRAS

*Copyright*] 1951 [*As.* 15